பாகனேரி, த. வை. இ. தமிழ்ச்சங்க வெளியீடு - ௪௦

ஓம்

பதினெண் கீழ்க்கணக்குகளில்
ஒன்றாகிய

# நாலடியார்

மறைமலையடிகள் மாணவரும், சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகத் தமிழ்ப்புலவரும்
ஆகிய
திரு தி. சு. பாலசுந்தரம் பிள்ளை அவர்கள் (இளவழகனார்)
இயற்றிய

பொழிப்புரையுடன்

கிடைக்குமிடம்
திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி
சித்திரபானு ஐப்பசி

பாகனேரி, தனவைசிய
இளைஞர் தமிழ்ச் சங்க வெளியீடாகத்
திருவாளர்
**வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியாரவர்கள்**
பொருளுதவியால் வெளியிடப்பெற்றது.

---

இவ்வெளியீட்டினால் கிடைக்கப்பெறுகிற
சிறிய ஊதியமட்டும்
இச் சங்கத்தின் மேற்பார்வையிலுள்ள
**திருவள்ளுவர் நூல் நிலையத்திற்கு**
உரிமையாக்கப்பெறும்.

என்

அருமை அன்னையார்

திருவாட்டி

**வள்ளியம்மை ஆச்சி அவர்களின் நினைவுக்காக**

இஃது

அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பதிப்புரை

" ஆலும் வேலும் பல்லுக் குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்னும் பழமொழியினால், 'நால்' என்னும் நாலடியாரும் இரண்டு என்னுந் திருக்குறளும் தமிழ்மொழியில் உறுதியான அறநூல்களாய்த் திகழ்கின்றன என்று தெரிகின்றது. அவற்றுள், நாலடியார், திருக்குறளுக்குமுன் பயில வேண்டிய இயைபுடையது.

இந்நூலைப் பொருள் விளக்கத்திற் கேற்றபடி சந்தி பிரித்துத் தெளிவான பொழிப்புரையோடு திருத்தமாகப் பதிப்பிட்டு வழங்கவேண்டுமென்று நெடுநாட்களாக ஒரு நினைவிருந்தது. 'நாலடியார் பொழிப்புரை' என இம் முறையில் இதுகாறும் நூல் வெளிவரவில்லை.

நான் விரும்பிக் கேட்டுக்கொண்டபடி தம் கழகத் தமிழ்ப் புலவர் திருவாளர் இ௱வழகனு ரவர்களைக் கொண்டு இதற்கு விளக்கமான பொழிப்புரை எழுதுவித்து, வழக்கம்போல் இப் பதிப்பினையும் அழகாக அச்சிட்டு வெளிப்படுத்தி விற்பனை செய்து தர ஏற்றுக்கொண்ட திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்பர்கள் இப் பதிப்பினையும் மிகுதியாக வாங்கிப் போற்றி எனக்கு மேலுமேலும் ஊக்கம் அளித்துவருவார்களென்று நம்புகின்றேன்.

மு. காசிவிசுவநாதன்.

# பொருளடக்கம்

## க. அறத்துப் பால்


| | | பக்கம் |
|---|---|---|
| | கடவுள் வாழ்த்து | |
| 1. | செல்வ நிலையாமை ... | 1 |
| 2. | இளமை நிலையாமை ... | 5 |
| 3. | யாக்கை நிலையாமை ... | 9 |
| 4. | அறன்வலியுறுத்தல் ... | 13 |
| 5. | தூய்தன்மை ... | 17 |
| 6. | துறவு ... | 21 |
| 7. | சினமின்மை ... | 25 |
| 8. | பொறையுடைமை ... | 29 |
| 9. | பிறர்மனை நயவாமை ... | 33 |
| 10. | ஈகை ... | 37 |
| 11. | பழவினை ... | 40 |
| 12. | மெய்ம்மை ... | 44 |
| 13. | தீவினையச்சம் ... | 48 |


## உ. பொருட்பால்


| | | |
|---|---|---|
| 1. | கல்வி ... | 52 |
| 2. | குடிப்பிறப்பு ... | 56 |
| 3. | மேன்மக்கள் ... | 60 |
| 4. | பெரியாரைப் பிழையாமை ... | 64 |
| 5. | நல்லினஞ் சேர்தல் | [illegible] |
| 6. | பெருமை | |

| | | பக்கம் |
|---|---|---|
| 7. | தாளாண்மை | ... 75 |
| 8. | சுற்றந்தழால் | ... 79 |
| 9. | நட்பாராய்தல் | ... 82 |
| 10. | நட்பிற் பிழைபொறுத்தல் | ... 86 |
| 11. | கூடாநட்பு | ... 90 |
| 12. | அறிவுடைமை | ... 94 |
| 13. | அறிவின்மை | ... 98 |
| 14. | நன்றியில் செல்வம் | ... 102 |
| 15. | ஈயாமை | ... 105 |
| 16. | இன்மை | ... 110 |
| 17. | மானம் | ... 113 |
| 18. | இரவச்சம் | ... 117 |
| 19. | அவையறிதல் | ... 121 |
| 20. | புல்லறிவாண்மை | ... 126 |
| 21. | பேதைமை | ... 130 |
| 22. | கீழ்மை | ... 134 |
| 23. | கயமை | ... 137 |
| 24. | பன்னெறி | ... 141 |
| 25. | பொதுமகளிர் | ... 145 |
| 26. | கற்புடை மகளிர் | ... 149 |


## ௩. காமத்துப் பால்


| | | |
|---|---|---|
| ௧. | காம நுதலியல் | ... 154 |
| | பாட்டு முதற்குறிப்பகராதி | ... 161 |

# முன்னுரை

அறிவு கனிந்த நறுநூல் ஒவ்வொன்றும், அதன் பழுத்த பொருளாலுஞ் சுவைத்த சொல்லாலும் இனித்த அழகாலும், ஒவ்வோர் அரிய பூம்பொழிலென்றே கூறலாம். நூலின் உட்பிரிவுகள் அப் பொழிலின் மரஞ் செடி கொடிகளாகவும், அதன் செய்யுட்கள் அவற்றின் விழுப்பயன்களாகவும் விளங்கி, மக்கட்கு வற்ருத இன்பம் வழங்கி வருகின்றன. தமிழ் மொழி என்னுங் கொழுவிய மாநிலத்தில் இங்ஙனஞ் செழுமை யாய் வளர்ந்திருக்கும் அழியாப் பெரும்பொழில்கள், காண் டற்கும் பயிறற்கும் இனியவாய்ப், பல விளங்குகின்றன. அவற் றுள் 'நாலடியார்' என்னும் இக் கனி மரக்காவும் ஒன்ருகும்.

தமிழ்மொழியில் வழங்கும் 'மேற்கணக்கு', 'கீழ்க் கணக்கு' என்னும் பிரிவில், நாலடியார் கீழ்க்கணக்கு வகை யிற் சேர்ந்து, அவற்றுள் முதல்நூலாய்த் திகழ்கின்றது. இவ் வுண்மை,

> "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
> பால்கடுகங் கோவை பழமொழி—மாமூலம்
> இந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பதூஉங்
> கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்னும் பழைய வெண்பாவினுல் விளங்குகின்றது. 'கணக்கு' என்னுஞ் சொல் பழைய நாளில் 'நூல்' என்னும் பொருளில் வழங்கிவந்திருக்கின்றது. 'நாழிகைக் கணக்கர்', 'சமயக் கணக்கர்', 'கணக்காயர்', 'கணக்கினை முற்றப் பகலும் முனியாது இனிதோதிக் கற்றலினுங் கேட்டலே நன்று'

என்னும் வழக்குகளால் இதன் சொற்பொருள் இதுவாதல் துணியப்படும். 'மேற்கணக்' கென்பது, அகவல், கலிப்பா, பரிபாடல் என்னும் அடிகள் மிகுந்த பெரிய பாடல்களால் ஆனநூல். 'கீழ்க்கணக்' கென்பது 'வெண்பா' என்னும் அடிகள் குறைந்த சிறிய பாடலால் ஆன நூல். முன்னோர் இவ்வாறு அடிகள் வரையறையால் நூல்களை வகுத்து வழங்கிவந்திருக்கின்றனர். தொகையாகச் சில நூல்களைத் தொகுத்துக் காட்டுதற்கு, 'இவை மேற்கணக்குகள், இவை கீழ்க் கணக்குகள்' என்னும் இப் பிரிவு நலந் தருகின்றது. இவ்வியல்பு,

"அகவலும் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறு
மிகுத்துடன் தொகுப்பது **மேற்கணக்கு**"

எனவும்,

"வெள்ளைத் தொகையும் அவ்வகை எண்பெறின்
எள்ளறு **கீழ்க்கணக்கு**"

எனவும் வருகின்ற நூற்பாக்களால் அறிந்துகொள்ளப் படும். இதனால், 'மேல்' 'கீழ்' என்னும் அடைமொழிகள் 'பல அடிகள்' 'சில அடிகள்' என்னுங் கருத்தாற் 'பல' 'சில' என்னும் பொருளில் வருகினறனவே யல்லால், 'உயர்வு' தாழ்வு' என்னும் பொருளில் வந்திலாமை கருத்திற் பதித்தல்வேண்டும்.

இந்நூல், நான்கடிகளுடைய வெண்பாவினால் இயன்று நானூறு பாடல்கள் வாய்ந்திருத்தலின், 'நால்' எனவும், 'நாலடி'. 'நாலடியார்' எனவும், 'நாலடி நானூறு' எனவும் வழங்கப்பட்டு வருகின்றது. இனி, இதன் நானூறு வெண்பாக்களுந் தமிழினிமையிற் பெரிது பழகிய நானூறு முனிவரால் ஒவ்வொரு வெண்பாவாக இயற்றப்பட்டன என்பாரும்,

அன்று, ஒருவரே இயற்றினர் என்பாருமாக இதன் ஆசிரியர் திறத்திற் கருத்து வேற்றுமை நிலவுகின்றது. பழந்தமிழ்க் காலத்தில் இத் தமிழ்நிலத்தில் இயற்கையே தமிழராய்ப் பிறந்து தம் வாழ்நாள் முழுமையுந் தமிழ் மரபிற் பழகிய தமிழாசிரியரே இந் நூற் செய்யுட்களை யாத்திருக்கவேண்டு மென்னும் ஓர் உண்மை தவிர, இதன் ஆசிரியரைப் பற்றி வேறேதுந் துணி தற்குரிய தெளிந்த அகச்சான்றுகள் இந்நூலில் யாண்டுங் காணப்படவில்லை.

இனி, நாலடியாரென்னும் இவ் விழுமிய நூல் பண் டைக்காலத்திலிருந்தே 'திருக்குற' ளோடு சேர்ந்த அருமை பெருமையில் வைத்து அனைவரானும் பாராட்டப்பெற்று வரு கின்றது. பொருள்வளத்தினும் நுணுக்கத்தினுந் திருக்குறள் இந் நாலடியாரினும் விஞ்சிப் பெருநலம் பயப்பதாயினும், இதன் சொல்வளம், சுவை தெரிந்து பழகுவார்க்குப் பேரி னிமை கனிந்த தேனூறலாகவே ஒழுகாநிற்கின்றது. "நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" "பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்" "சொல்லாய்ந்த நாலடி நானூறு" "பழு திலா நாலடி" எனவெல்லாம் முன்னோர் இந் நூல் நடையில் நன்கு பழகி இதன் விழுப்பத்தைத் திருக்குறட் பெருநூலோடு சேர்த்து மகிழ்வுடன் பாராட்டியிருக்கின்றனர். இந் நலன் அறிந்தே இளம்பூரணர், சேனாவரையர், பரிமேலழகர், நச்சி னார்க்கினியர் முதலிய நல்லிசை யுரையாசிரியர் பலரும் இதனை மேற்கோள் நூலாக எடுத்து அங்கங்கும் வழங்கிவருவா ராயினர்.

'நாலடியார்' அறம் பொருள் இன்பம் என்னும் முப் பால் நுவலும் ஓர் அறநூல். இதன்கண் இன்பப்பால் போதிய அளவு கூறப்படவில்லை. ஏனைப் பொருள் அற ஒழுக்கங்கள் தக்க அளவில் உரைக்கப்பட்டிருப்பினும், முடிந்த உண்மைகள்

வரையில் விளக்கப்படவில்லை. ஆயினும், எடுத்துக் காட்டிய வரையிற் கருத்துக்கள் மெய்ம்மை கனிந்து, இனிய எளிய உவமை முதலிய அணிகளாற் கவின்மிக்கு, மக்கள் இம்மை மறுமை வாழ்க்கைகளிற் சிறந்து வருதற்கான இயல்நலமுடையனவா யிருக்கின்றன. முடிந்த அறவாழிப் பெருநூலாகிய திருக்குறளொடு திளைத்து இன்புற்று அதன் கரைகாண்டற்கு, இந் நாலடியார் ஓர் ஊறற்ற வலிய கலமாக நின்று உதவுதல் ஒருதலையாம். ஆதலால், தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் நாலடியாரை அதன் பொருளறிந்து கற்று நெடுக நெட்டுருச் செய்து அதன் சொற்பொருட்சுவைகளில் ஊன்றிப் பழகித் தமிழ்நலந் துய்த்தலும், தம் இம்மை மறுமைப் பேறுகளை இனிதுபெற்றுச் சிறத்தலும் இன்றியமையாதனவாகும்.

அதற்கு, நூலின் சொற்பொருட்சுவையூடு கல்விச் செல்லும் இப் பொழிப்புரை நூல் போதிய அளவில் உதவக்கூடும். இதனை யான் எழுதுதற்கான வாய்ப்புக்கு இடஞ்செய்து உதவிய கழகத்தார்க்கும், செய்வித்துதவிய திருவாளர் செட்டியாரவர்கட்கும் என் நன்றி உரியது.

சென்னை,
20-9-1942.

இளவழகன்.

உ

திருச்சிற்றம்பலம்

# நாலடியார் பொழிப்புரை

## கடவுள் வாழ்த்து

வான்இடு வில்லின் வரவறியா வாய்மையால்
கால்நிலம் தோயாக் கடவுளை—யாம்நிலம்
சென்னி யுறவணங்கிச் சேர்தும்எம் உள்ளத்து
முன்னி யவைமுடிக என்று.

மேகத்தால் உண்டாகின்ற இந்திரவில்லின் நிலைமையைப் போல் பிறப்பின் இயல்பும் திட்டமாகத் தெரிந்துகொள்ளக் கூடாத நிலைமையிலிருத்தலின், யாம், எமது மனத்தில் நினைபவை நிறைவேறுகவென்று கருதித், திருவடிகள் நிலத்திற் படிதலில்லாத இறைவனைத் தரையில் எமது முடிபொருந்தும்படி தொழுது இடைவிடாது உள்ளுவோம்.

## க. அறத்துப் பால்

அறத்தினியல்பை விளக்குவது; இம்மை மறுமை வீடு என்னும் மூன்றுந் தருவதனால், அறம் முதலில் நின்றது.

### 1. செல்வ நிலையாமை

இவ்வதிகாரம் செல்வத்தின் நிலையாமையை உணர்த்திற்று.

1. அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கிஉண் டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழ்எனின் செல்வம்ஒன்று
உண்டாக வைக்கற்பாற் றன்று.

*மனையாள் அறுசுவை யுணவை விரும்பி ஊட்டச் செழுமை மிகுதியால் மறுபிடி நீக்கி உண்ட பெருஞ்செல்வரும் ஒரு காலத்தில் வறிஞராகி ஓரிடத்திற் போய்க் கூழ் இரக்கநேரும். ஆதலின், செல்வம் என்பதொன்று நிலையுடையதாகக் கருதக் கூடியதன்று.*

2. துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

*பழுதில்லாத சிறந்த செல்வம் உண்டானால் எருழுது உண்டான உணவை அதுமுதலே விருந்து சுற்றம் முதலிய பலரோடுங் கூடி உண்க. ஏனென்றால், செல்வம் யாரிடத்திலும் உறுதியுற நிலைத்திராமல் வண்டியுருளைபோல மாறிமாறிச் செல்லும்.*

3. யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்—ஏனை
வினைஉலப்ப வேறாகி வீழ்வர்தாம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள.

*யானையின் கழுத்து விளங்கும்படி குடை நிழலில் பல சேனைகட்குத் தலைவராக ஆரவாரமாய்ச் சென்ற அரசர்களும், தீவினை உருத்துதலால், தாம் மணந்துகொண்ட மனைவியையும் பகைவர் கவர்ந்துகொள்ள நிலைவேறுபட்டு வறிஞராவர்.*

4. நின்றன நின்றன நில்லா எனஉணர்ந்து
ஒன்றின ஒன்றின வல்லே செயின்செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று.

வாழ்நாட்கள் கழிந்தன; உடன் கூற்றுவன் சினந்து வருகின்றனன். ஆதலின், அறஞ்செய்வதாயிருந்தால், நின்ற பொருள்கள் என்றும் நில்லா எனத் தெளிந்து, இயன்றன விரைவிற் செய்க.

5. என்னுனும் ஒன்றுதம் கையுறப் பெற்றக்கால்
பின்னுவ தென்று பிடித்திரா—முன்னே
கொடுத்தார் உயப்போவர் கோடில்தீக் கூற்றம்
தொடுத்தாறு செல்லும் சுரம்.

ஏதாவதொன்று கையிற் கிடைக்கப்பெற்றால் அது பின்னால் உதவும் என்று இறுக்கிப் பிடித்திராமல் முதற்காலத்தில் அறஞ்செய்தோரே, நடுவுநிலைமையிற் கோணுத லில்லாத கொடிய கூற்றுவன் கயிற்றால் தொடுத்து அழைத்துச்செல்லுங் காட்டு வழியினின்று தப்பிப் பிழைப்பவராவர்.

6. இழைத்தநாள் எல்லை இகவா பிழைத்தொரீஇக்
கூற்றம் குதித்துய்ந்தார் ஈங்கில்லை—ஆற்றப்
பெரும்பொருள் வைத்தீர் வழங்குமின் நாளைத்
தழீஇம்தழீஇம் தண்ணம் படும்.

பெருமை தரத்தக்க செல்வத்தை மிகுதியாகப் படைத்திருக்குஞ் செல்வர்களே! உடலோடு கூடி வாழ அளவு செய்துள்ள நாட்கள் அந்நிலையினின்றுந் தவறி நீங்கி அளவுகடவா. கூற்றுவன் பிடியினின்று அப்புறங் குதித்து உயிர் பிழைத்தவர் இவ்வுலகில் ஒருவருமில்லை. நாளை யொருகால் 'தழீஇம்'

'தழீஇம்' என்று சாவுப்பறை ஒலிக்கும். ஆதலால், உடனே நும் செல்வங்களைப் பிறர்க்கு வழங்கிப் புண்ணியம் தேடிக் கொள்ளுமின் !

**7.** **தோற்றம்சால் ஞாயிறு நாழியா வைகலும்**
**கூற்றம் அளந்துநும் நாளுண்ணும்—ஆற்ற**
**அறஞ்செய் தருளுடையி ராகுமின் யாரும்**
**பிறந்தும் பிறவாதா ரில்.**

*தோற்றம் மிக்க சூரியனை நாழி என்னும் அளவுகருவி யாகக் கொண்டு நும் வாழ்நாளாகிய தானியத்தை நாள் தோறுங் கூற்றுவன் அளவுசெய்து உண்ணுவான். ஆதலால், மிகுதியாக அறஞ்செய்து உயிர்களிடத்தில் நீவிர் அருளுடையீ ராகுக ! அவ்வாறு ஆகாதவரெவரும் பிறந்தும் பிறவாதாரிற் சேர்ந்தவரே யாவர் !*

**8.** **செல்வர்யாம் என்றுதாம் செல்வுழி எண்ணாத**
**புல்லறி வாளர் பெருஞ் செல்வம்—எல்லிற்**
**கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி**
**மருங்கறக் கெட்டு விடும்.**

*யாம் செல்வமுடையோம் என்று கருதிக் களித்து இனிச் செல்லுமிடமான மறுமையுலகத்தைப் பொருள்செய் தொழுகாத சிற்றறிவுடையவரது பெருஞ்செல்வம், இரவு நேரத்திற் கரியமேகம் வாய்திறந்ததனால் உண்டான மின்னலைப்போல் சிறிது காலம் தோன்றியிருந்து பின் இருந்தவிட முந் தெரியாமல் அழிந்துபோகும்.*

**9.** **உண்ணான் ஒளிநிறான் ஓங்குபுகழ் செய்யான்**
**துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே**
**வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ**
**இழந்தானென் றெண்ணப் படும்.**

ஒருவன் இன்றியமையாத உணவுகளை உண்ணாமலும், தன் மதிப்பை நிலைக்கச் செய்யாமலும், பெருகுதற்குரிய புகழைச் செய்துகொள்ளாமலும், நெருங்கிய பெறற்கரும் உறவினரின் துன்பங்களை நீக்காமலும், இரப்பவர்க்கு உதவாமலும் வீணாகத் தனது செல்வத்தைப் பாதுகாத்துக்கொண்டிருப்பானாயின் ஆ, அவன் அதனை இழந்தானென்றே கருதப்படும்.

10. உடாஅதும் உண்ணாதும் தம்உடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமும் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னார்இழப்பர் வான்தோய் மலைநாட
உய்த்தீட்டும் தேனீக் கரி.

வான் அளாவிய மலைநாட்டுத் தலைவனே! உடை உடுக்காமலும், உணவு உண்ணாமலும், தமது உடம்பை வருத்தியும், அழியாத சிறந்த புண்ணியமுஞ் செய்யாமலும், வறியவர்க்குக் கொடாமலும் பொருளைத் தொகுத்து வைத்தவர்கள், அதனை இழக்கநேரிடும்; தேனைப் பல பூக்களிலிருந்து கொண்டுபோய்த் தொகுத்துவைக்கும் தேனீ அதற்குச் சான்று.

## 2. இளமை நிலையாமை

இளமையின் நிலையில்லாமையை உணர்த்துவது.

11. நரைவரும் என்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார்—புரைதீரா
மன்னா இளமை மகிழ்ந்தாரே கோல்ஊன்றி
இன்னாங் கெழுந்திருப் பார்.

பழுதற்ற அறிவினையுடையோர் மூப்பு வருமென்று கருதி இளமையிலேயே பற்றுள்ளத்தை விட்டனர்; குற்றம் நீங்குத

*லில்லாத நிலையா இளமைக் காலத்தை அறவழியிற் பயன்படுத்தாமல் நுகர்ந்து கழித்தவர்களே, பின் கிழத்தனத்தால் கோல் ஊன்றித் துன்பத்தோடு எழுந்து தள்ளாடுபவர்கள்.*

**12.** நட்புநார் அற்றன நல்லாரும் அஃகினர்
அற்புத் தளையும் அவிழ்ந்தன—உட்காணாய்
வாழ்தலின் ஊதியம் என்னுண்டாம் வந்ததே
ஆழ்கலத் தன்ன கலுழ்.

*நேயமென்னும் நாரும் அறுந்தன; சான்றோரும் அணுக்கங் குறைந்தனர்; மக்கள்பால் உண்டாகும் அன்பென்னுங் கட்டும் அவிழ்ந்தன; மனத்தில் நினைத்துப் பார்; இளமையை மகிழ்ந்து வாழ்தலினால் பயன் யாதுண்டு? கடலில் மூழ்கிவிடுகின்ற மரக்கலத்தின் நிலையை ஒத்த துன்பம் இதோ வருகின்றது!*

**13.** சொல்தளர்ந்து கோல்ஊன்றிச் சோர்ந்த நடையினராய்ப்
பல்கழன்று பண்டம் பழிகாறும்—இல்செறிந்து
காம நெறிபடரும் கண்ணினர்க் கில்லையே
ஏம நெறிபடரு மாறு.

*பேச்சின் வலி குறைந்து, கையிற் கோல் ஊன்றித், தள்ளாடிய நடையை உடையவராய்ப், பற்கள் உதிர்ந்து, இவ்வுடம்பாகிய பண்டம் பழிக்கப்படுமளவும் மனைவியோடு பற்றுக்கொண்டிருந்து காமவழியிற் செல்லும் சிற்றறிவுடையார்க்கு, மெய்யின்ப நெறியிற் செல்லும் வகை உண்டாவதில்லை.*

**14.** தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்று
வீழா இறக்கும் இவள்மாட்டும்—காழிலா
மம்மர்கொள் மாந்தர்க் கணங்காகும் தன்கைக்கோல்
அம்மனைக்கோ லாகிய ஞான்று.

*முதுகு தாழ்ந்து உடம்பின் கட்டுத் தளர்ந்து தலைநடுங்கிக் கையில் தடி ஊன்றி விழுந்து இறந்துபோதற்குரிய இத்தகைய ஒருத்தியிடத்தும் உறுதியான அறிவில்லாத காம மயக்கத்தைக் கொள்கின்ற மக்களுக்கு, அவள் இன்று பிடித்திருக்குங் கையின் ஊன்றுகோல் அவள் தாயின் கைக்கோலா யிருந்த காலத்தில் வருத்துகின்ற காமத்தன்மையையுடைய அழகுருவம் காணப்பட்டிருக்கும்.*

**15.** எனக்குத்தா யாகியாள் என்னைஈங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள்—தனக்குத்தா
யாகி யவளும் அதுவானல் தாய்த்தாய்க்கொண்
டேகும் அளித்திவ் வுலகு.

*எனக்குத் தாயாயிருந்தவள் என்னை இவ்வுலகத்தில் விடுத்துத் தனக்குத் தாய் விரும்பி இறந்துபோனாள்; அவளுக் குத் தாயாக நேர்ந்தவளும் அவ்வாறே போனால், ஒரு தாய் தனக்குத் தாயைத் தாவிக்கொண்டு போகின்ற எளிமையை யுடையது இவ்வுலகம் என்க.*

**16.** வெறிஅயர் வெங்களத்து வேல்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள ருண்டன்ன மன்னு மகிழ்ச்சி
அறிவுடை யாளர்கண் இல்.

*வெறியாடுதலைச் செய்கின்ற கொடிய பலிக்களத்தில், வெறியாடுவோனுடைய கைகளிற் கட்டியுள்ள தளிர்கள் இடையிடையே பொருந்திய மணமுள்ள மலர்மாலை தன் எதிரில் விளங்கா நிற்க, அதைக் கண்ட பலியாடு, அதிலுள்ள தளிரைத் தனக்கு உணவாக உண்டு மகிழ்ந்தாற்போன்ற இளமையால் வருகின்ற நிலையாத மகிழ்ச்சி, அறிவுடையாளர் பால் இல்லை.*

**17.** பனிபடு சோலைப் பயன்மர மெல்லாம்
கனிஉதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—நனிபெரிதும்
வேற்கண்ணள் என்றிவளை வெஃகன்மின் மற்றிவளும்
கோற்கண்ண ளாகும் குனிந்து.

இளமைப் பருவமானது, குளிர்ச்சி பொருந்திய சோலையிலுள்ள பயன்தரு மரங்கள் எல்லாவற்றினின்றும் பழங்கள் உதிர்ந்து வீழ்ந்தாற்போலுந் தன்மையது; இவ்விளமையுடையாளும் ஒருகாலத்தில் கூனுகி, வழிதெரிந்து நடப்பதற்கு ஊன்றுகோலையே கண்ணுக உடையவளாவள்; ஆதலால், இப்போது வேல்போலுங் கண்ணுடையாளென்று இவ்விளந் தன்மையாளைப் பெரிதும் விரும்பவேண்டாம்.

**18.** பருவம் எனைத்துள பல்லின்பால் ஏனை
இருசிகையும் உண்டீரோ என்று—வரிசையால்
உள்நாட்டம் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோள்
எண்ணுர் அறிவுடை யார்.

வயது எவ்வளவு ஆயிருக்கின்றன? பல்லின் தன்மை எப்படி யிருக்கின்றன? இரண்டு பிடியேனும் உண்கின்றீர்களா என்று ஒன்றின்பின் ஒன்ருகப் பிறரைப்பற்றித் தமக்குள் ஆராயும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுவதனுல், உடம்பின் இளமையை அறிவுடையோர் ஒரு பொருளாகக் கருதார்.

**19.** மற்றறிவாம் நல்வினை யாம்இளையம் என்னுது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு.

'நற்செயல்களைப் பின்னுல் தெரிந்து செய்துகொள்ளலாம்; இப்போது யாம் இளமைப்பருவ முடையோம்' என்று

கருதாமல், கையிற் பொருள் உண்டானபொழுதே ஒளியாமல் அறஞ் செய்யுங்கள். ஏனென்றால், பழுத்திருந்த பழங்களே யன்றிக் கோடைக் காற்றினால் வலிய காய்களும் மரங்களி லிருந்து உதிர்ந்துவிடுவதுண்டு.

20. ஆள்பார்த் துழலும் அருளில்கூற்று உண்மையால்
தோள்கோப்புக் காலத்தால் கொண்டுய்ம்மின்—பீள்பிதுக்கிப்
பிள்ளையைத் தாய்அலறக் கோடலால் மற்றதன்
கள்ளம் கடைப்பிடித்தல் நன்று.

தான் உயிர்பிடித்துக்கொண்டு போகும் ஆளைக் கருதி அதே வேலையாகத் திரிகின்ற இரக்கமில்லாத கூற்றுவ னொருவன் இருக்கின்றானாதலால், மறுமையாகிய வழிக்குக் கட்டுச்சோறுபோல் உதவும் புண்ணியத்தை இளமையாகிய தக்க காலத்திலேயே உண்டாக்கிக்கொண்டு பிழையுங்கள். முற்றாத இளங் கருவையும் வெளிப்படுத்திக் குழந்தையை அதன் தாய் அலறி அழும்படி உயிர்கொள்ளுதலால், அக் கூற்றுவனது கடுமையை நினைவில் இருத்திக் காரியங்கள் செய்வது நல்லது.

---

## 3. யாக்கை நிலையாமை

உடலின் நிலையாமையை உணர்த்துவது.

21. மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்—நிலமிசைத்
துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினார் இவ்வுலகத் தில்.

மலையுச்சியில் தோன்றும் முழுநிலாவைப்போல் யானைத் தலைமேற் கொள்ளப்பட்ட குடைநிழலில் உலாவிவந்த

*அரசரும், இந்நிலத்தில் இறந்து மண்ணுனாரென்று குறித்து இழித்துரைக்கப்பட்டனரேயன்றி, இறவாமல் நின்றவர் இவ் வுலகத்தில் இல்லை.*

**22.** வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால்—வாழ்நாள்
உலவாமுன் ஒப்புர வாற்றுமின் யாரும்
நிலவார் நிலமிசை மேல்.

*ஆயுள் நாட்களுக்கு அளவு காணும்படி, விளங்குகின்ற கதிரவன் என்னும் ஒளிவட்டம் வீண்நாள் படாமல் தொடர் பாகத் தோன்றி வருவதனுல், அம்முறையே கணக்கிடப்பட்டு ஆயள்நாள் அற்றுப்போகுமுன் அறம் செய்யுங்கள்; குறிப்பிட்ட ஆயுள் நாளுக்குமேல் யாரும் இவ்வுலகத்தில் நிலைக்க மாட்டார்கள்.*

**23.** மன்றம் கறங்க மணப்பறை யாயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப்—பின்றை
ஒலித்தலும் உண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமாம் மாண்டார் மனம்.

*அவைமுழுதும் ஒலிக்கும்படி திருமண மேளமாய் முழங் கியவை அந்நாளன்று அம் மணமக்களுக்கு அத்திருமணக்கூடத் திலேயே பிணமேளமாய்ப் பின்பு ஒலித்தலும் நேருமெனக் கருதி, நன்னிலையுற்றுச் செல்வதற்கான அறவழியிலேயே அறிவுமாட்சிமைப்பட்டோரது நன்மனம் துணிந்து நிற்கும்.*

**24.** சென்றே எறிப ஒருகால் சிறுவரை
நின்றே எறிப பறையினை—நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து.

பறைகொட்டுவோர் இறந்தவர் வீட்டுக்குச் சென்று முதலில் ஒருமுறை கொட்டுவர்; சிறிது பொழுது நிறுத்தி மீண்டும் அப் பறையினைக் கொட்டுவர்; மூன்றாமுறை கொட்டு முன், இறந்தவரை இனி இறப்பவர் சுமந்துகொண்டு, துணி யால் மூடித் தீக் கைக்கொண்டு இடுகாட்டுக்குப் புறப்படுவர்.

**25.** கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும்—மணங்கொண்டீ
டுண்டுண்டுண் டென்னும் உணர்வினான் சாற்றுமே [ண்
டொண்டொண்டொ டென்னும் பறை.

உறவினர் கூட்டங்கூடிக் கல்லென்று அலறி அழப் பிணத்தை எடுத்துக்கொண்டுபோய் இடுகாட்டிற் கிடத்துவாரை நேரிற் பார்த்தும், ஒவ்வாத் திருமணம் செய்துகொண்டு இவ்வுலகத்தில் இன்பம் உண்டு உண்டு உண்டு என்று கருதி மயங்குகின்ற மயக்கவுணர்வு உடையானுக்கு, டொண் டொண் டொடு என்று ஒலிக்கின்ற சாவுமேளம் அவ்வாறு ஓரின்பம் இல்லை இல்லை இல்லை என்று கூறும்.

**26.** நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால்.

தோலாலான பையாகிய உடம்பினுள் இருந்து தொழில் களை முடியச்செய்து அவ்வுடம்பை உண்பித்து வருகின்ற கூத்தனை ஒத்த உயிர் வெளிப்பட்டுவிட்டபின், அவ்வுடம்பை நாரினாற் கட்டி இழுத்தாலென்ன, நன்றாகத் தூய்மை செய்து அடக்கஞ் செய்தாலென்ன, கண்டவிடத்தில் எறிந்தாலென்ன, அதனைப் பலரும் பழித்தாற்றானென்ன? (வருகின்ற பெருமை சிறுமை ஒன்றுமில்லை.)

27. படுமழை மொக்குளில் பல்காலும் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித்—தடுமாற்றம்
தீர்ப்பேம்யாம் என்றுணரும் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீள்நிலத்தின் மேல்.

*'மழைநீரில் தோன்றுகின்ற குமிழியைப்போலப் பல தடவையும் தோன்றித் தோன்றி விரைந்து அழிந்துபோகின்ற ஒருடம்பு இது' என்று இதன் இழிவு கருதி, இவ்வாறு பிறவியில் தடுமாறுதலை யாம் நீக்க முயல்வேம் என்று மெய்யுணரும் உறுதியான அறிவுடையவரை ஒப்பவர் இப் பேருலகில் யார் ?*

28. யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்க—யாக்கை
மலையாடு மஞ்சுபோல் தோன்றிமற் றுங்கே
நிலையாது நீத்து விடும்.

*உடம்பை உறுதியுடையதாகப் பெற்றவர், தாம் அவ்வாறு முன் நல்வினையினால் அரிதின் அடைந்த அந் நல்யாக்கையினால் ஆக்கூடிய புண்ணியப்பயனைக் காலந் தாழாமற் செய்து கொள்க. ஏனென்றால், இவ்வுடம்பு மலையுச்சியில் உலவுகின்ற மேகம் போலக் காணப்பட்டுப், பின்பு அக் காணப்பட்டபடியே நிலையாமல் உருவழிந்துவிடும்.*

29. புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை—இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேள்அலறச்
சென்றான் எனப்படுத லால்.

*யாக்கை நிலையாமை யென்பது புல்நுனியில் நிற்கும் நீர்த்துளிபோன்றது என்று கருதி இப்பொழுதே அறச்*

செயல்கள் செய்க; ஏனென்றால், இப்போதுதான் ஒருவன் இங்கே நின்றான், இருந்தான், படுத்தான், உடனே தன் உறவினர் அலறி அழும்படி இறந்துவிட்டான் என்று உலகத்தில் இந் நிலையாமை சொல்லப்படுவதனாலென்க.

**30.** கேளாதே வந்து கிளைகளாய் இல்தோன்றி
வாளாதே போவரால் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரன்ஒழியச் சேண்நீங்கு புள்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

கூடு மரத்தில் வெறுமையாய்க் கிடக்க அதிலிருந்து தொலைவிலே பறந்து போய்விடும் பறவைகள்போல, மக்கள், யாரையுங் கேளாமலே வந்து உறவினராய் ஒரு குடும்பத்திற் பிறந்து, பின்பு, தமதுடம்பைத் தம்மவர்பாற் கிடக்கும்படி நீக்கிவிட்டுப் பேசாமல் இறந்து போய்விடுவார்கள்.

---

## 4. அறன்வலி யுறுத்தல்

அறத்தின் நிலைபேற்றை உணர்த்துவது; 'வலி' யென்றது, இங்கு நிலைபேறு; செல்வம் இளமை யாக்கை முதலானவை நிலையாமையின், இது வலியுடையதாயிற்று.

**31.** அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி இருப்பாரே மேலைத்
தவத்தால் தவஞ்செய்யா தார்.

முற்பிறப்பிற் செய்த தவத்தின் பயனான செல்வநிலைமையால் மறுபிறப்பிற்கு வேண்டுந் தவத்தைச் செய்யாதொழிந்தவர், அம் மறுபிறப்பில், இம் மாளிகையில் வாழ்வார் எத்தகையவரோ என்று வியந்து அதன் மேனிலையை அண்ணாந்து

பார்த்து, உள்நுழையப் பெருராய்த் தலைவாயிலைப் பற்றி மிகவும் வாடி ஒரு பயனுமின்றி நின்றுகொண்டிருப்பர்.

**32.** ஆவாம்நாம் ஆக்கம் நசைஇ அறம்மறந்து
போவாம்நாம் என்னப் புலைநெஞ்சே—ஓவாது
நின்றுஉஞற்றி வாழ்தி எனினும்நின் வாழ்நாள்கள்
சென்றன செய்வ துரை.

அறத்தை மறந்து, 'பொருளை விரும்பி முயன்று நாம் மேலுமேலும் பெருஞ் செல்வராவோம், நாம் இவ்வளவு விரைவில் இறந்துபோகமாட்டோம்' என்று எண்ணுகின்ற தாழ்ந்த தன்மையையுடைய நெஞ்சமே! இடைவிடாமல் தொழிலில் நிலையாயிருந்து முயன்று நீ நினைத்தபடியே வாழ்கின்றாயென்றாலும், நின் ஆயுள்நாட்கள் இதோ கழிந்து விட்டன; மறுமைக்காக இனி என்னசெய்வது சொல்.

**33.** வினைப்பயன் வந்தக்கால் வெய்ய உயிரா
மனத்தின் அழியுமாம் பேதை—நினைத்ததனைத்
தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்
தெல்லை இகந்தொருவு வார்.

முன் தீவினையின் பயனான இடர்கள் இப்போது வந்து தாக்கினால், அறிவிலாதவர் உடனே கடுமையாகப் பெருமூச்சு விட்டு மனத்தில் வருந்தி ஊக்கங் கெடுவர். ஆராய்ந்து, அவ்விடர் பழைய வினையினால் வந்ததென்று தெரிந்து அதற்கேற்ப ஒழுகுவோரே, கலக்கத்தின் எல்லையைக் கடந்து அப்பால் நீங்குவர்.

**34.** அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
பெரும்பயனும் ஆற்றவே கொள்க—கரும்பூர்ந்த
சாறுபோல் சாலவும் பின்உதவி மற்றதன்
கோதுபோல் போகும் உடம்பு.

அடைதற்கரிய உடம்பை அடைந்த ஆக்கங்கொண்டு, பெரும்பயன் எனப்படும் புண்ணியச் செயல்களும் இயன்ற வளவு செய்துகொள்க. கரும்பை ஆட்டி எடுத்த சாறுபோல மறுமைக்கு மிகவும் அறப்பயன் உதவிப், பின்பு, அக் கரும்பின் சக்கைபோல இவ்வுடம்பு கழிந்துபோகும் இயல்புடையது.

**35.** கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்கால் துயராண் டுழவார்
வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்கால் பரிவ திலர்.

மிக்க காலைநேரத்தில் கரும்பை ஆலையில் ஆட்டிச் சர்க்கரைக் கட்டியைச் செய்துகொண்டவர், அக் கரும்பு பின் துரும்பாகித் தோன்றித் தீயில் வேகும்போது அது கண்டவிடத்தில் துன்பத்திஞல் வருந்தார். அதுபோல நற்செயல்களில் உழைத்து உடம்பாலான அறப்பயனைப் பெற்றவர், நமன் வருகின்ற காலத்தில் உடம்பின் கேடு குறித்து இரங்குதல் இலராவர்.

**36.** இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்
மருவுமின் மாண்டார் அறம்.

இன்றோ அன்றோ என்றோ என்று புறக்கணித்திராமல் பின்னாலேயே நிற்கின்றனன் நமன் என்று கருதித், தீயசெயல்களை நீக்குங்கள்; மாட்சிமைப்பட்ட நல்லோருடைய அறச்செயல்களை இயன்றவகைகளால் மேற்கொண்டு, செய்மின்கள்.

**37.** மக்களா லாய பெரும்பயனும் ஆயுங்கால்
எத்துணையும் ஆற்றப் பலவானல்—தொக்க
உடம்பிற்கே ஒப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும்.

ஆயுங்கால், மக்கட் பிறவியினால் செய்யத்தக்க பெரும் பயனான நற்செயல்களும் எவ்வளவும் மிகப் பலவாகும்; ஆதலால், பல கருவிகளோடு கூடிய இவ்வுடம்புக்கே உதவிகள் செய்துகொண்டிராமல், மேலுலகத்தில் எளிதாக இருந்து கொண்டு இன்பம் நுகரும்பொருட்டு உயிருக்கான அறவினைகளே மிகவும் செய்துகொள்ளுதல் வேண்டும்.

**38.** உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழல்பயந் தாஅங்—கறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

சிறிய அளவினதான ஓர் ஆலம் விதை தழைத்து மிகவும் நிழல் கொடுத்தாற்போல அறச்செயல்களின் பயனான புண்ணியத்தைத் தரும் பொருள், அளவில் சிறியதேயாயினும் தகுதியுடைய பெரியோர் கையிற் சேர்ந்தால் வானமும் சிறிதென்னும்படி அவ்வளவு பெரும் புண்ணியத்தைச் சூழவைத்துவிடும்.

**39.** வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

நாடோறும் நாட்காலம் தோன்றிவரக் கண்டும், அறத்தைக் கருதாதவராய், என்றும் நிலைத்திருக்கும் என்று கருதி நாட்பொழுதைத் துய்த்து மகிழ்வர். அவர் யாரெனின், ஒவ்வொருநாளும் தம் ஆயுள் கழிதலின்மேல் நிற்றலாக அந் நாட்காலத்தை நாளுங் கருத்திருத்தி அறியாதவர்.

**40.** மான அருங்கலம் நீக்கி இரவென்னும்
ஈன இளிவினால் வாழ்வேன்மன்—ஈனத்தால்
ஊட்டியக் கண்ணும் உறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கும் எனின்.

இழிதொழில்களால் வருவாய் தேடி உண்பித்தவிடத்தே னும் உறுதி பொருந்தி இவ்வுடம்பு காலம் நீண்டு நிலைபெறு மென்றால், மானமாகிய பெறற்கரிய அணிகலனை விடுத்து இரத் தல் என்னும் எளனமான இழிதொழிலினால் உயிர்வாழ்வேன். (ஆனால், இவ்வுடம்புதான் நிலைக்கப்போவதில்லையே!)

---

## 5. தூய்தன்மை

என்றது, தூயதல்லாமை; உடம்பின் அழுக்குடை மையை உணர்த்துவது. மகளிருடம்பு அழகிதெனக் கருதப் படுதலின், பெரும்பாலும் அதன் தூய்தல்லாமையை இவ்வதி காரம் விளக்கிற்று.

**41.** மாக்கேழ் மடநல்லாய் என்றரற்றும் சான்றவர்
நோக்கார்கொல் நொய்யதோர் புக்கிலை—யாக்கைக்கோர்
ஈச்சிற கன்னதோர் தோல்அறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்.

மாந்தளிரின் நிறத்தையுடைய இளநங்கையே என்று மாதரை நோக்கிப் பலகாலுங் கூறி உருகும் பெரியோர்கள் அம் மாதாருடைய தாழ்ந்த சிற்றுடம்பின் இயல்பை எண்ணிப் பாரார்களோ! அவ்வுடம்புக்கு ஓர் ஈயின் சிறகைப் போன்ற தொரு தோல் அறுபட்டாலும் (அதன் அழுக்கை உண்ண வருகின்ற) காக்கையைத் துரத்துவதொரு கோல் வேண்டி யிருக்கும்.

**42.** தோற்போர்வை மேலும் தொளைபலவாய்ப் பொய்ம்மறைக்கும்
மீப்போர்வை மாட்சித் துடம்பானால்—மீப்போர்வை,
பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும்.

தோலாலான போர்வையின்மேலும் தொளைகள் பலவாகி அவற்றின் அழுக்குகளை மறைக்கும் மேற்போர்வையாகிய ஆடையின் பெருமையையுடையது இவ்வுடம்பென்றால், இதனைக் காமத்தால் நுகராமல், மேற்போர்வையாகிய ஆடையை அழுக்குமறைக்குந் திரையாகவும் மற்றொரு போர்வையாகிய தோற்போர்வையை ஒரு பையின் திருப்பம்போலவும் நினைத்துப் பார்த்து, விருப்பத்தை நீக்கிக்கொள்ளவேண்டும்.

**43.** தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலஞ் செய்ய ஒழியுமே—எக்காலும்
உண்டி வினையுள் உறைக்கும் எனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல்.

உணவுத்தொழில் எப்பொழுதும் உள்ளே அழுக்குமிகுக்கும் என்று சான்றோர் அறிந்து விருப்பம் நீங்கிய இவ்வுடம்பின் மாசு, தக்கோலம் முதலிய மணப்பொருள்களை வாயில் மென்று தலைநிரம்ப மணமலர் சூடிச் செயற்கையழகுகள் செய்துகொள்வதனால் நீங்கிவிடுமோ !

**44.** தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ
உண்ணீர் களைந்தக்கால் நுங்குசூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்.

தெளிநீரிலுள்ள குவளைமலர், புரள்கின்ற கயல்மீன், வேற்படை என்றெல்லாங் கூறி மெய்யறிவில்லாத் தாழ்ந்த மக்கள் எனதுள்ளத்தைக் கவலைப்படுத்த இடம் விடுவேனோ, உள்ளுள்ள நீர் நீக்கப்பட்டால் நுங்கு தோண்டிவிட்டாற் போன்ற கண்ணின் இயல்பை அறிந்து பற்றற்றொழுகுவேனன்றோ நான்.

45. முல்லை முகைமுறுவல் முத்தென் றிவைபிதற்றும்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ
எல்லாரும் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்.

மாதர்-பற்கள் முல்லையரும்புகள் முத்துக்கள் என்று இப் புனைவுகளை அறிவின்றிச் சொல்லிக்கொண்டிருக்கும் மெய்ப் பொருள் கல்லாக் கீழ்மக்கள் எனதுள்ளத்தைக் கவலைப்படுத்த விடுவேனோ, எல்லாரும் பார்க்கும்படி சுடலையிற் பலவாய் வீழ்ந்து சிந்திய பல்லெலும்புகளைப் பார்த்துப் பற்றற்றொழுகு வேனான நான்.

46. குடரும் கொழுவும் குருதியும் என்பும்
தொடரும் நரம்பொடு தோலும்—இடையிடையே
வைத்த தடியும் வழும்புமாம் மற்றிவற்றுள்
எத்திறத்தாள் ஈர்ங்கோதை யாள்.

குடலும் கொழுமையும் குருதியும் எலும்பும் தசைநாரும் நரம்பும் தோலும் இவற்றின் இடையிடையே வைத்த தசையும் கொழுப்புமாகின்ற இவ்வுடற்பொருள்களுள் எப் பகுதியைச் சேர்ந்தவள் இனிய மாலையை அணிந்த மாது !

47. ஊறி உவர்த்தக்க ஒன்பது வாய்ப்புலனும்
கோதிக் குழம்பலைக்கும் கும்பத்தைப்—பேதை
பெருந்தோளி பெய்வளாய் என்னுமிப் போர்த்த
கருந்தோலால் கண்விளக்கப் பட்டு.

அழுக்குகள் ஊறி அருவருக்கத்தக்க ஒன்பது சந்திடங்களும் சீத்து அவ்வழுக்குக் குழம்பை அசைத்தொழுக்கும் குடமாகிய உடம்பை, அறிவிலான் ஒருவனே, அவ்வுடம்பின்மேற் போர்த்த பசுந்தோலினால் தன் கண்கள் ஒளி செய்யப்பட்டு அதனால், பெரிய தோளையுடையாளே, இட்ட வளையலுடையாளே என்று சொல்லிக்கொண்டிருப்பான்.

**48.** பண்டம் அறியார் படுசாந்துங் கோதையுங்
கொண்டுபா ராட்டுவார் கண்டிலர்கொல்—மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்தும்
முடைச்சாகா டச்சிற் றுழி.

உடம்பாகிய பண்டத்தின் இயல்பை அறியாதவராய், அணியப்படும் சந்தனமும் மாலையுங் கருதி அவ்வுடம்பின்மேற் பற்றுவைத் தொழுகுகின்றவர், பெண்ணும் ஆணுமான வலிய கழுகுகள் நெருங்கி உறுப்புக்களைப் புரட்டிக் குத்துகின்ற முடைநாற்றமுடைய அவ்வுடம்பாகிய வண்டியை, அவ் வண்டிக்கு அச்சுபோன்றதான உயிர் முறிந்துவிட்டபோதும் அறிந்திலர்போலும் !

**49.** கழிந்தார் இடுதலை கண்டார்நெஞ் சுட்கக்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி—ஒழிந்தாரைப்
போற்றி நெறிநின்மின் இற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து.

இறந்துபோனவரது எரிக்கப்பட்ட தலை ஓடு தன்னைப் பார்த்தவரின் மனம் அஞ்சும்படி, உட்குழிந்து ஆழ்ந்த கண்ணிடங்களை உடையனவாய் இடுகாட்டிற் காணப்பட்டு, இறவாதிருக்கும் ஏனையோரை ஏளனமாக நகைத்து, ' இவ்வுடலின் இயல்பு இத்தகையது : அறத்தைக் கடைப்பிடித்து அவ்வழியில் நில்லுங்கள் ' என்று சொல்லும்போலும் !

**50.** உயிர்போயார் வெண்டலை உட்கச் சிரித்துச்
செயிர்தீர்க்குஞ் செம்மாப் பவரைச்—செயிர்தீர்ந்தார்
கண்டிற் றிதன்வண்ண மென்பதனால் தம்மையோர்
பண்டத்துள் வைப்ப திலர்.

உயிர்போனவரது தசை நீங்கிய வெண்ணிறமான எலும்புத் தலை, கண்டார் அஞ்சும்படி நகைத்து இவ்வுடம்பின்

காரணமாக இன்புறுகின்றவரை அக் குற்றத்தினின்றும் விடுவிக்கக்கூடும் ; இதற்குமுன் இயல்பாகவே அப் பிழை நீங்கினவர், தாமே அறிந்து இத்தகையது இவ்வுடம்பின் தன்மை என்னுங் கருத்தினால் தமதுடம்பை ஒரு பொருளில் வைத்து மதிப்பதிலர்.

---

## 6. துறவு

உலகத்தின் நிலையாமை உணர்ந்து யான் எனது என்னும் இருவகைப் பற்றும் விட்டு மெய்யுணர்வில் ஒழுகுதல். உடம்பின்மேல் உள்ள பற்று யான் என்னும் அகப் பற்று ; செல்வம் முதலியவற்றின்மேல் உள்ள பற்று எனது என்னும் புறப்பற்று. துறத்தல் இவ்விருவகைப் பற்றுக்களையும் விடுதல்.

**51.** விளக்குப் புகஇருள் மாய்ந்தாங் கொருவன்
தவத்தின்முன் நில்லாதாம் பாவம்—விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாம் தீது.

ஓரிடத்தில் விளக்கொளி வர அங்கே இருந்த இருட்டு நீங்கினாற்போல ஒருவனது தவமுயற்சியின்முன், செய்த தீவினை நில்லாது. விளக்கின் நெய் குறையுமிடத்தில் இருட்டு மீண்டும் போய்ப் பரவினாற்போல நல்வினை நீங்குமிடத்தில் தீவினை சென்று சூழ்ந்துநிற்கும்.

**52.** நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார்—தொலைவில்லாச்
சத்தமும் சோதிடமும் என்றாங் கிவைபிதற்றும்
பித்தரின் பேதையார் இல்.

நிலையாமை யியல்பும், பல பிணிகளும், மூப்புத் தன்மையும, இறப்புத் துன்பமும் இவ்வுடம்புக்கு உள்ளனவென்று நினைத்துச், சிறந்தோர் தமது கடமையாகிய தவமுயற்சியினைச் செய்வர் ; கற்றுமுடிதல் கூடாத இலக்கண நூலும் கோள்நூலும் என இவைபோல்வன கத்திக்கொண்டிருக்கும் பித்தரை விட அறிவிலாதார் பிறர் இல்லை.

**53.** இல்லம் இளமை எழில்வனப்பு மீக்கூற்றம்
செல்வம் வலிஎன் றிவையெல்லாம்—மெல்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்
தலையாயார் தாம்உய்யக் கொண்டு.

இல்வாழ்வு, இளமை, எழுச்சி, அழகு, உயர்சொல், பொருள், வலிமை என இப் பேறுகளெல்லாம் மெல்ல மெல்ல நிலையாமற் போதலை அறிந்து பெரியோர், தாம் உய்யுங் கருத்துக்கொண்டு காலம் நீட்டியாதவராய் உடனே இருவகைப் பற்றுந் துறப்பர்.

**54.** துன்பம் பலநாள் உழந்தும் ஒருநாளை
இன்பமே காமுறுவர் ஏழையார்—இன்பம்
இடைதெரிந் தின்னமை நோக்கி மனையா
றடைவொழிந்தார் ஆன்றமைந் தார்.

பல நாட்கள் துன்பத்தால் வருந்தியும் சிறிது போழ்து நுகரும் ஒரு நாளைய இன்பத்தையே அறிவிலார் விரும்புவர். கல்வி கேள்விகளால் நிறைந்து அதற்குத் தக்கபடி அடங்கி யொழுகும் பெரியோர், இன்பம் இடையிற் சிறிதே உளதாதல் தெரிந்தும் துன்பத்தின் மிகுதி நோக்கியும் இல்வாழ்க்கையின் வழியிற் சார்ந்து நிற்றல் நீங்கினர்.

55. கொன்னே கழிந்தன் றிளமையும் இன்னே
பிணியொடு மூப்பும் வருமால்—துணிவொன்றி
என்னொடு சூழா தெழுநெஞ்சே போதியோ
நன்னெறி சேர நமக்கு.

இளமைப் பருவமும் வீணே கழிந்தது; உடனே நோயுடன் கிழத்தனமும் வரும். ஆதலால், துணிவு பொருந்தி என்னோடு ஆராயாமற் புலன்களின் வழியிற் செல்லுகின்ற நெஞ்சமே! நமக்கு நல்வழி உண்டாக நீ என்னுடன் வருகின்றனையா?

56. மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமையால்—பூண்ட
மிடிஎன்னும் காரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடிஎன்றார் கற்றறிந் தார்.

திருமணம் ஆனபின், மாட்சிமைப்பட்ட குணத்தோடு குழந்தைப் பேறும் மனைவிக்கு இல்லை யென்றாலும், கொண்ட கணவன் அவளை விட்டுவிடுதற்கு அருமையாகுமாதலால், மேலும் அம் மனைவாழ்க்கையால் உண்டாகும் வறுமை யென்னுங் காரணமுங் கருதி, மேலான தவநெறிக்கண் நின்று திருமணத்தை நீக்கு என்று கற்றறிந்த சான்றோர் கூறினர்.

57. ஊக்கித்தாம் கொண்ட விரதங்கள் உள்ளுடையத்
தாக்கருந் துன்பங்கள் தாம்தலை வந்தக்கால்
நீக்கி நிறூஉம் உரவோரே நல்லொழுக்கம்
காக்கும் திருவத் தவர்.

தாம் முயன்று மேற்கொண்ட நோன்புகள் உள்ளத்தில் தளர்வடையும்படி போக்குதற்கரிய துன்பங்கள் தம்மிடம் வந்

*தடைந்தால் எப்படியானும் அத் துன்பங்களைப் போக்கித் தம் கோன்புகளை நிலைநிறுத்திக்கொள்ளும் வலிமையுடையாரே, துறவொழுக்கத்தினைக் காத்துக்கொள்ளும் பேறுடையாராவர்.*

**58.** தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்.

*காரணமின்றித் தம்மைப் பிறர் இகழ்ந்தமையைத் தாம் பொறுத்துக்கொள்வதல்லாமல், எம்போல்வாரை இங்ஙனம் இகழ்ந்த தீவினையின் பயனால் மறுமையில் ஒருகால் தீவாய் நரகத்தில் அவர் வீழ்வரோ என்று இரங்குவதும் தவம் நிறைந்தவரது கடமையாகும்.*

**59.** மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக்—கைவாய்க்
கலங்காமற் காத்துய்க்கும் ஆற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்.

*மெய் வாய் கண் மூக்குச் செவி எனப் பேர்பெற்ற ஐந்து வழிகளிற் செல்லும் பற்றுள்ளத்தாலுண்டாம் அவாவைத் தீயவழிகளில் நிலைமாறிச் செல்லாமற் பாதுகாத்து ஒழுக்க நெறியிற் செலுத்தும் வல்லமை யுடையவனே, தவறாமல் வீடுபேறடைவான்.*

**60.** துன்பமே மீதூரக் கண்டும் துறவுள்ளார்
இன்பமே காமுறுவர் ஏழையார்—இன்பம்
இசைதொறும் மற்றதன் இன்னாமை நோக்கிப்
பசைதல் பரியாதாம் மேல்.

வாழ்க்கையில் துன்பமே மேலுமேலும் மிகுந்துவருதல் உணர்ந்தும், பற்றில்லாமலிருத்தலை நினையாராய் மனவலிமை யில்லாதார் இடையே தினையளவாக உண்டாகும் இன்பமே விரும்பிநிற்பார்; ஆனல், அச் சிற்றின்பம் கிடைக்கும்போதெல் லாம் அதனல் உண்டாகும் பெருந்துன்பங் கருதி அதனை விரும் புதலை மேற்கொள்ளார் மேலோர்.

---

## 7. சினமின்மை

குற்றம் ஒருவனிடம் உண்டானகாலத்தும் சினங்கொள்ளாமை.

**61.** மதித்திறப் பாரும் இறக்க மதியா
மிதித்திறப் பாரும் இறக்க—மிதித்தேறி
ஈயும் தலைமேல் இருத்தலால் அஃதறிவார்
காயும் கதமின்மை நன்று.

தம்மைப் பொருள்செய்து நடப்பாரும் நடக்கட்டும்; அவ்வாறு பொருள் செய்யாது கீழ்ப்படுத்தி நடப்பாரும் நடக் கட்டும்; ஈயும் மிதித்து ஏறித் தலைமேல் இருத்தலினல், அந் நிலைமை தெரிந்து சிந்திக்குஞ் சான்றோர், எரிந்துவிழுஞ் சினமிலராயிருப்பது நல்லது.

**62.** தண்டாச் சிறப்பின்தம் இன்னுயிரைத் தாங்காது
கண்டுழி எல்லாம் துறப்பவோ—மண்டி
அடிபெயரா தாற்ற இளிவந்த போழ்தின்
முடிகிற்கும் உள்ளத் தவர்.

அடர்ந்து அடிதவருமல் அடுக்கி இழிவுநேர்ந்த காலங்களி லெல்லாம் தாம் மேற்கொண்ட காரியங்களை முடிக்கவேண்டும்

ஊக்கமுடைய நல்லோர், அழியாச் சிறப்பினையுடைய தமது இனிய உயிரைச் சிறிதே இடர் கண்ட நோய்களிலெல்லாம், பொறுத்துத் தாங்கிக்கொண்டிராமல் சினந்து விட்டுவிடுவார்களோ!

**63.** காவா தொருவன்தன் வாய்திறந்து சொல்லும்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால்—ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து.

அடக்காமல் சினத்தினால் ஒருவன் தன் வாய்விட்டுச் சொல்லிய சினச்சொல் என்றைக்கும் தன்னை வருத்துதலால், இடைவிடாமல் ஆய்ந்து பண்பட்ட கேள்வி ஞானத்தையுடையோர் எப்பொழுதும் மனம் வெதும்புதலால் அமைந்த சுடுமொழிகளைச் சினந்து சொல்லமாட்டார்கள்.

**64.** நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்—ஓர்த்ததனை
உள்ளத்தான் உள்ளி உரைத்துராய் ஊர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாம் கீழ்.

சமானமில்லாதவர்கள் தம்மைச் சமானமாகக் கருதிக் கொண்டு தகைமையல்லாத சொற்களைச் சொன்னால் சிறந்தவர்கள் மனம்புழுங்கிச் சினந்துகொள்ளமாட்டார்கள்; ஆனால், கீழ் மக்கள் அத் தகைமையற்ற சொல்லை ஆராய்ந்து மனத்தாற் பலகாலும் நினைத்து ஊரிலுள்ளவர்கள் கேட்கும்படி அங்கங்கும் சொல்லித் திரிந்து அதனால் மேன்மேலும் பெருகும் வெகுளியினால் உடம்பு துடித்து அருகிலிருக்குந் தூணில் மோதிக்கொள்வார்கள்.

65. இளையான் அடக்கம் அடக்கம் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்—எல்லாம்
ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

இளமைப் பருவமுடையோனது புலனடக்கமே அடக்க மெனப்படும். கிளைக்கும் பொருளில்லாதவனது ஈகையே பயனெனப்படும் ஈகையாம். அவைபோல, எதனையும் அழிக்கவல்ல வலிமை வாய்ந்த அறிவினையுடையோன், பொறுத்துச் சினம் ஆறும் பொறுமையே பொறுமை யெனப் படும்.

66. கல்எறிந் தன்ன கயவர்வாய் இன்னுச்சொல்
எல்லாரும் காணப் பொறுத்துய்ப்பர்—ஒல்லை
இடுநீற்றல் பைஅவிந்த நாகம்போல் தத்தம்
குடிமையான் வாதிக்கப் பட்டு.

மந்திரித்து இட்ட திருநீற்றினால் உடனே படம் சுருங்கிச் சினம் ஒடுங்கிய நல்ல பாம்பைப்போல் தங்கள் உயர்குல ஒழுக் கத்தால் தடை செய்யப்பட்டுக், கற்களை வீசினாற்போன்ற கீழ் மக்கள் வாயில் தோன்றிய துன்பச் சொற்களை அனைவரும் அறியப் பெரியோர் பொறுத்துக்கொண்டு தமது மேற்கோளை நடத்திச்செல்வர்.

67. மாற்றாராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
ஆற்றாமை என்றார் அறிவுடையார் —ஆற்றாமை
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்கால் தாம்அவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று.

தமக்குப் பகைவராயிருந்து பகை பாராட்டுகிறவர்கள் பொருட்டுத் தாமும் பகை மேற்கொள்ளாமையை, அறிவுடை

யோர் மாட்டாத தன்மை என்று சொல்லி இகழமாட்டார்கள். ஆதலால், அப் பகைவர்கள் தம்முடைய தீய தன்மைகளை அடக்கிக்கொள்ளமாட்டாமல் எதிர்த்துத் துன்பங்கள் செய்தால், தாமும் அவர்களுக்குத் திருப்பித் துன்பங்கள் செய்யாமையே நல்லது.

**68.** நெடுங்காலம் ஓடினும் நீசர் வெகுளி
கெடுங்காலம் இன்றிப் பரக்கும்—அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போல் தானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்.

நீண்டகாலஞ் சென்றாலும், கீழ்மக்கள் கோபம், தணியுங் காலம் இல்லாமலே பெருகிக்கொண்டுபோகும். ஆனால், காய்ச்சுங்காலத்தில் தண்ணீர் அடைந்த வெப்பத்தைப்போல் பெருமை மிக்க சான்றோரது கோபம் தானே தணிந்து விடும்.

**69.** உபகாரம் செய்ததனை ஓராதே தங்கண்
அபகாரம் ஆற்றச் செயினும்—உபகாரம்
தாம்செய்வ தல்லால் தவற்றினல் தீங்கூக்கல்
வான்தோய் குடிப்பிறந்தார்க் கில்.

தாம் முன்பு உதவிசெய்ததை நினையாமல் பிறர் தம்மிடம் தீமைகளை மிகுதியாகச் செய்தாலும் தாம் திரும்பவும் உதவி செய்வதல்லாமல் அவர் குற்றங் காரணமாக அவர்க்குத் தீங்கு செய்ய முயலுதல், உயர் குலத்தில் தோன்றிய மேலோர்களுக்கு இல்லை.

**70.** கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினர் ஈங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு.

நாய் சினம் மிகுந்து தமதுடம்பை வாயினற் கடித்துத் தசை பிடுங்குதல் கண்டும், அதற்கு எதிராகத் தமது வாயினல் நாயைத் திருப்பிக் கடித்தவர் இவ்வுலகில் இல்லை; அது போலத் தகுதியான சொல் அல்லாமல் கீழ்மக்கள் தாழ்வான சொற்களைச் சொன்னல், மேன்மக்கள் அத் தாழ்வான சொற்களையே தம் வாயினல் திருப்பிச் சொல்வார்களோ!

---

## 8. பொறையுடைமை

காரணங் கருதியாவது அறியாமையினலாவது பிறர் குற்றஞ் செய்தால், தாமும் அவர்க்கு அது செய்யாமல் பொறுமையுடையராயிருப்பது.

**71** கோதை யருவிக் குளிர்வரை நன்னட!
பேதையோ டியாதும் உரையற்க—பேதை
உரைப்பிற் சிதைந்துரைக்கும் ஒல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று.

மாலைபோல் விழுகின்ற அருவிகளையுடைய குளிர்ச்சி பொருந்திய நல்ல மலைகளையுடைய நாடனே! அறிவில்லாதவனேடு நன்மையாவதொன்றும் பேசவேண்டாம்; பேசினல், அப் பேதை முறைமை தவறி எதிர்பேசும்; கூடியவகைகளால், அவன் தொடர்பினின்று தப்பி நீங்குதலே நல்லது.

**72.** நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது
தாரித் திருத்தல் தகுதிமற்—றோரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலம்
சமழ்மையாக் கொண்டு விடும்.

தமக்கு நிகரல்லாதவர் குணமல்லாதன சொன்னல், சான்றோர் அதனைப் பொறுத்துத் தமது ஒழுக்கத்திலேயே நிலைத்

திருப்பது தகுதி ; அப்படியில்லாவிட்டால், அப் பொறுமை யின்மையைப் புகழ்க்குரிய குணமாகக் கொள்ளாமல் உலகம் பழிக்குரிய குணமாகக் கருதிவிடும்.

**73.** காதலாற் சொல்லுங் கடுஞ்சொல், உவந்துரைக்கும்
ஏதிலார் இன்சொலின் தீதாமோ—போதெலாம்
மாதர்வண் டார்க்கும் மலிகடல் தண்சேர்ப்ப !
ஆவ தறிவார்ப் பெறின்.

மலர்களிலெல்லாம் அழகிய வண்டுகள் ஆரவாரிக்கும் வளம் நிறைந்த கடலையுடைய குளிர்ச்சி பொருந்திய துறைவ! தனக்கு முன்னேற்றமாவதை அறிந்து செய்கின்றவர்களை ஒரு வன் நண்பராகப்பெற்றால், அவர்கள் அன்பினாற் சொல்லுங் கடுஞ்சொல், அகமகிழ்ந்துரைக்கும் அயலவரது இன்சொல்லி னும் தீதாகாது.

**74.** அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்பினர் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது.

நூல் வழக்கிலும் உலக வழக்கிலும் தெரிந்துகொள்ள வேண்டுவன தெரிந்து, அடக்கமுடையவராய் அஞ்சத்தக்க நிலைகளுக்கு அஞ்சிப் பொருந்துஞ் செயல்களை உலகம் பயன் கொண்டு மகிழும்படி செய்து அதனால் அடையும் ஊதியத்தி னளவில் மகிழ்ந்து வாழ்க்கை நடத்துந் தன்மையுடையவர், எப்போதும் துன்புற்று உயிர்வாழ்தலென்பது இல்லை.

**75.** வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா வொழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்,
ஆற்றுந் துணையும் பொறுக்க ; பொறானாயின்
தூற்றாதே தூர விடல்.

வேறுபாடில்லாமல் மனங்கலந்து இருவர் நேசிக்குமிடத்துத் தகுதியென்று தெளியப்படாத ஒழுக்கம் ஒருவனிடத்தில் உண்டானால், நண்பனாதலின் அதனைப் பொறுக்குமளவும் மற்றவன் பொறுக்க; அதற்குமேல் பொறுக்கக் கூடாதவனானால், அதனைப் பலரறியத் தூற்றாமலே அவனது தொடர்பைத் தொலைவில் விட்டுவிடுக.

76. இன்னா செயினும் இனிய ஒழிகென்று
தன்னையே தான்நோவி னல்லது—துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல், கானக நாட!
விலங்கிற்கும் விள்ளல் அரிது.

நண்பர் தனக்கு இன்னல் தருவன செய்தாலும் அவை இனியவாய் வந்து கழிக எனப் பொறுமையாய் நடந்து அதற்குக் காரணமான தனது முன்வினையை நினைந்து தன்னையே தான் நொந்துகொள்ளினல்லாமல், தன்னோடு நெருங்கி மனங்கலந்து பழகின அந் நண்பரை ஒருவன் கைவிடுதலென்பதோ, காடுகள் சிறந்த நாடனே! தாழ்ந்த விலங்குகளுக்கும் விட்டுவிடுதல் அருமையாகும். (ஆதலின் அது மக்கட்பண்பாகாது.)

77. பெரியார் பெருநட்புக் கோடல்தாம் செய்த
அரிய பொறுப்பஎன் றன்றே—அரியரோ
ஒல்என் அருவி உயர்வரை நன்னாட!
நல்லசெய் வார்க்குத் தமர்.

சான்றோர்களது மேன்மையாகிய நேயத்தை யாரும் விரும்பித் தேடிக்கொள்ளுதல், தாம் செய்துவிட்ட பெரிய குற்றங்களையும் அவர்கள் பொறுத்துக்கொள்வார்கள் என்று கருதியன்றோ! ஒல்லென்று ஒலிக்கும் அருவிகளையுடைய உயர்ந்த மலைகள் சிறந்த நல்ல நாட்டையுடையவனே! பிழை

யில்லாத நல்ல செயல்களையே செய்வோர்க்கு நண்பராவோர் அரியரோ ; பலராவர் ! (ஆகவே, பிழைபொறுக்கும் நட்பே பெருநட்பு என்பது.)

**78.** வற்றிமற் றற்றப் பசிப்பினும் பண்பிலார்க்
கற்றம் அறிய உரையற்க—அற்றம்
மறைக்குந் துணையார்க் குரைப்பவே தம்மைத்
துறக்குந் துணிவிலா தார்.

உடம்பிற் செந்நீர் சுண்டும்படி மிகப் பசித்தாலும் குணமில்லாதவர்க்கு யாருந் தமது இல்லாமையை அவர் அறியும்படி சொல்லவேண்டாம். அப்படிச் சொல்ல விரும்பினால், தம்மைத் துறவுநெறியிற் செலுத்துந் தெளிவினையில்லாதவர், தமது இல்லாமையை நீக்கும் உதவியாளர்க்கே சொல்லுவர். (எந்நிலையிலும் மதிப்போடு வாழ்க்கை நடத்துவது நல்லது.)

**79.** இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினும்
இன்பத்தின் பக்கம் இருந்தைக்க—இன்பம்
ஒழியாமை கண்டாலும் ஓங்கருவி நாட !
பழியாகா ஆறே தலை.

பெருகுகின்ற அருவிகளையுடைய நாடனே ! இன்பம் உண்டானவிடத்துத் தாழ்வுகள் நேர்ந்தாலும் இன்பத்தையே எண்ணி அச் செயலில் நிலைத்திருந்த நினக்கு, அதன்கண் பின்னும் பின்னும் இன்பம் இடையறாமை கண்டாலும், பழித்தலில்லாத வழியே சிறந்தது.

**80** தான்கெடினும் தக்கார்கே டெண்ணற்க தன்உடம்பின்
ஊன்கெடினும் உண்ணார்கைத் துண்ணற்க—வான்கவி
வையகம் எல்லாம் பெறினும் உரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்.

ஒருவன் தான் கெடுவதாயிருந்தாலும் அக் கேட்டினை நீக்கிக்கொள்ளும்பொருட்டுச் சான்றோர் கெடுதலை எண்ணு திருக்கக்கடவன்; தனதுடம்பின் தசை பசியால் உலர்வ தாயினும் நுகரத் தகாதவாது பொருளை நுகாாமலிருக்கக் கடவன்; வானத்தாற் கவியப்பெற்றிருக்கும் உலகம் முழுமையும் பெறுவதாயிருந்தாலும், தனது பேச்சினிடையிற் பொய்யொடு கலந்த சொற்களைச் சொல்லாம லிருப்பானாக!

---

## 9 பிறர்மனை நயவாமை

காம மயக்கத்தாற் பிறர் மனைவியரை விரும்பாமை.

**81.** அச்சம் பெரிதால், அதற்கின்பம் சிற்றளவால்,
நிச்சம் நினையுங்காற் கோக்கொலையால்,—நிச்சலும்
கும்பிக்கே கூர்த்த வினையால், பிறன்தாரம்
நம்பற்க நாணுடை யார்.

அச்சம் பெரிதாதலாலும், அதற்கு அமையும் இன்பம் சிற்றளவாதலாலும், நினைக்குமிடத்துத் தண்டனை உறுதியாக அரசனது கொலைக்கட்டளையாதலாலும், நாடோறும் அழல்வாய் நரகுக்கே உருவாகிய செயலாதலாலும், பழிபாவங்களை அஞ்சுவோர், பிறன் மனைவியை விரும்பாதிருப்பாராக!

**82.** அறம்புகழ் கேண்மை பெருமைஇந் நான்கும்
பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா—பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவம்என்
றச்சத்தோ டிந்நாற் பொருள்.

புண்ணியம் புகழ் தக்காருறவு பெருமிதம் என்று இந் நான்கும் பிறன் மனைவியை விரும்புவாரிடத்துச் சேரமாட்டா.

பிறன்மனைவியை விரும்புவாரிடத்தில் பாவமும் பழியும் பகையும் அச்சமும் என்று இந் நான்கு பொருளும் சேரும்.

**83.** புக்க விடத்தச்சம் போதரும்போ தச்சம்
துய்க்கு மிடத்தச்சம் தோன்றுமற் காப்பச்சம்
எக்காலும் அச்சம் தருமால் எவன்கொலோ
உட்கான் பிறன்இல் புகல்.

புகும்போது அச்சம்; திரும்பி வரும்போது அச்சம்; நுகரும்போது அச்சம்; பிறர்க்குத் தெரியாமற் காத்துக் கொள்ளுதல் அச்சம்; இவ்வாறு எப்போதும் அச்சந் தரும். ஏனோ, இவற்றைக் கருதானாய் ஒருவன் பிறன் மனைவியை விரும்பியொழுகுதல்!

**84.** காணின் குடிப்பழியாம் கையுறின் கால்குறையும்
ஆணின்மை செய்யுங்கால் அச்சமாம்—நீள்நிரயத்
துன்பம் பயக்குமால்; துச்சாரி! நீ கண்ட
இன்பம் எனக்கெனைத்தால் கூறு.

பிறர் கண்டுவிட்டால் குடிப்பழிப்பாம். கையில் அகப் பட்டுக்கொண்டால் கால் ஒடியும்; ஆண்மையில்லாமையாகிய இப் பிறமனை புகுதலைச் செய்யுங்கால் அச்சம் நிகழும். நெடுங் கால நிரயத் துன்பத்தை உண்டுபண்ணும். தீயொழுக்கமுடை யோய்! நீ நுகர்ந்த இன்பம் இதில் எவ்வளவு? எனக்குச்சொல்.

**85.** செம்மையொன் றின்றிச் சிறியா ரினத்தராய்க்
கொம்மை வரிமுலையாள் தோள்மரீஇ—உம்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே இம்மை
அலியாகி ஆடிஉண் பார்.

நடுநிலையென்னுங் குணம் சிறிதுமின்றிக் கீழ்மக்களினத் தைக் கூடியவராய்ப் பெண்களின் தோள் தழுவ விரும்பி

முற்பிறப்பில் தமக்கிருந்த பொருள் முதலிய வலிமையாற் பிறர் மனைவியர்பாற் சென்றவரே, இப்பிறப்பில் அவ் வாண் தன்மையிழந்து அலியாகி முன் நிலையு மிழந்து தெருக்களிற் கூத்தாடி வயிறு பிழைப்போராவர்.

**86.** பல்லார் அறியப் பறையறைந்து நாள்கேட்டுக்
கல்யாணம் செய்து கடிப்புக்க—மெல்லியல்
காதல் மனையாளும் இல்லாளா என்ஒருவன்
ஏதில் மனையாளை நோக்கு.

நல்ல நாள் கேட்டறிந்து அந் நன்னாளிற் பலரும் அறியும்படி மண முரசு கொட்டித் திருமணம் செய்து தனது காவலிற் புகுந்த மெல்லியலான காதல் மனையாளும் இல்லத்தில் இருப்பவளாக, என் ஒருவன் அயலான் மனைவியைக் கருதுதல்?

**87.** அம்பல் அயல்எடுப்ப அஞ்சித் தமர்பரீஇ
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று—நம்பும்
நிலைமைஇல் நெஞ்சத்தான் துப்புரவு பாம்பின்
தலைநக்கி யன்ன துடைத்து.

அயலார் பழியெடுக்க, அதனால் தன்னைத் தடுப்பதொன்று அஞ்சித் தன் உறவினரினின்றும் நீங்கி, அயலான் மனைவியைச் சேர்ந்து களிப்புற்று எவராலும் நம்புதற்குரிய நிலைமையில்லாத நெஞ்சமுடையவனது அக் காம நுகர்ச்சி, மழமழப்பான பாம்பின் தலையை நாவினால் தடவி இன்புற்றதைப் போன்ற ஆபத்துடையது.

**88.** பரவா வெளிப்படா பல்லோர்கண் தங்கா
உரவோர்கண் காமநோய் ஓஒ கொடிதே ;
விரவாருள் நாணுப் படல்அஞ்சி யாதும்
உரையாதுள் ஆறி விடும்.

அறிஞர்களிடத்திற் காம நினைவுகள் பரவமாட்டா; ஒரோவொருகாற் பரவினாலும் அவை வெளிப்படமாட்டா. அப்படி வெளிப்பட்டாலும், அவர்கள் உரிமை மனைவியரிடத் தன்றி அயல் மாதரார் பலரிடத்துஞ் சென்று நில்லா. அறிவுடையவர்களிடம் காமநோய் ஓ, கொடுமையுடையது! அவ்வாறு அவர்கள் மனைவியரிடத்தே சென்று நின்றாலும், மனைவியர் அந் நினைவு கலவாதவராயிருப்பின், அப்போது அவ்வறிஞர்கள் நாணப்படுதற்குப் பின்னிடைந்து, சிறிதும் வெளிப்படாமல் உள்ளேயே தணிந்துவிடும்.

**89.** அம்பும் அழலும் அவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறம்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காமம்
அவற்றினும் அஞ்சப் படும்.

அம்பும், தீயும், ஒளிர்கின்ற கதிர்களையுடைய சூரியனும் வெம்பிச் சுடினும் வெளிப்பொருளையே சுடும்; ஆனால், காமம் என்பது, வெதும்பிக் கவலைப்படுத்தி உள்ளத்தைச் சுடுதலால் அவற்றினும் அஞ்சப்படும்.

**90.** ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு
நீருள் குளித்தும் உயலாகும்—நீருள்
குளிப்பினும் காமம் சுடுமேகுன் றேறி
ஒளிப்பினும் காமம் சுடும்.

ஊர் நடுவிற் பற்றியோங்கிய அச்ச மிக்க செந்தழலுக்கு அருகிலிருக்கும் நீர்நிலைகளிற் குளித்தும் பிழைத்தல் கூடும்; ஆனால், நீருள் மூழ்கினும் காமம் எரிக்கும்; மலையேறி ஒளிப்பினும் காமம் எரிக்கும்.

## 10. ஈகை

*வறியார்க்கு ஒன்று ஈதல்.*

**91.** இல்லா விடத்தும் இயைந்த அளவினால்
உள்ள விடம்போல் பெரிதுவந்து—மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையாவாம் ஆண்டைக் கதவு.

*பொருள் இல்லாத காலத்திலும் உள்ள காலம்போல் மிக மகிழ்ந்து, கூடிய அளவினால் அமைதியாக ஒருவர்க்கு ஒன்று கொடுத்தலோடு பொருந்திய இரக்க குணத்தையுடைய நன்மக்களுக்குத், துறக்க வுலகத்துக் கதவுகள் மூடியிரா.*

**92.** முன்னரே சாநாள் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கும் நோயுள—கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

*அருவருத்தற்குரிய கிழப்பருவமும் இறக்கும் நாளும் எதிரிலேயே உள்ளன; அல்லாமலும், வலிமை குலைக்கும் நோய்களும் வாவிருக்கின்றன; ஆதலால், செல்வம் உண்டாகுங் காலத்தில், வீணாக மேலுமேலுந் தேட அலையாதிருங்கள்; இறுக்கிப் பிடியாதிருங்கள்; பலர்க்கும் பகுத்து உண்ணுங்கள்; சிறிதும் ஒளியாதிருங்கள்.*

**93.** நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தாம் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்
இடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்.

*பிறர்க்குக் கொடுத்துத் தாமும் நன்றாக நுகர்ந்தாலும், செல்வம், திரளுதற்குரிய காலத்தில் மேலுமேலுந் திரளும்;*

நல்வினை முடிந்துவிட்டபோது அதனை எவ்வளவுதான் இடுக்கிப் பிடிப்பினும் அது நில்லாமல் தனது தொடர்பை நீக்கிக் கொள்ளும். இவ்வுண்மையை அறியாதார், வறுமைத் துன்பத்துக்கு அஞ்சித் தம்மை அடைந்தவர்களின் இன்னலைப் பொருள் கொடுத்துத் தீர்க்கமாட்டார்கள்.

**94.** இம்மி யரிசித் துணையானும் வைகலும்
நும்மில் இயைவ கொடுத்துண்மின்—உம்மைக்
கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்
தடாஅ அடுப்பி னவர்.

'இம்மி யரிசி' எனப்படும் ஒருவகைச் சிறிய அரிசியின் அளவேனும் நாடோறும், உமக்குக் கூடியன பிறர்க்குக் கொடுத்துப் பின் உண்ணுங்கள். ஏனென்றால், கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் சமைத்தலில்லாத அடுப்பினையுடைய வறியவர்கள் முற்பிறப்பிற் பிறர்க்கு ஒன்று உதவாதவர்கள் என்று தெரிந்தோர் சொல்லுவர்.

**95.** மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவர்க்
குறுமா றியைவ கொடுத்தல்—வறுமையால்
ஈதல் இசையா தெனினும் இரவாமை
ஈதல் இரட்டி யுறும்.

இம்மை மறுமை நிலைகள் கருதி ஒருவருக்குத் தக்க முறையில் இயன்ற பொருள்களைக் கொடுக்கவேண்டும்; கொடுப்பது வறுமையால் இயலாதாயினும், பிறர்பால் இரவாமலிருப்பது அதைவிட இருமடங்கு மேம்பட்டதாகும்.

**96.** நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றைப் பனை.

பலருந் தம்மை விரும்பி அணுகும்படி வள்ளன்மையுடன் வாழ்வோர், ஊர்நடுவில் மேடையினால் சூழ்ந்துகொள்ளு தலைப் பொருந்திக் காய்க்கும் பெண்பனையை ஒப்பர்; தமது குடி செல்வமிக்க காலத்தும் பிறர்க்கு வழங்கியுண்ணாத மாக்கள், சுடுகாட்டில் நிற்கும் காய்த்தலில்லாத ஆண்பனையாவர்.

**97.** பெயற்பால் மழைபெய்யாக் கண்ணும் உலகம்
செயற்பால செய்யா விடினும்—கயற்புலால்
புன்னை கடியும் பொருகடல் தண்சேர்ப்ப!
என்னை உலகுய்யு மாறு.

கயல்மீனின் புலால் நாற்றத்தைப் புன்னை தனது மலர் மணத்தால் நீக்குகின்ற அலைமோதுங் குளிர்ந்த கடற்கரையினை யுடைய தலைவனே, பெய்தற்குரியதான மழை பெய்யாவிட்டா லும், உயர்ந்தோர் பிறர்க்குச் செய்தற்குரிய உதவிகளைச் செய்யாவிட்டாலும் உலகம் பிழைக்கும் வகை எவ்வாறு!

**98.** ஏற்றகை மாற்றாமை என்னானும் தாம்வரையார்
ஆற்றாதார்க் கீவதாம் ஆண்கடன்—ஆற்றின்
மலிகடல் தண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகடன் என்னும் பெயர்த்து.

வளம்நிறைந்த கடலின் குளிர்ந்த கரையையுடைய தலை வனே! ஒருவர்க்கு ஒன்று உதவுவதானால், இரந்த கையை மறா மல் இயன்றதை வேறுபாடின்றிக் கைம்மாறு செய்ய இயலாத வறிஞர்க்கு உதவுவதே ஓர் ஆண் மகனின் கடமையாகும். எதி ருதவி செய்வார்க்கு ஒன்று உதவுதல், 'எல்லார்க்குந் தெரிந்த கடன்' என்னும் பெயருடையது.

**99.** இறப்பச் சிறிதென்னா தில்லென்னா தென்றும்
அறப்பயன் யார்மாட்டுஞ் செய்க—முறைப்புதவின்
ஐயம் புகூஉந் தவசி கடிஞைபோற்
பைய நிறைத்து விடும்.

நம்மிடமிருப்பது மிகவுஞ் சிறியதென்று கருதாமலும் இல்லையென்று மறுத்துவிடாமலும் எப்போதும், பயனுடைய தான அறத்தை அனைவரிடத்துஞ் செய்து வருக. வாசற்படி தோறும் ஐயம்பகும் தவசியின் உண்கலத்திற்போல, அறப் பயனை அச் செயல் மெல்ல மெல்ல நிறைவாக்கிவிடும்.

**100.** கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்
அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர்
கொடுத்தா ரெனப்படும் சொல்.

குறுங்கோலால் அடிக்கப்படுங் கண்போன்ற இடத்தை யுடைய முரசின் ஒலியைக் காத எல்லை வரையிலுள்ளோர் கேட்பர்; இடித்து முழங்கிய மேகத்தினொலியை ஓர் யோசனை எல்லை வரையிலுள்ளோர் கேட்பர்; 'இவர் உதவி செய்தவர்' என்று சான்றோரால் மகிழ்ந்து கூறப்படும் புகழ்மொழி, அடுக் காக உள்ள மூன்று உலகமுங் கேட்கும்.

---

## 11. பழவினை

முற்பிறப்பில் செய்த வினைகளின் விளைவு.

**101.** பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு.

பல ஆக்களினிடையிற் செலுத்திவிடப்பட்டாலும் இளங் கன்று தன் தாயைத் தேடி அடைந்துகொள்வதில் வல்லமை யுடையதாயிருக்கின்றது! பிறவிதோறும் தொடர்ந்துவரும்

பழவினையும், தன்னை அப் பிறப்புக்களிற் செய்த உரிமையாளனை இப் பிறப்பிற் பல உயிர்களினிடையில் தவறாது தேடிச் சென்றடையும் வகையில் அத்தகைய தன்மையுடையதேயாம்.

**102.** உருவும் இளமையும் ஒண்பொருளும் உட்கும்
ஒருவழி நில்லாமை கண்டும்—ஒருவழி
ஒன்றேயும் இல்லாதான் வாழ்க்கை உடம்பிட்டு
நின்றுவீழ்ந் தக்க துடைத்து.

தோற்றமும், இளமை நிலையும், மேன்மைச் செல்வமும், நன்மதிப்பும் உலகில் எல்லாரிடமும் ஒரே வகையாகப் பொருந்தாமையை நேரிற் கண்டுவைத்தும், இதற்குக்காரணம் நல்வினையால் நன்னிலைகள் உண்டாதலேயென அறிந்து முற்பிறவியில் ஏதாவது ஒரு வகையில் ஒரு நல்வினையையாவது செய்துவையாதவனது வாழ்க்கை, இப் பிறவியில் வீணாக உடம்பு தோன்றி நின்று விழுந் தன்மையையே யுடையது.

**103.** வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை ;
அளந்தன போகம் அவரவ ராற்றால் ;
விளங்காய் திரட்டினார் இல்லை ; களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல்.

செழுமைபெற விரும்பாதவர் உலகில் ஒருவருமில்லை ; ஆனால், இன்ப நுகர்வு அவரவர் பழவினை வழியே அளவு செய்யப்பட்டுள்ளன. விளங்காயை உருண்டை வடிவினதாக அமைத்தவருமில்லை ; களம்பழத்தைக் கரிய உருவினதாகச் செய்தவருமில்லை. (ஆதலின், எதுவும் முன் முறைமைப்படி அமைவதே இயல்பு.)

**104.** உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா
பெறற்பா லனையவும் அன்னவாம் ; மாரி
வறப்பின் தருவாரும் இல்லை : அதனைச்
சிறப்பின் தணிப்பாரும் இல்.

உருத்துவருந் தீவினைகளை நீக்குதல் சான்றோர்க்கும் ஆகாது. அங்ஙனமே அடைந்தின்புறற்குரிய நன்மைகளும் அப் பெரியோர்களால் தடைசெய்தற்குரியன அல்லவாம். மழை பெய்யாதொழியின் அதனைப் பெய்விப்பாருமில்லை ; மிகப் பெய்யின் அதனைத் தணிப்பாரும் இல்லையாதல் போல வென்க.

**105.** தினைத்துணைய ராகித்தம் தேசுஉள் அடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்
நினைப்பக் கிடந்த தெவனுண்டாம் மேலை
வினைப்பய னல்லாற் பிற.

பனையளவு பெருமையுடையோர் சிலர், நாடோறும் பெருமை குறைந்து தினையளவினராய்ச் சிறுத்துத், தம் மேன்மையை உள்ளத்து அடக்கி உலகில் உயிர்தாங்கி யிருக்கின்றனர்; இதற்குக் காரணம் முன்னை வினைப்பயனல்லால் வேறு கருதக் கிடந்தது யாதுண்டு!

**106.** பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவும்
கல்லாதார் வாழ்வ தறிதிரேல்—கல்லாதார்
சேதன மென்னுமச் சேறகத் தின்மையால்
கோதென்று கொள்ளாதாம் கூற்று.

பலவகைப்பட்ட பரந்த நூற்கேள்விகளின் பயனை அறிந்தொழுகுங் கற்றோர் விரைவில் இறக்கவும், கல்லாதார் உலகில் நீடுவாழ்வது எங்ஙனமென்று கருதுவீர்களானால், அதற்குக் காரணம், அறிவென்னும் அப் பிழிவு கல்லாதார் உள்ளத்தில் இல்லாமையால் அவர்கள் வெறுங் கோது எனக் கருதிக் கூற்றுவன் கழித்துவிடுவான் என்பது.

**107.** இடும்பைகூர் நெஞ்சத்தார் எல்லாருங் காண
நெடுங்கடை நின்றுழல்வ தெல்லாம்—அடம்பம்பூ
அன்னம் கிழிக்கும் அலைகடல் தண்சேர்ப்ப !
முன்னை வினையாய் விடும்.

அடம்பங் கொடியின் மலரை அன்னப் பறவைகள் கோதுகின்ற அலைமோதுங் கடலின் குளிர்ந்த துறைவனே! மக்களிற் சிலர் துன்பம் மிக்க உள்ளத்தராய், எல்லாருங் காணும்படி பெரிய வீடுகளின் நெடிய தலைவாயிலில் நின்று பிச்சையேற்றுழல்வதெல்லாம், ஆய்ந்து நோக்குங்கால், பழவினைப் பயனாகவே முடிந்து நிற்கும்.

**108.** அறியாரும் அல்லர் அறிவ தறிந்தும்
பழியோடு பட்டவை செய்தல்—வளியோடி
நெய்தல் நறவுயிர்க்கும் நீள்கடல் தண்சேர்ப்ப!
செய்த வினையான் வரும்.

காற்று வீசி நெய்தல் மலர் தேன் சிந்துகின்ற பரந்த தண்ணிய கடற்கரையின் தலைவனே! மக்களிற் சிலர் அறியாதாருமல்லராய் அறியத் தக்கதை அறிந்தும், பழியோடு கூடிய தீச் செயல்களைச் செய்தல் முன்செய்த தீவினையால் நேர்வதாகும்.

**109.** ஈண்டுநீர் வையத்துள் எல்லாரும் எத்துணையும்
வேண்டார்மன் தீய; விழைபயன் நல்லவை
வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது.

மிக்க நீரையுடைய கடலாற்சூழப்பட்ட உலகத்தில், யாரும் சிறிதும் துன்பந்தருந் தீயவற்றை விரும்பமாட்டார்கள்; எல்லாரும் எவ்வளவும் விரும்புகின்ற பயன்கள் இன்பந்தரும் நல்லனவே. மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர்கள் பால் வந்து பொருந்துதற்குரியன பொருந்தாதொழிதல் இல்லை.

**110.** சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
உறுகாலத் தூற்றுகா ஆமிடத்தே ஆகும்
சிறுகாலைப் பட்ட பொறியும் அதனால்
இறுகாலத் தென்னை பரிவு.

பிறவித் தொடக்கத்திலேயே அமைந்த ஊழ்வினைகளும் குறையமாட்டா; மிகமாட்டா; முறைமாறிப் பொருந்தமாட்டா; உற்ற காலத்தில் உதவியாகமாட்டா; உதவியாதற்குரிய காலத்தில் உதவியாகும்; ஆதலால், ஊழ்வினையாற் கெடுங்காலத்தில் வருந்துவது என் ?

---

## 12. மெய்ம்மை

மெய்ம்மையாவது, ஒன்றன் இயற்கைத் தன்மை ; ஈண்டு, உலகத்தின் இயல்பு இத்தகையதென்றபடி.

**111.** **இசையா ஒருபொருள் இல்என்றல் யார்க்கும்**
**வசையன்று வையத் தியற்கை—நசைஅழுங்க**
**நின்றோடிப் பொய்த்தல் நிரைதொடீஇ ! செய்ந்நன்றி**
**கொன்றாரின் குற்ற முடைத்து.**

கொடுக்க இயலாத ஒரு பொருளை இரப்போர்க்கு இல்லையென்று கூறிவிடுதல் யார்க்கும் பழியாகாது ; அஃது உலகத் தியற்கை. மற்று, ஆசையால் அவர் நையும்படி, உதவுவார்போல் தோன்றிக் காலம் நீட்டித்துப் பின்பொய்த்துவிடுதலோ, வரிசையொழுங்காக அமைந்த வளையல்களை அணிந்த மாதே ! பிறர் செய்த நன்றியை அழித்தாரது குற்றத்தைப்போலத் தீதுடைத்தாகும்.

**112.** **தக்காரும் தக்கவ ரல்லாரும் தம்நீர்மை**
**எக்காலும் குன்றல் இலராவர்—அக்காரம்**
**யாவரே தின்னினும் கையாதாம் கைக்குமாம்**
**தேவரே தின்னினும் வேம்பு.**

சான்றோரும் சான்றவரல்லாதாரும் தம் இயல்புகள் எப்பொழுதும் குறைதல் இலராவர். கருப்பங் கட்டியை யார் தின்

றாலுங் கைக்காது. தேவரே தின்றாலும் வேப்பங்காய் கசக்கும். (நல்லோருந் தீயோரும் அவரவரியல்பை எந்நிலையிலுங் காட்டிக் கொண்டேயிருப்பர்.)

**113.** காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனின் பலராவர்—ஏலா
இடர்ஒருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட!
தொடர்புடையேம் என்பார் சிலர்.

சாய்கால் உண்டான காலத்தில், மேலே வானத்தில் விளங்குகின்ற விண்மீன்களைப்போல நெருங்கிய உறவினர் பலராவர்! ஒவ்வாத வறுமையை ஒருவர் அடைந்தால், அக்காலத்தில் தொடர்புடையோம் என்று உரிமை பாராட்டுவார் சிலராவர்.

**114.** வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்;
நடுவண தெய்தாதான் எய்தும் உலைப்பெய்து
அடுவது போலுந் துயர்.

குற்றமில்லாத உலகத்தில் இன்றியமையாதனவாய்ப் பொருந்திய அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று உறுதிப் பொருள்களுள், நடுவில் நின்றதான 'பொருள்' என்பதை ஒருவன் அடைய, அவன் அதுகொண்டு அதன் இருபுறமுமுள்ள அறத்தையும் இன்பத்தையும் அடைந்து மகிழ்வான். அவ்வாறு நடுவணதான செல்வத்தை அடையாதவன், கொல்லன் உலைக்களத்தில் இரும்பை இட்டுக் காய்ச்சுவதுபோலும் வறுமைத் துன்பத்தை அடைந்து நைவான்.

**115.** நல்ஆவின் கன்றாயின் நாகும் விலைபெறூஉம்
கல்லாரே யாயினும் செல்வர்வாய்ச் சொல்செல்லும்
புல்லீரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்
செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல்.

உயர் இனத்து ஆவின் கன்றாயின், இளங்கன்றும் மிக்க விலைபெறும்; ஆதலின், படிப்பில் இளையரேயாயினும் செல்வாது வாய்ச்சொல் மதிக்கப்படும். வறிஞரது வாய்மொழியோ அவர் கற்றவராயினும் சிறிது ஈரமுள்ள காலத்தில் உழுகின்ற உழவே போல் மேலளவாய்ச் சென்று அகத்தால் மதிக்கப்படா தொழியும்.

**116.** இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார்—தடங்கண்ணாய்
உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்தடினும்
கைப்பரு பேய்ச்சுரையின் காய்.

விரிவு மிக மெய்யுணர்வு நூல்களை என்றுங் கற்பினும், இயல்பாக அமைந்தொழுகாதவர் என்றும் அமைந்தொழுகார்; அகன்ற கண்களையுடைய மாதே! உப்போடு நெய் பால் தயிர் பெருங்காயம் இட்டுச் சமைத்தாலும், பேய்ச்சுரையின் காய்கள் தம் கசப்பியல்பு நீங்கா.

**117.** தம்மை இகழ்வாரைத் தாம்அவரின் முன்இகழ்க
என்னை அவரொடு பட்டது?—புன்னை
விறல்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப!
உறற்பால யார்க்கும் உறும்.

தம்மைப் புறக்கணிப்பவரை அவரினும் முற்படத் தாம் புறக்கணிக்க; என்ன அவரோடு உண்டான தொடர்பு! புலால் நாற்றங் கடியும் வெற்றி வாய்ந்த புன்னையின் மலர் மணங் கமழ்கின்ற சோலைகளையுடைய கடற்கரைத் தலைவ! வரற்குரிய நன்மை தீமைகள் யார்க்கும் வரும்; (ஆதலின், அதற்காகத் தம் கண்ணியம் குறைந்தொழுகவேண்டாம்.)

118. ஆவே றுருவின ஆயினும் ஆபயந்த
பால்வே றுருவின அல்லவாம்—பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி ஆபோல்
உருவு பலகொளல் ஈங்கு.

ஆக்கள் வேறுவேறு நிறத்தனவாயினும் அவ்வாக்கள் உதவிய பால்கள் அவ்வாறு வேறுவேறு நிறத்தன அல்ல ; பாலைப் போல் அறம் ஒரே தன்மையையுடையதாகும் ; இவ்வுலகில் அவ்வறத்தை ஆற்றும் முறைகள், ஆக்களைப்போல் பல செயல்களாக உருக்கொள்ளற்குரியது. (ஆதலால், இயன்ற செயல்களின் வாயிலாக அறத்தைத் தேடிக்கொள்ளுதல் வேண்டும்.)

119. யாஅர் உலகத்தோர் சொல்இல்லார் தேருங்கால்
யாஅர் உபாயத்தின் வாழாதார்—யாஅர்
இடையாக இன்னாத தெய்தாதார் யாஅர்
கடைபோகச் செல்வம்உய்த் தார்.

உலகியலை ஆராயுமிடத்து, உலகத்தில் ஒரு பழிச்சொல் இல்லாதவர் யார் ? யாதானும் ஒரு தொழிலேதுவினால் உலகில் வாழாதவர் யார் ? வாழ்வினிடையே இடர் அடையாதவர் யார் ? முடிவுவரையிற் செல்வத்தை நுகர்ந்தவர் யார் ? (இன்ப துன்பங்கள் கலந்து வருவதே உலக இயற்கை.)

120. தாம்செய் வினையல்லால் தம்மொடு செல்வதுமற்
றியாங்கணும் தேரின் பிறிதில்லை—ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த உடம்பும் பயம்இன்றே
கூற்றம்கொண் டோடும் பொழுது.

ஆராய்ந்தால், தாம் செய்த நல்வினை தீவினைகளல்லாமல் தம் உயிரோடு துணை வருவது எப் பிறவியிலும் பிறிதெதுவுமில்லை. கூற்றுவன் உயிரைப் பிரித்தெடுத்துக்கொண்டு செல்

லும்பொழுது, அதுகாறுந் தாம் பாதுகாத்து அழகுகள் செய்து கொண்ட உடம்பும் அவ்வாறே பயனிலதாயிற்று.

---

## 13. தீவினையச்சம்

*தீவினை செய்தற்கு அஞ்சுதல்.*

**121.** துக்கத்துள் தூங்கித் துறவின்கண் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலங்கெட்ட
புல்லறி வாளர் வயிறு.

உலகத்திலுள்ள சுடுகாடுகள், வாழ்க்கைத் துன்பங்களிற் கிடந்தழுந்தி அவற்றினின்று நீங்குதற்குரிய துறவற நெறியிற் சார்ந்தொழுகமாட்டாத கீழ் மக்களின் பிணங்களை உடையன; ஆனால், நல்லறிவுகெட்ட புல்லறிவாளர்களின் வயிறுகளோ, தொகுதியான விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இடுகாடுகளாயிருக்கின்றன.

**122.** இரும்பார்க்குங் காலராய் ஏதிலார்க் காளாய்க்
கரும்பார் கழனியுட் சேர்வர்—சுரும்பார்க்கும்
காட்டுளாய் வாழும் சிவலும் குறும்பூழும்
கூட்டுளாய்க் கொண்டுவைப் பார்.

வண்டுகள் ஆரவாரிக்கும் இனிய காட்டிலிருந்து கவுதாரியையும் காடையையும் பிடித்துக் கொண்டுவந்து கூட்டில் இருந்து வருந்தும்படி சிறை வைப்பவர், இருப்பு விலங்குகளாற் பூட்டப்பட்ட கால்களை யுடையராகவேனும் அயலார்க்கு அடிமைப்பட்டவர்களாகவேனுங் கட்டுப்பட்டு, வலிய பார் நிலத்திலாதல் விளை நிலத்திலாதல் போய்த் தொழில்செய்து உழல்வர்.

**123.** அக்கேபோல் அங்கை ஒழிய, விரலழுகித்
துக்கத் தொழுநோய் எழுபவே—அக்கால்
அலவனைக் காதலித்துக் கால்முரித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்,

முற்பிறப்பில் நண்டின் ஊனை விரும்பி அதன் கால்களை ஒடித்துத் தின்ற பழவினை இப்போது வந்தடைந்தால், அவ்வாறு முன் ஒடித்துத் தின்றவர், சங்கு மணிகள்போல வெண்ணிறமாய் உள்ளங்கைகள் மட்டுமிருக்க, ஏனை விரல்களெல்லாம் அழுகிக் குறைந்து துன்பத்துக்கேதுவான தொழுநோய் உண்டாகப் பெறுவர்.

**124.** நெருப்பழல் சேர்ந்தக்கால் நெய்போல் வதூஉம்
எரிப்பச்சுட் டெவ்வநோய் ஆக்கும்—பரப்பக்
கொடுவினைய ராகுவர் கோடாரும் கோடிக்
கடுவினைய ராகியார்ச் சார்ந்து.

உடம்பிற்கு நன்மை செய்யும் நெய்யும், நெருப்பின் அழற்சியைப் பொருந்தினால், எரிந்து தீயும்படி சுட்டு மிக்க வருத்தந் தரும் நோயை உண்டாக்கும். அவ்வாறே, நெறி கோணாத நல்லோரும், தீவினையராயினாரைச் சார்ந்து அதனால் நெறிகோணி மிக்க கொடுந் தொழிலுடையராவர்.

**125.** பெரியவர் கேண்மை பிறைபோல் நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

சான்றோர் நட்புப், பிறைத் திங்களைப்போல் ஒவ்வொரு நாளும் முறைமுறையே வளரும். கீழோர் உறவு வானத்தில் தவழ்கின்ற முழுத் திங்களைப்போல் ஒவ்வொரு நாளும் முறை முறையாகத் தானே தேய்ந்தொழியும்.

126. சான்றோர் எனமதித்துச் சார்ந்தாய்மன் சார்ந்தாய்க்குச்
சான்ருண்மை சார்ந்தார்கண் இல்லாயின்—சார்ந்தோய்கேள்
சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
பாம்பகத்துக் கண்ட துடைத்து.

*நீ சிலரைக் குண நிறைந்தவர் என மதித்து மிகுதியும் உறவு கொள்கின்றனை; அவ்வாறு உறவுகொள்ளும் நினக்கு நீ சார்வோரிடத்தில் குண நிறைவு காணப்படாதாயின், ஆராயா மல் உறவு கொள்வோனே! கேள்; அச்செயல், சந்தனம் உள்ளே இருக்கின்றதென்று கருதிச் சிமிழைத் திறந்து, ஒருவன், பாம்பை அதனுள் கண்டாற்போன்ற தன்மை யுடையது.*

127. யாஅர் ஒருவர் ஒருவர்தம் உள்ளத்தைத்
தேருந் துணைமை உடையவர்—சாரல்
கனமணி நின்றிமைக்கும் நாடகேள், மக்கள்
மனம்வேறு செய்கையும் வேறு.

*எவரொருவர் ஒருவரது உள்ளத்தைத் தேர்ந்து துணியும் ஆற்றலுடையவர்? மலைச்சாரலில் பெரிய மாணிக்க மணிகள் கிடந்து ஒளிவிடும் நாடனே! கேள்; உலகத்தில் மக்களின் உள்ளமும் வேறு, செய்கையும் வேருய் இருக்கின்றதே!*

128. உள்ளத்தான் நள்ளா துறுதித் தொழிலராய்க்
கள்ளத்தான் நட்டார் கழிகேண்மை—தெள்ளிப்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட!
மனத்துக்கண் மாசாய் விடும்.

*அகத்தால் நேயங் கொள்ளாமல், ஆனல் உறுதியான நேயத்துக்குரிய செய்கைகளை மேலே உடையவராய்க், கரவி ஞல் நேயங் கொண்டவரது மிக்க நட்பு, நீர் தெளிவுடையதாய்*

ஒழுகிச் சேற்றை அலைத்தொதுக்கும் அழகிய மலைகள் விளங்கு கின்ற நாட்டை யுடையவனே! என்றும் மனத்தில் வேதனை தருங் குற்றமாய் முடியும்.

**129.** ஒக்கிய ஒள்வாள்தன் ஒன்னார்கைப் பட்டக்கால்
ஊக்கம் அழிப்பதூஉம் மெய்யாகும்—ஆக்கம்
இருமையும் சென்று சுடுதலால் நல்ல
கருமமே கல்லார்கண் தீர்வு.

ஓங்கிய தனது ஒளிமிக்க வாள் தன் பகைவர் கையில் அகப்பட்டுவிட்டால், அது தனது மன வலிமையைக் கெடுப்ப தும் திண்ணமாகும். அவ்வாறே தீயோர் கைப்பட்ட தனது செல்வம் இம்மை மறுமை என்னும் தன் இருமைப் பயன்களை யும் தொடர்ந்து கெடுத்தலால், அத்தகைய மூடர்களிடத்தி லிருந்து நட்பு நீங்குதல் நற்செயலேயாகும்.

**130.** மனைப்பாசம் கைவிடாய் மக்கட்கென் றேங்கி
எனைத்தூழி வாழ்தியோ நெஞ்சே—எனைத்தும்
சிறுவரையே யாயினும் செய்தநன் றல்லால்
உறுபயனோ இல்லை உயிர்க்கு.

மக்கட்கு நல்வாழ்க்கை அமையும்பொருட்டு மனம் ஏங்கி வாழ்க்கைப்பற்றை இன்னும் விடமாட்டாய்; நெஞ்சமே, அதற்காக நீ எத்தனை ஊழி வாழவிருக்கின்றனையோ? சிற் றளவேயாயினும், செய்த அறச்செயலன்றி உயிர்க்கு அடையும் பயன் வேறு சிறிதும் இல்லை.

# 2. பொருட்பால்

இது பொருளினியல்பை உணர்த்தும் பகுதி. அறத்தைப் போல் இம்மை மறுமை வீடு என்னும் மூன்றற்கும் நேரே காரணமாதலின்றித், துய்த்தலானும் வழங்குதலானும் முறையே இம்மை மறுமை இரண்டற்குமட்டும் ஓராற்றால் காரணமாதல்பற்றி, இப் பொருட்பால் அறத்துப்பாலை அடுத்து நின்றது.

---

## 14-ம் அதி. கல்வி

கற்றற்குரிய நூல்களைக் கற்றல். பொருளைத் தேடுதற்கும், தேடிய பொருளைப் பயன்படுத்துதற்கும் கல்வி காரணமாதலின், இது பொருட்பாலின்கண் அமைந்தது.

**131.** **குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி யழகே அழகு.**

மயிர் முடியின் அழகும், உடுக்கப்படும் வளைந்த ஆடையின் கரையழகும், மஞ்சட் பூச்சின் அழகும் மக்கட்கு முடிந்த அழகுகளல்ல; நெஞ்சத்தில் நாம் நல்லவர்களாக ஒழுகுகின்றோம் என்னும் வேண்டுதல் வேண்டாமை யில்லா நடுவுநிலைமையாகிய அமைதி நிலையைப் பயத்தலால் மக்கட்குக் கல்வியழகே உயர்ந்த அழகாகும்.

**132.** **இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்**
**தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்**
**எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்**
**மம்மர் அறுக்கும் மருந்து.**

கல்வி, நல்வாழ்க்கையாகிய இம்மைப்பயனை விளைவிக்கும்; பிறர்க்குக் கற்பித்தலால் குறைவுபடுதலில்லை; தம்மை அறிவாலும் புகழாலும் விளங்கச்செய்யும்; தாம் இருக்க, அது கெடுதலில்லை; ஆதலால், எப் பிறவி யுலகிலும், கல்விபோல் அறியாமை மயக்குத் தீர்க்கும் மருந்தை யாம் காண்கின்றிலேம்.

**133.** களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோ ராயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

உவர் நிலத்தில் தோன்றிய உப்பைப் பெரியோர் விளை நிலத்தில் உண்டாகும் நெல்லினும் மிக்க பயனுடையதாகக் கொள்வர்; ஆதலாற், கீழ்க்குடியிற் பிறந்தோராயினும் கற்றறிந்தோரை மேற்குடியாரினும் மேலிடத்து வைத்து மதித்தல் நேரும்.

**134.** வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறினவ்வார்
எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

வைத்த இடத்திலிருந்து பிறரால் களவில் கொள்ளப் படா; நன் மாணாக்கர் வாய்த்து அவர்க்குக் கற்பிக்க நேருமானால் அதனால் அழிதலில்லை; தம்மினும் மிக்க செல்வாக்கினால் அரசர் வெகுள நேரினும் அவர் அதனைக் கவர இயலாதவராவர்; ஆதலால், வைப்பு என ஒருவன் தன் மக்கட்குத் தேடி வைக்கத் தக்கவை கல்விகளே; பிற அல்ல.

**135.** கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.

கல்விகள் அளவில்லாதன ; ஆனால், கற்பவர் வாழ் நாட்களோ சிலவாகும் ; சற்று அமைதியாக நினைத்துப் பார்த்தால் அச் சில வாழ்நாட்களில் பிணிகள் பலவா யிருக்கின்றன ; நீர் நீங்கப் பால் உண்ணும் பறவைபோல, அறிஞர்கள் பொருத்த முடைய நூல்களை மட்டுந் தெரிந்தெடுத்து, அவற்றைத் தெளிவு கொள்ள ஆராய்ந்து கற்றுக்கொள்வார்கள்.

**136.** **தோணி யியக்குவான் தொல்லை வருணத்துக்**
**காணின் கடைப்பட்டான் என்றிகழார் காணாய்,**
**அவன்துணையா ஆறுபோ யற்றேநூல் கற்ற**
**மகன்துணையா நல்ல கொளல்.**

அறிவு நூல்களைக் கற்ற பெருமகனொருவன் துணையாக மெய்ப் பொருள்களை அறிந்துகொள்ளுதல், நினைக்குங்கால், படகு செலுத்துவோன் பழைமையான சாதிகளிற் கடைப் பட்ட சாதியைச் சேர்ந்தவனென்று புறக்கணியாராய், மக்கள் அவன் துணையாக ஆற்றைக் கடந்துபோன தன்மையை ஒக்கும்.

**137.** **தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்**
**இகலிலர் எஃகுடையார் தம்முள் குழீஇ**
**நகலின் இனிதாயின் காண்பாம் அகல்வானத்**
**தும்பர் உறைவார் பதி.**

அழிதலில்லாத பழைமையான நூற்கேள்விப் பேறுடைய ராயும், முரண்பாடானவறிவு இலராயும், கூரறிவுடையராயும் விளங்குங் கற்றோருட் சேர்ந்து அளவளாவி மகிழ்தலினும் இனிமை யுடையதாயின், அகன்ற விண்ணின் மேலிடத்தி லுறையும் தேவர்களின் திருநகரைக் காண முயல்வோம்.

**138.** கனைகடல் தண்சேர்ப்ப ! கற்றறிந்தார் கேண்மை
நுனியின் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரின்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈர மிலாளர் தொடர்பு.

ஒலிக்கும் கடலின் குளிர்ந்த துறைவ! கற்று மெய்ப் பொருள் அறிந்தொழுகுவாரது நேயம், கரும்பை அதன் நுனியி லிருந்து தின்று சுவைப்பதைப் போன்றது; நுனியை விடுத்து அடிப் பகுதியிலிருந்து அதனைத் தின்றாற்போன்ற தன்மை யுடையது அக் கல்விப்பண்பும் அன்பும் இல்லாதவரது நேயம்.

**139.** கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர்—தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

இயற்கை, மணச் சிறப்பினையுடைய விளக்கமான நிற மமைந்த பாதிரி மலரைச் சேர்தலால், புதிய மட்பாண்டம் தன் கண் உள்ள தண்ணீர்க்கு மணம் தந்தாற்போல், தாம் கல்லா தவரேயாயினும் கற்றாரைச் சேர்ந்து பழகினால், மக்கள், பண் பட்ட மெய்யறிவு வரவர உண்டாகப் பெறுவர்.

**140.** அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லா
துலகநூல் ஓதுவ தெல்லாம்—கலகல
கூஉம் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்
போஒம் துணையறிவார் இல்.

அளவமைந்த கருவிக் கல்வியினால் ஞான நூல்களைக் கற்று மெய்ப்பயன் பெறாமல் உலக வாழ்வுக்குரிய வாழ்க்கை நூல்களையே எப்போதும் ஓதிக்கொண் டிருப்பது கலகல வென்று இரையும் அவ்வளவே யல்லாமல், அவ்வுலக நூலறிவு

கொண்டு பிறவித் தடுமாற்றம் நீங்கு முறைமையை அறிகின்றவர் யாண்டும் இல்லை.

---

## கரு. குடிப்பிறப்பு

உயர்குலத்திற் பிறத்தலின் மேன்மை. ஈண்டுக் குலம் என்றது 'சாதி'யன்று; ஒவ்வொரு சாதியிலும் உயர்ந்த குலங்கள் உண்டு; "உயர்ந்த குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் இன்றியமையாதாகலின்" என்பர் **பரிமேலழகர்.**

**141.** **உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்**
**குடிப்பிறப் பாளர்தம் கொள்கையிற் குன்றார்**
**இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா**
**கொடிப்புல் கறிக்குமோ மற்று.**

பசித்துன்பம் மிகுந்து நின்றபோதும் சிங்கம் படர்புல்லைத் தின்னுமோ? அதுபோல, உடை பொலிவழிந்து உடல் மெலிவடைந்த வறுமைக் காலத்திலும் உயர்குடிப் பிறந்தோர் தமக்குரிய ஒழுகலாற்றிற் குறைவுபடார்.

**142.** **சான்றாண்மை சாயல் ஒழுக்கம் இவைமூன்றும்**
**வான்தோய் குடிப்பிறந்தார்க் கல்லது—வான்தோயும்**
**மைதவழ் வெற்ப! படாஅ பெருஞ்செல்வம்**
**எய்தியக் கண்ணும் பிறர்க்கு.**

மேகங்கள் தவழ்கின்ற வானளாவிய மலைகளையுடைய நாடனே! பெருந்தன்மை, மென்மை, கடைப்பிடி என்னும் இவை மூன்றும் உயர்வு பொருந்திய குடியிற் பிறந்தவர்க்கல்லது, மிக்க செல்வம் உண்டான காலத்தும் பிறர்க்கு உண்டாகமாட்டா.

**143.** இருக்கை எழலும் எதிர்செலவும் ஏனை
விடுப்ப ஒழிதலோ டின்ன—குடிப்பிறந்தார்
குன்று ஒழுக்கமாக் கொண்டார்; கயவரோ
டொன்று உணரற்பாற் றன்று.

பெரியோரைக் கண்டால் தன் இருக்கையிலிருந்து எழுதலும், சற்று எதிர்சென்று வரவேற்றலும், அவர் பிரியும் போது சற்றுப் பின்சென்று அவர் விடைதர எனைப் பிரிந்து வருதலுமாக இத்தகைய பணிவுக் குணங்களை உயர்குடிப் பிறந்தார் கைவிடா நல்லொழுக்கமாக மேற்கொண்டொழுகுவர். இத் தகுதி, கீழ்மக்களாற் சிறந்ததொரு குணமாக உணர்ந்துகொள்ளுதற் குரியதன்று.

**144.** நல்லவை செய்யின் இயல்பாகும் தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகும்—எல்லாம்
உணருங் குடிப்பிறப்பின் ஊதியம் என்னோ
புணரும் ஒருவர்க் கெனின்.

உயர்குடிப் பிறந்தார் நல்லவை செய்தால் அஃது அவர்க்கு இயல்பென்று கொள்ளப்படும்; தீயவை செய்தால் பலரும் தூற்றும் பழியாக முடியும். அவ்வாறானல், உயர்குடிப் பிறப்பு ஒருவர்க்கு வாய்க்குமாயின், எல்லா நன்மைகளும் இயல்பாகவே உணர்ந்தொழுகுதற்குரிய தகுதி வாய்ந்த அக் குடிப் பிறப்பினால் அவர் அடையும் ஊதியந்தான் யாதோ ! (நல்லவை செய்தலை இயல்பாக உடையது உயர்குடிப் பிறப்பெனின், அந் நிலையே ஆக்கம் என்பது.)

**145.** கல்லாமை அச்சம் கயவர் தொழில்அச்சம்
சொல்லாமை யுள்ளும்ஓர் சோர்வச்சம்—எல்லாம்
இரப்பார்க்கொன் றியாமை அச்சம் மரத்தார்இம்
மாணக் குடிப்பிறந் தார்.

உயர்குடிப் பிறந்தார்க்குக், கல்வி கல்லாமை ஓர் அச்சம்; இழோர் தொழிலொன்று செய்தலும் அச்சம்; சொல்லத்தகாத வற்றுள் தவறிச் சொல்லிவிடுதலொன்றும் அச்சம்; இரப் பார்க்கு ஒன்று ஈயாமை முற்றும் அச்சம்; இவ்வாறு மாட்சிமை யில்லா உயர்குடியிற் பிறந்தார், நடுக்கடலில் மரக்கலத்திற் செல் வாரை ஒத்தவராவர். (தீயவற்றிற்கு அஞ்சி வாழ்வதற்குரிய உயர்குடிப் பிறப்பே சிறந்ததென்பது.)

**146.** இனநன்மை இன்சொலொன் றீதல்மற் றேனை
மனநன்மை என்றிவை யெல்லாம்—கனமணி
முத்தோ டிமைக்கும் முழங்குஉவரித் தண்சேர்ப்ப
இற்பிறந்தார் கண்ணே யுள.

பளுவுள்ள சங்குமணிகளும் முத்துக்களும் கிடந்து ஒளிர் கின்ற ஒலிக்கும் கடலின் குளிர்ச்சியான துறையையுடையவனே! நல்லார் கூட்டுறவு, இன்சொலுடைமை, வறியார்க்கு ஒன்று ஈதல், ஏனை மனத்தூய்மை என இந் நற்பண்புகளெல்லாம் உயர்குடிப் பிறந்தாரிடமே அமைந்திருக்கின்றன.

**147.** செய்கை யழிந்து சிதல்மண் டிற் றயினும்
பெய்யா ஒருசிறை பேரில் உடைத்தாகும்;
எவ்வம் உழந்தக் கடைத்தும் குடிப்பிறந்தார்
செய்வார் செயற்பா லவை.

வளமான பெரிய வீடு வளங்குறைந்த காலத்தில் கட்டுக் குலைந்து கறையான் கவ்விற்றாயினும் மழையொழுக்கில்லாத ஒரு பாகத்தை அது உடையதாயிருக்கும்; அதுபோல, வறுமை யினால் மிக்க துன்பத்திற் சிக்கி அலைப்புண்ட காலத்தும் உயர் குடியிற் பிறந்த நல்லோர் தாம் செய்தற்குரிய நற்செயல்களைச் செய்துகொண்டேயிருப்பர்.

148. ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம்—திங்கள்போல்
செல்லாமை செவ்வன்நேர் நிற்பினும் ஒப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார்.

ஒரு பக்கம் இராகுவென்னும் பாம்பு பற்றிக்கொண்டாலும் தனது மற்றொரு பாகத்தால் அழகிய இடமகன்ற பெரிய உலகத்தை ஒளிவிளங்கச் செய்யுந் திங்களைப்போல, வறுமையினால் மாட்டாமை நிலை நன்றாக முன் நிற்பினும் உயர்குடிப் பிறந்தார் பிறர்க்கு உதவிசெய்யும் வகைக்குத் தளரமாட்டார்.

149. செல்லா விடத்தும் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்தும் செய்யார் சிறியவர்—புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோல்
பொருமுரண் ஆற்றுதல் இன்று.

வறுமையினால் மாட்டா நிலையிலும் உயர்குடிப் பிறந்தார் செய்யுங் கடமைகளைச் செல்வாக்கு நிலையிலுங் கீழ்குடிப் பிறந்தார் செய்யமாட்டார்; மான் சேணம் தாங்கினாலும் பாயும் இயல்பினையுடைய குதிரையைப்போற் போர்செய்யும் மாறுபாட்டுச் செருக்கினைச் செய்தல் இல்லை.

150. எற்றொன்று மில்லா விடத்தும் குடிப்பிறந்தார்
அற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றுவர்
அற்றக் கடைத்தும் அகல்யா றகழ்ந்தக்கால்
தெற்றெனத் தெண்ணீர் படும்.

கையில் எத்தகையதொரு பொருளும் இல்லாத காலத்தும் உயர்குடிப் பிறந்தார் ஆதரவற்றுத் தம்மை யடைந்தவர்க்கு அவரது தளர்ச்சிக் காலத்தில் ஊன்றுகோல்போல் உதவுவர்; நீரற்ற காலத்தும் அகன்ற ஆறு, சற்றுக் குழிதோண்டிய காலத்தில் விரைந்து தெளிநீர் ஊறி உதவும்.

## 16. அதி. மேன்மக்கள்

*மேன்மக்களின் இயல்புகள் இன்னவென்பது ; மேன்மக்களாவார், குணத்தான் மேம்பட்ட நன்மக்கள்.*

**151.** அங்கண் விசும்பின் அகல்நிலாப் பாரிக்குந்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்—திங்கள்
மறுவாற்றும் சான்றோர்அஃ தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.

*அழகிய இடமகன்ற வானத்தில் விரிந்த நிலவொளியைப் பரவச் செய்யும் திங்களும் மேன்மக்களும் தம்மிற் பெரும்பாலும் ஒத்த பெருமையுடையவராவர் ; ஆனால், திங்கள் களங்கத்தைத் தாங்கும் ; மேன்மக்களோ தமது ஒழுக்கத்திற் சிறிது கறையுண்டானாலும் அது பொறாராய் உள்ளங்குழம்பி அழிவர்.*

**152.** இசையும் எனினும் இசையா தெனினும்
வசைதீர எண்ணுவர் சான்றோர்—விசையின்
நரிமா வுளங்கிழித்த அம்பினில் தீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல்.

*கைகூடுமெனினும் கைகூடாதெனினும் பழித்தலில்லாத வகையில் அரிய காரியங்களையே மேன்மக்கள் எண்ணிச் செய்வர். நரி என்னும் விலங்கின் நெஞ்சை விரைவாகக் கிழித்துச் சென்ற அம்பைவிடப் பழிப்புடையதோ, சிங்கத்தின் தவறுதலைப் பொருந்திய அம்பு !*

**153.** நரம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினும் சான்றோர்
குரம்பெழுந்து குற்றங்கொண் டேறார் ;—உரம்கவரு
உள்ளமெனும் நாரினாற் கட்டி, உளவரையால்
செய்வர் செயற்பா லவை.

உடம்பில் நரம்பு மேலே தோன்றும்படி வறுமை யெய்தினாராயினும் மேன்மக்கள் தமது நல்லொழுக்கத்தின் வரம்பு கடந்து பிழையான வழிகளை மேற்கொண்டு அவற்றில் தொடர்ந்து செல்லார். அறிவு பணைவிட்டமாக முயற்சியென்னும் நாரினால் தீய வினைவுகளைக் கட்டுப்படுத்தி, செய்தற்குரிய நற்செயல்களைத் தமக்குள்ள பொருளளவினால் செய்து வருவர்.

**154.** செல்வுழிக் கண்ஒருநாள் காணினும் சான்றவர்
தொல்வழிக் கேண்மையின் தோன்றப் புரிந்தியாப்பர்
நல்வரை நாட சிலநாள் அடிப்படின்
கல்வரையும் உண்டாம் நெறி.

வழிச்செல்லுங் காலத்தில் ஒருவரை ஒருநாள் கண்டாலும் மேன்மக்கள், பழைமை வழியான நேயம்போல் தோன்ற அன்பு செய்து அவரைப் பிணிப்பர். உயர்ந்த மலைகளையுடைய நாடனே! சிலநாள் நடந்து பழகியதாயின் கல்லுள்ள மலையும் வழியுண்டாகப்பெறும். (அதுபோலப் பலநாட் பழகிய காரணத்தால் நட்புண்டாகப்பெறுதலில் வியப்பொன்றுமில்லை.)

**155.** புல்லா எழுத்தின் பொருளில் வறுங்கோட்டி
கல்லா ஒருவன் உரைப்பவும், கண்ணோடி
நல்லார் வருந்தியுங் கேட்பரே; மற்றவன்
பல்லாருள் நாணல் பரிந்து.

பொருந்தாக் கல்வியையுடைய மெய்யுணர்வில்லாத வீணோரவையில் கல்வியறிவு நிரம்பப்பெறாத ஒருவன் உரையாடவும், தாம் கேளாதொழியின் அவன் பலரிடையில் நாணங்கொள்ள நேர்தற்கு இரங்கி, மேன்மக்கள் கண்ணோட்டமுற்று உள்ளம் வருந்தியுங் கேட்டுக்கொண்டிருப்பர்

156. கடித்துக் கரும்பினைக் கண்தகர நூறி
இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே யாகும்;
வடுப்பட வைதுஇறந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயிற் சிதைந்து.

*கரும்பினைப் பல்லினாற் கடித்து, கணுக்கள் உடையும்படி ஆலையிலிட்டுச் சிதைத்து, பிற கருவிகளால் இடித்து அதன் சாற்றைக் கொண்டாலும் அச் சாறு இனிய சுவையுடையதே யாகும். அதுபோல, பழியுண்டாகும்படி தம்மைப் பிறர்பழித்து வரம்பு கடந்தபோதும் மேன்மக்கள் தம் பெருந்தன்மையிற் குறைந்து வாயினால் தீயன கூறார்.*

157. கள்ளார், கள் உண்ணார், கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை இகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயின்பொய் கூறார் வடுவறு காட்சியார்
சாயின் பரிவ திலர்.

*மேன்மக்கள் பிறர்பொருளைக் கவரார்; கள் அருந்தார்; விலக்கத்தகுந்த தீயவற்றை விலக்கி அவற்றின் நீங்கி யொழுகுவர்; பிறரை அவமதித்து இகழ்ந்து உரையாடார்; சோர்ந்தும் தம் வாயினாற் பொய்சொல்லார்; மாசு நீங்கிய தெளிவினையுடையார்; வினை வயத்தால் தம் செல்வாக்குக் குறையின், அதற்காக வருந்துவதும் இலராவர்.*

158. பிறர்மறை யின்கண் செவிடாய்த் திறன்அறிந்து
ஏதிலார் இல்கண் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறம்கூற வேண்டா அவற்கு.

*பிறருடைய மறைந்த கருத்துக்களைக் கேட்டலிற் செவிடனாய், அயலார் மனைவியரைக் காமக் கருத்துடன் நோக்*

குதலிற் குருடுடையனாய், தீயவான புறங்கூற்று மொழிகளைக் கூறுதலில் ஊமையுடையனாய், வாழ்க்கையில் துன்பம் உண்டாகும் கூறுகள் இவையென்றறிந்து ஒருவன் ஒழுகுவனாயின், அவனுக்குப் பிறர் வேறு யாதும் அறம் அறிவுறுக்க வேண்டா.

159. பன்னாளும் சென்றக்கால் பண்பிலார் தம்உழை
என்னானும் வேண்டுப என்றிகழ்ப—என்னானும்
வேண்டினும் நன்றுமற் றென்று விழுமியோர்
காண்டொறும் செய்வர் சிறப்பு.

பலமுறையும் ஒருவர் சென்றால் நற்பண்பில்லாத கீழ்மக்கள், தம்மிடம் ஏதாவது உதவிவேண்டுவார் என்று அவரை அவமதிப்பர். ஆனால், மேன்மக்கள், அவர் ஏதாவது உதவி விரும்பினாலும் நல்லது என்று கருதி அவரைப் பார்க்கும்போதெல்லாம் பெருமை செய்வர்.

160. உடையார் இவர்என்று ஒருதலையாப் பற்றிக்
கடையாயார் பின்சென்று வாழ்வர்—உடைய
பிலம்தலைப் பட்டது போலாதே, நல்ல
குலம்தலைப் பட்ட விடத்து?

பொருளுடையார் இவர் என்று உறுதியாகப் பற்றி மக்களிற் பெரும்பாலார் கீழ்மக்கள் பின்சென்று உயிர்வாழ்வார்; சிறந்த மேன்மக்களினத்தைச் சேரப்பெற்றபோது, அச்சேர்க்கை, உரிமையுடைய ஒரு பொருட் சுரங்கத்தைத் தலைப்பட்டதுபோலாகாதோ?

## 17-ம் அதி. பெரியாரைப் பிழையாமை

*பெரியாரை மதியாத முறையில் நடவாமை.*

**161.** பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபின்
ஆர்க்கும் அருவி அணிமலை நல்நாட
பேர்க்குதல் யார்க்கும் அரிது.

*பொறுத்துக்கொள்வர் என்று நினைத்து மாசு நீங்கிய பெரியோரிடத்திலும் அவர் வருந்தத்தக்க பிழைகளைச் செய்யா திருத்தல்வேண்டும். அவர் உள்ளம் வருந்தியபின், ஆரவாரித் தலைச் செய்யும் அருவிகளையுடைய அழகிய மலைகள் பொருந்திய சிறந்த நாடனே! அவ் வருத்தத்தால் உண்டாகுந் தீங்கை நீக்கிக்கொள்ளுதல் எத்தகையவர்க்கும் இயலாது.*

**162.** பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும்—அன்றோ
பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல
நயமில் அறிவி னவர்.

*பொன்னையே விலையாகக் கொடுத்தும் நட்புச் செய்தற்கு அரியரான பெரியோர்களை விலையில்லாமலே நட்புச் செய்து கொள்ள வாய்ப்பிருந்தும் பண்புடைமையில்லாத அறிவின ரான பேதையர் ஐயோ, தம்முடைய வாழ்நாட்களைப் பயனில்லாத வீண்காலமாகக் கழிக்கின்றனரே!*

**163.** அவமதிப்பும் ஆன்ற மதிப்பும் இரண்டும்
மிகைமக்க ளான்மதிக்கற் பால—நயமுணராக்
கையறியா மாக்கள் இழிப்பும் எடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார்.

மதிப்பின்மையும் மிக்க மதிப்புமாகிய இரண்டும் மேன் மக்களாகிய பெரியோர்களால் மதித்தற்குரியன; நன்மையை உணர்தலில்லாத ஒழுக்கமறியாக் கீழ்மக்களின் இழிப்புரையும் உயர்த்தும் ஏத்துரையும் தெளிந்த நூலறிவினையுடையோர் ஒரு பொருளாக மனத்துட் கொள்ளமாட்டார்கள்.

**164.** விரிநிற நாகம் விடருள தேனும்
உருமின் கடுஞ்சினம் சேணின்றும் உட்கும்
அருமை யுடைய அரண்சேர்ந்தும் உய்யார்
பெருமை யுடையார் செறின்.

படம் விரித்தலையுடைய நாகப்பாம்பு நிலத்தின் வெடிப்பினுள்ளே உள்ளதாயினும், இடியின் கொடிய ஒலிச்சீற்றமானது தொலைவில் இருந்தும், அதற்கு அஞ்சும். அதுபோல, அருமைப்பாடுடைய பாதுகாப்பிடத்தைச் சேர்ந்திருந்தாலும், மேன்மையுடைய பெரியோர் சீறுவாராயின், ஏனைச் சிறியோர் அதற்குத் தப்பமாட்டார்.

**165.** எம்மை அறிந்திலிர், எம்போல்வார் இல்லென்று
தம்மைத்தாம் கொள்வது கோளன்று — தம்மை
அரியரா நோக்கி அறன்அறியுஞ் சான்றோர்
பெரியராக் கொள்வது கோள்.

'எமது தகுதியை நீவிர் அறிந்தீரில்லை, எம்மைப்போன்ற தகுதியுடையார் பிறர் ஈண்டு இல்லை' என்று தம்மைத்தாமே பெருமைப்படுத்திக்கொள்வது சிறந்த மதிப்பாகாது; தம்மை அருமையுடையவராகக் கருதி, அறமுணருஞ் சான்றோர், பெரியரென்று மதித்தேற்றுக்கொள்ளுதலே பெருமையாகும்.

166. பெருகடல் தண்சேர்ப்ப ! நாள்நிழல் போல
விளியும் சிறியவர் கேண்மை—விளிவின்றி
அல்கு நிழல்போல் அகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு.

பெரிய கடலின் குளிர்ந்த துறைவ ! சிறியோர் நட்பானது காலை நேரத்தின் நிழல்போலக் குறைந்து கெடும். பழைமை தொட்டு வரும் புகழினையுடைய பெரியோர் நட்பானது அங்ஙனங் குறைந்து கெடுதலின்றி மாலை நேரத்தின் நிழல் போல வளர்ந்து வளர்ந்து செல்லும்.

167. மன்னர் திருவும் மகளிர் எழில்நலமும்
துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா—துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மர மெல்லாம்
உழைதங்கட் சென்றார்க் கொருங்கு.

தழைகள் நெருங்கப் பொருந்தித் தாழ்ந்துள்ள குளிர்ச்சியான மரங்களெல்லாம் தம்மிடம் வந்தடைந்தாரனைவர்க்கும் வேறுபாடில்லாமல் நிழலிடமாகும்; அதுபோல அரசர் வளமும் மகளிர் எழுச்சியழகும் அவர்களுடன் நெருங்கிக் கலந்திருப்பவர் நுகர்வர்; நேயம் என்னும் அந் நெருக்கமல்லது வேறு தகுதியுடைமை அதற்கு வேண்டா.

168. தெரியத் தெரியுந் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெரும்படர்நோய் செய்யும்—பெரிய
உலவா இருங்கழிச் சேர்ப்பயார் மாட்டுங்
கலவாமை கோடி உறும்.

வளங்கெடாத கருநிறமான பெரிய கழிக்கரையை யுடையோனே! நூற்கருத்துக்களை விளங்கத் தெளியும் தெளிவில்லாதவரிடத்தும் அவரைப் பிரிய அப் பிரிவு பெரிய நினைவுத் துன்பத்தை உண்டாக்கும். ஆதலாற் பெரியோரிடத்தன்றிப்

பிறர் யாரிடத்திலும் நேயங் கொள்ளாமை கோடிப் பங்கு நன்மையாகும்.

**169.** கல்லாது போகிய நாளும் பெரியவர்கட்
செல்லாது வைகிய வைகலும்—ஒல்வ
கொடாஅ தொழிந்த பகலும் உரைப்பின்
படாஅவாம் பண்புடையார் கண்.

கற்றற்குரிய நூல்களைக் கல்லாமற் கழிந்த நாட்களும், கேள்வியின் பொருட்டுப் பெரியோர்பாற் செல்லாமல் நின்ற நாட்களும், இயன்ற பொருள்களை உரியவர்களுக்கு உதவாமல் நீங்கிய நாட்களும், சொல்லுமிடத்து, நல்லியல்புடைய பெரியோர்களிடம் உண்டாகமாட்டா.

**170.** பெரியார் பெருமை சிறுதகைமை ஒன்றிற்
குரியார் உரிமை அடக்கம்—தெரியுங்கால்
செல்வ முடையாரும் செல்வரே தற்சேர்ந்தார்
அல்லல் களைப வெனின்.

ஆராயுமிடத்து, கல்வி கேள்விகளிற் பெரியாருடைய பெருமைக் குணமாவது யாண்டுந் தாழ்வுடைமையாயிருத்தல்; வீடுபேற்றிற்குரியரான மெய்யுணர்வாளர்க்குரிய பண்பாவது மன மொழி மெய்கள் அடக்கமாயிருத்தல். தம்மையடைந்தவர் களுடைய வறுமைத் துன்பங்களை நீக்குவார்களாயின், செல்வம் படைத்தவர்களும் செல்வரேயாவர்.

## 18-ம் அதி. நல்வினஞ் சேர்தல்

*உயர்ந்த பண்புடையார் கூட்டத்திற் சேர்ந்து பழகுதல்.*

**171.** அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி
நெறியல்ல செய்தொழுகி யவ்வும்—நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயில்முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு.

*அறிய வேண்டுவன அறியாத சிறு பருவத்தில் அடங்கி யொழுகாத தீயோருடன் சேர்ந்து முறையல்லாதவற்றைச் செய்தொழுகிய தீய குணங்களும், வெயில் கடுகுதலாற் புல் நுனியைப் பனியின் பற்றுதல் விட்டாற்போல, நன்னெறி தெரிந்தொழுகும் உயர்ந்த பெரியோர் சார்பைச் சார்ந்து பழகுதலாற் கெடும்.*

**172.** அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மையெஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

*கடமையொழுங்கை அறிந்தொழுகுங்கள்; நமன் வருதற்கு அஞ்சி யொழுகுங்கள்; பிறர் கூறும் வன்சொற்களைப் பொறுத்துக் கொள்ளுங்கள்; வஞ்சித் தொழுகுதலைக் காத்துக் கொள்ளுங்கள்; செய்கை தீயவரது நட்பை வெறுத்தொதுக்குங்கள்; எஞ்ஞான்றும் பெரியார் வாயினின்று வரும் நன்மொழிகளை ஏற்றொழுகுங்கள்.*

**173.** அடைந்தார்ப் பிரிவும் அரும்பிணியும் கேடும்
உடங்குடம்பு கொண்டார்க் குறலால்—தொடங்கிப்
பிறப்பின்னு தென்றுணரும் பேரறிவி னாரை
உறப்புணர்க அம்மாஎன் நெஞ்சு.

இயற்கையாலும் செயற்கையாலும் தம்மைச் சார்ந்த உற வினர் நண்பர் முதலியோரைப் பிரிந்து நிற்றலும், தீர்தற்கரிய நோயும், இறப்பும் பிறவியெடுத்தவர்க்கு ஒருங்கே பொருந்துத லால், ஆராய முற்பட்டுப் பிறப்பு இன்னல் தருவதென் றுணர்ந்து பற்றற்றொழுகும் பெரிய அறிவினரான ஞானியரை என் உள்ளம் மிகக் கூடுக.

**174.** இறப்ப நினையுங்கால் இன்னா தெனினும்
பிறப்பினை யாரும் முனியார்—பிறப்பினுட்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்றும்
நண்பாற்றி நட்கப் பெறின்.

தாம் பிறந்த பிறப்பிற் பிறர்க்குதவி செய்யும் நெஞ்ச முடையவர்களான பெரியார்களோடு எப்போதும் நேசஞ் செய்து அணுகியிருக்கப் பெற்றால், பிறப்பினை மிகவும் ஆராயு மிடத்து அது துன்பந் தருவதென்றாலும், அதனை யாரும் வெறுக்கமாட்டார்கள்.

**175.** ஊரங் கணநீர் உரவுநீர்ச் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்—ஓருங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

ஊரின் சாக்கடை நீர் கடலைச் சேர்ந்தால், பெயரும் கடல் நீர் என்று வேறாகி அருள் நீராகும்; மதிக்கத்தக்க நற்குலப் பெருமையில்லாத கீழோரும், குணப் பெருமை வாய்ந்த நல் லாரைச் சார்ந்து அவர் நற்றன்மையில் மலைபோல் அசைத லின்றி நிலைத்து விளங்குவர்.

**176.** ஒண்கதிர் வாள்மதியம் சேர்தலால் ஓங்கிய
அங்கண் விசும்பின் முயலும் தொழப்படூஉம்
குன்றிய சீர்மைய ராயினும் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின்.

இனிய கதிர்களையுடைய ஒள்ளிய திங்களைச் சேர்தலால் அழகிய இடமகன்ற வானத்தின்கண் முயலும் மாந்தரால் வணங்கப்படும். ஆதலால், குறைந்த நிலைமையுடையாராயினும், மக்கள் மலைபோன்ற பெருமையுடைய நல்லாரது நேயத்தையடைந்தால் நிறைந்த சிறப்பினைப் பெறுவர்.

177. பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றுதாம்—தேரின்
சிறியார் சிறுமையுந் தோன்றாதாம் நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

பாலோடு கலந்த நீர் பாலாகித் தோன்றுமல்லது நீராய்த் தன் நிறம் விளங்கித் தோன்றாது. ஆராய்ந்தால், உயர்ந்த பெரியாருடைய பெருந்தன்மையைச் சார்தலால் சிறியார் குறைபாடுந் தோன்றாமற் பெருமையேயாகும்.

178. கொல்லை யிரும்புனத்துக் குற்றி யடைந்தபுல்
ஓல்காவே யாகும் உழவ ருழுபடைக்கு
மெல்லியரே யாயினும் நற்சார்வு சார்ந்தார்மேல்
செல்லாவாம் செற்றார் சினம்.

கொல்லையாகிய பெரிய நிலத்திலுள்ள மாக்கட்டையைச் சேர்ந்து வளர்ந்த புல், உழவரது உழுகின்ற படையாகிய கலப்பைக்குக் கெடாதனவாகும்; வலிமையில்லாதவரேயாயினும் நல்லினத்தாரென்னும் வலிய சார்பினைச் சார்ந்தவர்மேல் பகைவரது சினம் பயன்படாமற்போம்.

179. நிலநலத்தால் நந்திய நெல்லேபோல் தத்தம்
குலநலத்தால் ஆகுவர் சான்றோர்—கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினஞ் சேரக் கெடும்.

நிலத்தின் வளத்தினாற் செழித்து வளர்ந்த நெற்பயிரைப் போல் தத்தம் இனநலத்தால் நல்லோர் மேன்மேலும் சான்ருண்மையுடையோராவர். மரக்கலத்தின் வலிமையைக் கொடிய புயற்காற்றுச் சென்று கெடுத்தாற்போல, தீய இனத்தவரைச் சேர அதனால் அச் சான்ருண்மை அழியும்.

**180.** மனத்தான் மறுவில ரேனுந்தாஞ் சேர்ந்த
இனத்தால் இகழப் படுவர்—புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனந் தீப்பட்டக் கால்.

காட்டிலுள்ள மணங்கமழ்கின்ற சந்தனமாமும் வேங்கை மாமும் பெருங்காற்று வீசுகின்ற அக் காடு தீப்பிடித்தால் வெந்து அழிந்துவிடும். ஆதலால், சான்ருேர் தம் மன நலத்தால் மாசிலராயினும் தாம் சேர்ந்த தீய இனத்தினால் பெருமை குன்றிப் பழிக்கப்படுவர்.

---

## 19-ம் அதி. பெருமை

நல்லினத்தவரின் பெருந்தன்மையை உணர்த்துவது.

**181.** ஈத லிசையா திளமைசேண் நீங்குதலால்
காத லவருங் கருத்தல்லர்—காதலித்
தாதும்நாம் என்னும் அவாவினைக் கைவிட்டுப்
போவதே போலும் பொருள்.

உலக வாழ்க்கையானது வறியவர்க்கு ஒன்று விரும்பியபடி கொடுத்தல் இயலாததாயிருக்கின்றது; இளமை நிலையும் தொலைவில் நீங்கிப் போதலால், காதலன்புடைய மனைவியரும் வரவா விருப்புடையரல்லர்; ஆதலின், உலக வாழ்க்கையிற் பற்றுக்கொண்டு நாம் ஆக்கமுறுவோம் என்னும் அவாவினைக் கைவிட்டுத் துறவுநெறியில் ஒழுகுவதே பயன்றருவதாகும்.

182. இற்சார்வின் ஏமாந்தேம் ஈங்கமைந்தேம் என்றெண்ணிப்
பொச்சாந் தொழுகுவர் பேதையார்—அச்சார்வு
நின்றன போன்று நிலையா வெனவுணர்ந்தார்
என்றும் பரிவ திலர்.

*மனைவாழ்க்கைச் சார்பினாற் களித்திருக்கின்றேம், உலகத்தில் அதற்கு வேண்டிய பொன் முதலிய எல்லா நலங்களிலும் நிறைந்திருக்கின்றேம் என்று கருதி அறிவிலா மாந்தர் அவற்றின் பொய்ம்மையை மறந்தொழுகுவர். ஆனால், அச் சார்புகள் நிலைத்திருப்பனபோற் காணப்பட்டுப் பின் நிலையாமற்போம் என்றுணர்ந்த மேலோர் எக்காலத்திலும் அவற்றை விரும்புதலின்றி யொழுகுவர்.*

183. மறுமைக்கு வித்து மயலின்றிச் செய்து
சிறுமைப் படாதேநீர் வாழ்மின்—அறிஞராய்
நின்றுழி நின்றே நிறம்வேறுங் காரண
மின்றிப் பலவும் உள.

*மறுமைக்கு வித்தாகிய அறச் செயலை வாழ்க்கையில் மயங்குதலில்லாமற் செய்து எஞ்ஞான்றுந் துன்புறாமல் நீவிர் அறிஞராய் வாழுங்கள்; ஏனென்றால், நின்ற நிலையில் நின்றே உடம்பின் இளமையொளி வேறாய் மாறும். அன்றியுங், காரணமில்லாமலே பல இடையூறுகளும் வாழ்க்கையில் உள்ளன.*

184. உறைப்பருங் காலத்தும் ஊற்றுநீர்க் கேணி
இறைத்துணினும் ஊராற்றும் என்பர்—கொடைக்கடனுஞ்
சாஅயக் கண்ணும் பெரியார்போல் மற்றையார்
ஆஅயக் கண்ணும் அரிது.

*மழை துளித்தலில்லாத காலத்திலும் ஊற்று நீரையுடைய சிறிய நீர்நிலை, இறைத்து உண்ணுவதாயினும் ஊரிலுள்ளாரனைவர்க்கும் உதவும் என்று பெரியோர் கூறுவர். அதுபோல,*

வறியார்க்கு ஒன்று கொடுத்தலாகிய கடமையும், தமது நிலைமை குறைவான காலத்தும் பெரியோர் மேற்கொள்ளுதல் போலப் பெரியரல்லாதார் தமது நிலைமை நிறைவடைந்த காலத்தும் மேற்கொள்ளுதல் அரிதாகும்.

**185.** உறுபுனல் தந்துல கூட்டி அறுமிடத்தும்
கல்லூற் றுழியூறு மாறேபோற்—செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணுஞ் சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை.

நீருள்ள காலத்தில் மிக்க நீர் தந்து உலகுயிர்களை உண்பித்து நீர் வறளுங் காலத்தும் தோண்டுகின்ற ஊற்றினிடத்தில் ஊறியுதவும் ஆறேபோல், உள்ள காலத்திற் பொருளைப் பலர்க்கும் உதவிசெய்து அப் பொருள் கெட்டு நிலையழிந்த காலத்தும் மேன்மக்கள், சிலர்க்கேனும் உதவிகள் செய்து தாஞ் செய்தற்குரிய கடமைகளைச் செய்துகொண்டிருப்பர்.

**186.** பெருவரை நாட பெரியார்கட் டீமை
கருநரைமேற் சூடேபோல் தோன்றும்—கருநரையைக்
கொன்றன்ன இன்னா செயினும் சிறியார்மேல்
ஒன்றானுந் தோன்றாக் கெடும்.

பெரிய மலைகளையுடைய நாடனே! மேன்மக்களிடத்தில் உண்டான குற்றம், சிறந்த வெள்ளையெருதின்மேல் இட்ட சூடு போல் விளங்கித் தெரியும். அச் சிறந்த வெள்ளையெருதினைச் சூடிடுதலேயன்றிக் கொலைசெய்தாற் போன்ற துன்பங்களைச் செய்தாலும் கீழ்மக்களிடத்தில் ஒரு குற்றமாவது அவ்வாறு விளங்கித் தெரியாமல் மறைந்துவிடும்.

**187.** இசைந்த சிறுமை இயல்பிலா தார்கட்
பசைந்த துணையும் பரிவாம்—அசைந்த
நகையேயும் வேண்டாத நல்லறிவி னார்கட்
பகையேயும் பாடு பெறும்.

தமக்குப் பொருந்திய சிறுமைச் செயல்களையுடைய பண்பிலாதாரிடத்தில் நேயங்கொண்டு அளவுந் துன்பமேயாம். மாறிய செயல்களை விளையாட்டாகவும் விரும்பாத சிறந்த அறிஞர்களிடத்தில், பகைகொள்ளுதலுங்கூட மாட்சிமைப்படும்.

188. மெல்லிய நல்லாருள் மென்மை அதுவிறந்
தொன்னருட் கூற்றுட்கும் உட்குடைமை யெல்லாஞ்
சலவருட் சாலச் சலமே நலவருள்
நன்மை வரம்பாய் விடல்.

மென்றன்மையுடைய மகளிரிடம் மென்றன்மையாகவும், பகைவரிடத்தில் அம் மென்றன்மை நீங்கிக் கூற்றுவனும் அஞ்சும் மிடுக்குடைமையாகவும், முழுமையும் பொய்யராளரிடத்து மிக்க பொய்ம்மையாகவும், மெய்யியல்புடைய மேலோரிடம் மெய்ம்மையாகவும் அவ்வவற்றின் எல்லையாய் நடந்துகொள்க.

189. கடுக்கி யொருவன் கடுங்குறளை பேசி
மயக்கி விடினும் மனப்பிரிப்பொன் றின்றித்
துளக்க மிலாதவர் தூய மனத்தார்
விளக்கினுள் ஒண்சுடரே போன்று.

ஒருவன் முகஞ்சுளித்துப் பிறரைப்பற்றிக் கொடிய கோளுரை கூறித் தம்மை மயக்கினாலும், அப் பிறர்பால் மனவேறுபாடு சிறிதுமின்றி முற்கொண்ட கருத்துறுதியினின்று அசைதலில்லாதவரே, விளக்கினில் எரியும் ஒள்ளிய தீப் பிழம்பு போன்று அழுக்கற்ற நெஞ்சுடையவராவர்.

190. முற்றுத்துந் துத்தினை நாளும் அறஞ்செய்து
பிற்றுத்துத் துத்துவர் சான்றவர்—அத்துத்து
முக்குற்றம் நீக்கி முடியு மளவெல்லாம்
துக்கத்துள் நீக்கி விடும்.

முதலில் உண்ண ... றும் From: K.K.NAGAR, CHENNAI-78. பிறர்க்கு உதவிசெய்து அடுத்த கவளத்தைப் பெரியோர் உண்ணுவர்; பிறர்க்கு உதவிசெய்த அந்தக் கவளம் அப் பெரியோருடைய காம வெகுளி மயக்கமென்னும் மூன்று குற்றங்களையுங் கெடுத்துப் பிறவி தீருங் கால முழுமையும் அவரைத் துன்பத்தினின்று நீக்கிவிடும்.

---

## 20-ம் அதி. தாளாண்மை

முயற்சியுடைமை உணர்த்துவது.

**191.** கோளாற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ்ப் பைங்கூழ்போற்
கேளிவ துண்டு கிளைகளோ துஞ்சுப
வாளாடு கூத்தியர் கண்போல் தடுமாறும்
தாளாளர்க் குண்டோ தவறு.

நீர் கொள்ளுதலை நிரம்பக் கொள்ளாத ஏரியின் கீழுள்ள பயிரைப்போல், தம் உறவினர், கொடுப்பதை உண்டு சுற்றங்கள் சோம்பிக் கிடந்து பின் அவர் வறுமைப்பட்டபோது தாமும் வருந்தி இறப்பர். வாட்கூத்து ஆடுகின்ற கூத்துப் பெண்டிருடைய கண்களைப்போல் உழலும் முயற்சியுடையார்க்கு, இப் பிழைபட்ட வாழ்வு உண்டோ?

**192.** ஆடுகோ டாகி அதரிடை நின்றதூஉம்
காழ்கொண்ட கண்ணே களிறணைக்குங் கந்தாகும்;
வாழ்தலும் அன்ன தகைத்தே ஒருவன்தான்
தாழ்வின்றித் தன்னைச் செயின்.

துவள்கின்ற இளங்கொம்பாகி வழியிடையே நின்ற சிறு மரமும் உள்வயிரங் கொண்டு முதிரிய காலத்தில் ஆனைகளைக் கட்டுதற்குரிய கட்டுத்தறியாக உதவும்; ஒருவன் முயற்சியால் தன்னை ஆற்றலிற் குறைவில்லாமற் செய்துகொள்வானா

2 2 ... 2010

யின், அவன் தனது வாழ்க்கையிற் பெருமை கொள்ளுதலும் அதுபோன்ற தன்மையதேயாகும்.

193. உறுபுலி ஊனிரை யின்றி ஒருநாள்
சிறுதேரை பற்றியுந் தின்னும்—அறிவினுல்
கால்தொழி லென்று கருதற்க கையினுல்
மேல்தொழிலும் ஆங்கே மிகும்.

வலிமை மிக்க புலி தனக்கேற்ற இறைச்சி யுணவில்லாமல் ஒரோவொருகால் சிறிய தவளையைப் பிடித்துத் தின்னும்; ஆதலால், தமக்குரிய அறிவு மேம்பாட்டினுல், எதனையுங் காலாற் செய்தற்குரிய சிறு தொழிலென்று யாருங் கருதாதிருப்பாராக அச் சிறு தொழிலையும் பொருள்செய்தொழுகும் முயற்சியினுல் உயர்ந்த தொழிலும் அதிலிருந்தே பெருகி வரும்.

194. இசையா தெனினும் இயற்றியோ ராற்றல்
அசையாது நிற்பதாம் ஆண்மை—இசையுங்கால்
கண்டல் திரையலைக்கும் கானலந் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாரோ மற்று.

தாழையை அலைகள் சிதைக்கின்ற கடற்கரைச் சோலையையுடைய குளிர்ந்த துறைவனே! மேற்கொண்ட காரியம் ஊழ்வினையினுல் எளிதிற் கூடிவாராதாயினும் அவ்வூழ் இப்பிறவியில் வழி செய்துவிட்ட ஓர் வகையினுல் தளராமல் நின்று முயல்வதே ஆடவர்க்குரிய ஆண்மைப் பண்பாகும். மற்று, ஊழ் கூட்டுதலால் ஒன்று எளிதிற் கூடி வருமாயின், பெண்மக்களும் அதனை முடித்துப் பெருமை யடையாரோ?

195. நல்ல குலமென்றும் தீய குலமென்றும்
சொல்லள வல்லால் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொருள் ஒன்றோ தவம்கல்வி ஆள்வினை
என்றிவற்றா னாகுங் குலம்.

உலகத்தில் நல்ல குலமென்றும் கெட்ட குலமென்றும் பிறப்பின்மேல் ஏற்றிச் சொல்லுதல் வெறுஞ் சொல்லளவே யல்லால் அதற்குப் பொருளில்லை; குலம் என்பது தொன்றுதொட்டு வரும் மேன்மையினையுடைய செல்வத்தால் மட்டுமன்று, தவம் கல்வி முயற்சி என இவைதம்மாலெல்லாம் உண்டாவதாகும்.

196. ஆற்றுந் துணையும் அறிவினை உள்ளடக்கி
ஊக்கம் உரையார் உணர்வுடையார்—ஊக்கம்
உறுப்பினால் ஆராயும் ஒண்மை யுடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு.

நுண்ணுணர்வுடையோர் ஓர் அருஞ்செயலைச் செய்து முடிக்குமளவும் தமது அறிவின் திறத்தை மனத்தில் அடக்கித் தம் முயற்சிகளைப் பிறர்க்குச் சொல்லார். மேலும் அவர், தமது ஆற்றலைத் தம் கண் முதலிய உறுப்புக்களாற் பிறர் ஆராய்ந்து தெரிந்துகொள்ளுதற் கேற்ற அறிவு விளக்க முடையவராவர்; உலகம் அத்தகைய திறமையான தாளாண்மை யுடையோரின் குறிப்பின்வழிப் பட்டது.

197. சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைகட் டோன்றிற்றான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்.

கறையானால் அரிக்கப்பட்ட ஆலமரத்தை அதன் விழுது அதனைத் தாங்கும் வன்மையுடையதாய் ஊன்றி நின்றாற்போல, தந்தையினிடத்தில் தளர்ச்சி தோன்றினால் அவன் பெற்றெடுத்த புதல்வன் பாதுகாக்க அது நீங்கும்.

198. ஈனமாய் இல்லிருந் தின்றி விளியினும்
மானந் தலைவருவ செய்பவோ—யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றாள்
அரிமா மதுகை யவர்.

யானையினது புள்ளிகளையுடைய முகத்தைப் புண்படுத்த வல்ல கூரிய நகங்கள் பொருந்திய வலிய கால்களையுடைய சிங்கத்தைப் போன்ற முயற்சி வலிமையையுடையோர், நிலை குன்றவாகி வீட்டில் அலுவலில்லாது தங்கி வருவாயின்றி இறக்க நேரினும், பழி உண்டாகக் கூடிய செயல்களைச் செய்வார்களோ?

**199.** தீங்கரும் பீன்ற திரள்கால் உளையலரி
தேங்கமழ் நாற்ற மிழந்தாஅங்—கோங்கு
முயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை.

இனிப்பாகிய கருப்பங்கழி தோற்றிய திரண்ட தாளை யுடைய பிடரி மயிர் போன்ற கரும்பு மலர் தேனோடு கூடி மணக்கும் நறுமணத்தை இழந்தாற்போல், தன் புகழைச் சான்றோர் எழுதி நிலைநிறுத்துதற்குரிய அரிய முயற்சித் திறம் இல்லாவிட்டால், மிக்க உயர்குடியுட் பிறத்தலால்மட்டும் யாது பயனுண்டு?

**200.** பெருமுத் தரையர் பெரிதுவந் தீயுங்
கருனைச்சோ றார்வர் கயவர்—கருனையைப்
பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும்.

முயற்சியில்லாத கீழ்மக்கள், பெருமுத்தரைய ரென்பார் மிக மகிழ்ந்தளிக்குங் கறிகளோடு கூடிய உணவையுண்டு வாழ்நாட் கழிப்பர்; கறிகளைப் பேர்தானும் அறியாத முயற்சியாளர்கள் மிகவும் விரும்புகின்ற, அவர்தம் முயற்சியுடைமையாற் கிடைத்த நீருணவும், அவர்க்குத் தேவருணவாக மாறி மெய்யின்பந்தருதல் உறுதியாகும்.

## 21-ம் அதி. சுற்றந் தழால்

உறவினர் நீங்கிவிடாதபடி அவரைத் தழுவியொழுகுதல்.

**201.** வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும்
கவாஅன் மகற்கண்டு தாய்மறந் தாஅங்
கசாஅத்தான் உற்ற வருத்தம் உசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும்.

கருவுற்றபோது தோன்றிய வேட்கைத் துன்பமும், இடையிற் கரு சுமந்து வந்த வருத்தமும், கருவுயிர்த்த அக் காலத்தில் உண்டான இன்னலும் தாய் தன் தொடையில் மகனைக் கண்டு மறந்துவிட்டாற்போல, முயற்சிகளினிடையே தளர்ச்சியால் ஒருவன் அடைந்த துன்பம், ஆய்ந்து சூழ்தற்குரிய தன் சுற்றத்தாரைக் கண்டவளவில் நீங்கும்.

**202.** அழல்மண்டு போழ்தின் அடைந்தவர்கட் கெல்லாம்
நிழல்மரம்போல் நேரொப்பத் தாங்கிப்—பழுமரம்போற்
பல்லார் பயன்துய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

வெயிலின் அழல் மிகுந்த காலத்தில் தன்னை அடைந்தவர்கட்கெல்லாம் ஒப்ப உதவும் நிழல் மரம்போல் வறுமையின் அழல் மிகுந்த காலத்தில் தன்னை அடைந்தவர்கட் கெல்லாம் சமம் பொருந்தக் காத்து, பழுத்துள்ள மரம் பலரும் நுகரப் பழங்கள் உதவுதல்போல் பலரும் பயன் நுகரப் பொருள் உதவி, தான் மேன்மேலும் பொருளீட்டும் முயற்சியால் உழைப்புடையனாய் வாழ்வதே, உயர்ந்த தாளாண்மை மிக்க மகனுக்குக் கடமையாகும்.

**203.** (அடுக்கல் மலைநாட) தற்சேர்ந் தவரை
எடுக்கலம் என்னார் பெரியோர்—அடுத்தடுத்து

வன்காய் பலபல காய்ப்பினும் இல்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு.

*ஒன்றன்மேலொன் றடுக்கிய மலைகளையுடைய நாடனே! தம்மைச் சேர்ந்த சுற்றத்தவரை ஆதரியோம் என்று கூறார் பெரியோர்; வலிமை மிக்க காய்கள் பற்பல மேலுமேலுங் காய்த்தாலும் தம் காய்களைத் தாங்கிக்கொள்ளாத கிளைகள் உலகத்தில் இல்லையே.*

204. உலகறியத் தீரக் கலப்பினும் நில்லா
சிலபகலாஞ் சிற்றினத்தார் கேண்மை—நிலைதிரியா
நிற்கும் பெரியோர் நெறியடைய நின்றனைத்தால்
ஒற்க மிலாளர் தொடர்பு.

*யாவரும் அறியும்படி முற்றும் இணங்கி நேயங்கொண்டாலும் கீழோர் தொடர்புகள், நிலைபெறுதலில்லாதனவாய்ச் சில நாட்களே நிற்கும்; பிறரைத் தாங்குதலில் தளர்ச்சியில்லாதவரது தொடர்பு, இயல்பாகவே தமது பெரு நிலையில் திரியாமல் நிற்கும் பெரியோர், தமக்கோர் வீடுபெற்று நெறி வந்து பொருந்த அதன்கண் அழுந்தி நின்றொழுகினாற் போன்ற தன்மையுடையது.*

205. இன்னர் இனையர் எமர்பிறர் என்னுஞ்சொல்
என்னும் இலராம் இயல்பினால்—துன்னித்
தொலைமக்கள் துன்பந்தீர்ப் பாரேயார் மாட்டும்
தலைமக்க ளாகற்பா லார்.

*இவர் இத்தகையவர்; இவர் இவ்வளவினர், இவர் எம்மைச் சேர்ந்தவர், இவர் பிறரைச் சேர்ந்தவர் என்னுஞ் சொல் சிறிதும் இலராகிய தன்மையினால், நிலையிழந்த மக்களின் இன்னலைத் தாமே அவரை யடைந்து தீர்த்து வைப்பவரே, அனைவரிடத்தும் மேன்மக்களாகக் கருதப்படும் இயல்புடையவராவர்.*

**206.** பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்
அக்காரம் பாலோ டமரார்கைத் துண்டலின்
உப்பிலிப் புற்கை உயிர்போற் கிளைஞர்மாட்
டெக்கலத் தானும் இனிது.

*பொன்னாலான உண்கலத்தில் இட்டு வைத்த புலியின் நகத்தைப் போன்ற சிறந்த சோற்றை மனம் பொருந்தாதவ ரிடத்திருந்து சர்க்கரையோடும் பாலோடும் உண்ணுதலைவிட, உப்பில்லாததான புல்லரிசிக் கஞ்சியை உயிர்போன்ற உறவின ரிடமிருந்து எந்தக் கலத்திலாலும் உண்ணுதல் இன்பந் தருவ தாகும்.*

**207.** நாள்வாய்ப் பெறினுந்தந் நள்ளாதா ரில்லத்து
வேளாண்மை வெங்கருனை வேம்பாகும்—கேளாய்
அபரானப் போழ்தின் அடகிடுவ ரேனுந்
தமராயார் மாட்டே இனிது.

*காலத்திற் பெற்றாலும், தம் உறவாகாதவர் வீட்டின் ஒப்புரவோடு கூடிய சூடான கறியுணவு, வேப்பங்காயை ஒத்தது; இது கேள்; பிற்பகற் போழ்திற் கீரையுணவு இடுவாரா னும் உறவினரானோரிடமே இனிமையா யிருக்கும்.*

**208.** முட்டிகை போல முனியாது வைகலும்
கொட்டியுண் பாருங் குறடுபோற் கைவிடுவர்
சுட்டுக்கோல் போல எரியும் புகுவரே
நட்டா ரெனப்படு வார்.

*கம்மாளரின் சம்மட்டிபோல் நாடோறும் வெறுத்தலில் லாமல் தம்மை இடித்திடித்து வயிறு பிழைப்பாரும் நோத்திற் குறடுபோற் கைவிட்டு விடுவர்; ஆனால், உறவானவரெனப்படு வோர் அங்ஙனம் நோத்திற் கைவிடாமல் உலையாணிக் கோல் போல் தம்முடன் எரியும் புகுந்து உடன் துன்புறுவர்.*

209. நறுமலர்த் தண்கோதாய்! நட்டார்க்கு நட்டார்
மறுமையுஞ் செய்வதொன் றுண்டோ—இறுமளவும்
இன்புறுவ இன்புற் றெழீஇ அவரோடு
துன்புறுவ துன்புறுக் கால்.

*சிறந்த மலர்களால் தொடுக்கப்பட்ட குளிர்ந்த மாலையை யணிந்த மாதே! இறக்கும் வரையிலும், தம் உறவினர் இன்புறுவன தாமும் இன்புற்றிருந்து துன்புறுவன அவரோடு துன்புறுவிடின், உறவினர்க்கு உறவினர் மறுமையிலுஞ் செய்வதோர் நன்மையுண்டோ?*

210. விருப்பிலா ரில்லத்து வேறிருந் துண்ணும்
வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாம்—விருப்புடைத்
தன்போல்வா ரில்லுள் தயங்குநீர்த் தண்புற்கை
என்போ டியைந்த அமிழ்து.

*அன்பில்லாதவர் வீட்டில் தனியே யிருந்து உண்ணுகின்ற பூனைக்கண் போன்ற ஒளி மிக்க சூடான பொறிக்கறி யுணவும் வேப்பங்காய்போல் வெறுப்புத் தரும்; அன்புடைய தன்னொத் தார் வீட்டில் உண்ணுகின்ற விளங்கும் நீரையுடைய குளிர்ந்த புல்லரிசிக் கஞ்சியும் உடம்போடு பொருந்திய அமிழ்தமாகும்.*

---

## 22-ம் அதி. நட்பாராய்தல்

*நட்புச் செய்தற்குரியாரை அவர் கல்வி அறிவு ஒழுக்கம் முதலியவற்றால் ஆராய்ந்து கொள்ளுதல்*

211. கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே—குருத்திற்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்
மதுர மிலாளர் தொடர்பு.

கல்வியின் பயன் தெரிந்து உரிய நூல்களைக் கற்றுத் தெளிந்த மேலோருடைய நட்பு எஞ்ஞான்றுங் குருத்திலிருந்து கரும்பு தின்றாற்போல் மேலுமேலும் இனித்துச் செல்லும்; கல்வியின் இனிமையில்லாத கீழோருடைய தொடர்பு, என்றும் கரும்பை அதன் குருத்திற்கு நேரே செல்லும்படி அடியிலிருந்து தின்று சென்றாற்போன்ற தன்மையுடையது.

**212.** இற்பிறப் பெண்ணி இடைதிரியா ரென்பதோர்
நற்புடை கொண்டமை யல்லது—பொற்கேழ்
புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட!
மனமறியப் பட்டதொன் றன்று.

பொன்னின் நிறம் அருவியிற் பொருந்தி வருதலால் பறவைகள் அஞ்சி நீங்குகின்ற பொலிவினையுடைய மலை நாடனே! குடிப்பிறப்புக் கருதி இவர் இடையில் வேறுபடார் என்பதொரு சிறந்த வகையை உட்கொண்டு நட்புச் செய்த தல்லது, மனம் அறிந்த உண்மை வேறொன்றனாலன்று.

**213.** யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

யானையை யொத்த இயல்புடையாரது நேயத்தை நீக்கி நாயை யொத்த இயல்புடையாரது நேயத்தைத் தழுவிக் கொள்ளுதல் வேண்டும்; ஏனென்றால், யானை பலநாள் பழகியிருந்தும் தன்னை வளர்த்த பாகனையே குற்றங் கண்டு கொல்லும்; ஆனால் நாயோ, தன்னை வளர்த்தவன் சினத்தால் தன்மேல் வீசிய வேல் தன் உடம்பில் உருவி நிற்க, அன்பினால் அவன்பால் வால் குழைத்து நிற்கும்.

214. பலநாளும் பக்கத்தா ராயினும் நெஞ்சிற்
சிலநாளும் ஒட்டாரோ டொட்டார்—பலநாளும்
நீத்தா ரெனக்கை விடலுண்டோ தந்நெஞ்சத்
தியாத்தாரோ டியாத்த தொடர்பு.

*பலநாளும் அருகிலிருந்து பழகினாராயினும் மனத்திற் சில நாளாயினும் நட்புப் பொருந்தாதவரோடு தெரிந்தோர் சேர மாட்டார்; தமது நெஞ்சத்தில் நட்புப் பொருந்தியவரோடு பிணிப்புண்ட தொடர்பு, அவர் பல நாட்கள் அருகிலில்லாமல் நீங்கினரென்று கைவிடப்படுத லுண்டோ?*

215. கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி—தோட்ட
கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரும் நட்பாரும் இல்.

*மரங்களிற் பூக்கும் பூக்கள் முதலில் மலர்ந்து பின் தாம் உதிரும் வரையிற் குவியாமைபோல் தலைநாளில் உள்ளம் மலர்ந்து பின் தமது முடிவுவரையிற் சுருங்காமல் விரும்பியது விரும்பியதா யிருப்பதே நட்புடைமையாம்; அவ்வாறன்றி, நீர் நிலைகளிற் பூக்கும் இதழ்மிக்க பூக்கள்போல் தலைநாளில் மகிழ் பூத்து நாளடைவில் மனஞ் சுருங்கும் இயல்பினரை விரும்பு வாரும் நேசிப்பாரும் உலகில் இல்லை.*

216. கடையாயார் நட்பிற் கமுகனையர் ஏனை
இடையாயார் தெங்கின் அனையர்—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு.

*நேயமுறைமையில், கீழோர் பாக்குமரத்தின் இயல்பை ஒத்தவர்; இடைத்தரமானவர்கள் தென்னை மரத்தின் இயல்பை ஒத்தவர்; ஏனை உயர்ந்தோ ரெனப்படும் பழைமை கருதுவாரது*

நட்பு, மதிப்பு மிக்க பனைமரத்தின் இயல்பு போன்று நேயம் ஊன்றியபோது ஊன்றியதேயாம்.

**217.** **கழுநீருட் காரட கேனும் ஒருவன்**
**விழுமிதாக் கொள்ளின் அமிழ்தாம்—விழுமிய**
**குய்த்துவையார் வெண்சோறே யாயினும் மேவாதார்**
**கைத்துண்டல் காஞ்சிரங் காய்.**

*கழுநீருட் பெய்து சமைத்த கறுத்த இலைக்கறியேனும் ஒருவன் அன்புடையதாகப் பெற்றால் அஃது அமிழ்தமாய் நன்மை தரும்; சிறந்த தாளிப்புப் பொருந்திய துவைத்த கறிகளோடு கூடிய வெண்ணிறமான நெல்லரிசி யுணவேயாயினும் அன்பு பொருந்தாதவர் கையிலுள்ளதாய் உண்ணுதல் எட்டிக் காய்போல் வெறுப்புத் தருவதாகும்.*

**218.** **நாய்க்காற் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும்**
**ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னும்?**
**சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும் செய்விளைக்கும்**
**வாய்க்கா லனையார் தொடர்பு.**

*நாய்க்காலினது சிறிய விரல்கள் நெருக்கமாயிருப்பது போல் மிக நெருக்கமுடையாராயினும் ஓர் ஈக்காலளவும் உதவி செய்யாதவரது நட்பு என்ன பயனுடையதாகும்? கழனி முழுமையும் விளைக்கும் நீர்க்காலை ஒத்த இயல்பினரது தொடர்பு, தொலைவிலுள்ளதாயினும் அதனைத் தேடிச் சென்று அடைதல் வேண்டும்.*

**219.** **தெளிவிலார் நட்பிற் பகைநன்று சாதல்**
**விளியா வருநோயின் நன்றால்—அளிய**
**இகழ்தலின் கோறல் இனிதேமற் றில்ல**
**புகழ்தலின் வைதலே நன்று.**

*நம்பத் தகாதவரது நட்பினும் அவரது பகை நலந்தரும்; தீராத கொடிய நோயினும் இறத்தல் நலமாகும்; பிறரை*

நெஞ்சு புண்ணாகும்படி இகழ்தலினும் அவரைக் கொல்லுதல் நல்லது ; ஒருவரிடம் இல்லாதன கூறிப் புகழ்தலினும் அவரைப் பழித்தலே நன்மையாம்.

**220.** மரீஇப் பலரோடு பன்னாள் முயங்கிப்
பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும் ;
பரீஇ உயிர்செகுக்கும் பாம்பொடும் இன்னா
மரீஇப் பின்னைப் பிரிவு.

பலநாள் பலரோடும் சேர்ந்து ஒத்துக் கலந்து பழகி, பொருளாகத் தக்காரையே நட்புக் கொள்ளல் வேண்டும். ஏனென்றால், கடித்து உயிரை அழிக்கும் பாம்போடாயினும், கூடிப் பின்பு பிரிதல் இன்னாமையாகும்.

---

## 23-ம் அதி. நட்பிற் பிழைபொறுத்தல்

நட்பினரிடத்துக் குற்றம் உண்டாயின், அஃது அறியாமை யானாதல் அல்லது ஊழினாதல் உண்டாதலன்றி வேறின்றாக லின், பழைமை கருதி அதனைப் பொறுத்து, அவர் நட்பினையே பாராட்டி யொழுகுதல்.

**221.** நல்லா ரெனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினும் அடக்கிக் கொளல்வேண்டும் ;
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு.

நல்லவரென்று தாம் பலகால் ஆராய்ந்து மிகவும் நேசித்துக் கொண்டவரைப் பின்பு ஒருகால் அவர் நல்லவரல்லாராய்ப் பிழைபட்டாரெனினும், அதனைப் பொறுத்து அவரைத் தம் மிடமே இணக்கிக்கொள்ளல் வேண்டும் ; ஏனென்றால், பயன் படுதலுடைய நென்மணிக்கு அதிலிருந்து நீக்குதற்குரிய உமி

யுண்டு, அவ்வாறே நீர்க்கு நுரையுண்டு, பூவிற்கும் புறவிதழ் உண்டு.

**222.** **செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டூடார்**
**மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசைஇ வாழ்நர்**
**வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே**
**தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு.**

*நீரின் நன்மையை விரும்பி வாழ்வோர், வயலில் அதனைக் கட்டுந்தோறும் அஃது உடைத்துடைத்துச் செல்லும் இயல்பினதாயினும், அப் புதுப் புனலோடு சினத்தல் செய்யாராய் மீண்டும் மீண்டும் அதனை மடைகட்டிப் பயன்படுவர்; உயர்ந்தவரேன்று தாம் முன்னர் விரும்பி நட்புச் செய்து கொண்டவரது தொடர்பினைப், பின்பு அவர் வெறுத்தற்குரிய பிழைகளை வெறுப்புண்டாகும்படி செய்தாலும் அவற்றைப் பொறுத்து மேற்கொள்வர்.*

**223.** **இறப்பவே தீய செயினுந்தந் நட்டார்**
**பொறுத்தல் தகுவதொன் றன்றே—நிறக்கோங்**
**குருவவண் டார்க்கும் உயர்வரை நாட!**
**ஒருவர் பொறையிருவர் நட்பு.**

*தம்மோடு நட்புக் கொண்டவர் மிகவுந் தீங்குகள் செய்தாலும் அவற்றைப் பொறுத்தொழுகுதல் தகுதியானதொன்றன்றே! நிறமான கோங்க மலரில் அழகிய வண்டுகள் சென்றொலிக்கின்ற உயர்ந்த மலைகளையுடைய நாடனே! ஒருவரது பொறை இருவர் நட்புக்கு இடம்.*

**224.** **மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தம்**
**கடுவிசை நாவாய் கரையலைக்குஞ் சேர்ப்ப!**
**விடுதற் கரியார் இயல்பிலரேல் நெஞ்சம்**
**சுடுதற்கு மூட்டிய தீ.**

மிக்க விசையோடு வருகின்ற மரக்கலங்கள், மடிந்து விழுகின்ற அலைகள் கொழித்த வெள்ளிய கதிர்களையுடைய முத்துக்களைக் கரையிற் சிதறச் செய்யுந் துறையை யுடையாய்! நட்பு விடுதற்குக் கூடாதவர் இடையே நல்லியல்பில்லாதவராயின், அத்தகையோர் தமதுள்ளம் புண்படுதற்கு மூட்டிய தீயாவர்.

225. இன்னா செயினும் விடற்பால ரல்லாரைப்
பொன்னாகப் போற்றிக் கொளல்வேண்டும்—பொன்னொடு
நல்லிற் சிதைத்ததீ நாடொறும் நாடித்தம்
இல்லத்தில் ஆக்குத லால்.

இடையே தீயன செய்தாலும் நட்புவிடுந் தன்மைய ரல்லாரைப் பொன்னைப்போல் மதித்துக் காத்துக்கொள்ளுதல் வேண்டும்; ஏனென்றால், பொன் முதலிய பொருள்களோடு சிறந்த வீட்டையும் எரித்தழிக்கும் இயல்பு வாய்ந்த தீயை, நாடோறும் விரும்பித் தமது இல்லத்தில் வளர்த்தலால் என்க.

226. இன்னா செயினும் விடுதற் கரியாரைத்
துன்னாத் துறத்தல் தகுவதோ—துன்னருஞ்சீர்
விண்குத்து நீள்வரை வெற்ப! களைபவோ
கண்குத்திற் றென்றுதங் கை.

அணுகுதற்கரிய சிறப்பினையுடைய வானத்தைக் குத்தும் நீண்ட மூங்கில்களையுடைய மலைநாடனே! தவறுதலால் தம் கண்ணைக் குத்திற்றென்று தமது கையை மக்கள் தறித்து நீக்கிவிடுவார்களோ? ஆதலால், அறியாமையால் தீங்குகள் செய்தாலும், நீக்குதற்குக்கூடாத நட்பினரை, நெருங்காமற் கைவிட்டு விடுதல் தகுந்ததாகுமோ! ஆகாது.

227. இலங்குநீர்த் தண்சேர்ப்ப! இன்னா செயினும்
கலந்து பழிகாணார் சான்றோர்—கலந்தபின்

தீமை யெடுத்துரைக்குந் திண்ணறி வில்லாதார்
தாமும் அவரிற் கடை.

விளங்குகின்ற நீரினையுடைய கடலின் குளிர்ந்த துறைவனே! நட்புச் செய்தபின் நண்பர் கொடுமைகள் செய்தாலும் சான்றோர் அவர்பாற் குற்றங் காணார்; நட்புச் செய்தபின் நண்பருடைய குற்றங்களை எடுத்துப் பேசுகின்ற உறுதி வாய்ந்த அறிவு இல்லாதவர் தாமும் அந் நண்பரைப்போற் கடைப்பட்டவரேயாவர்.

228. ஏதிலார் செய்த திறப்பவே தீதெனினும்
நோதக்க தென்னுண்டாம் நோக்குங்கால்—காதல்
கழுமியார் செய்த கறங்கருவி நாட!
விழுமிதாம் நெஞ்சத்துள் நின்று.

நண்பரல்லாத அயலார் செய்தது மிகவுந் தீங்குடையதென்றாலும் அதன் காரணத்தை ஆராயுமிடத்து ஒன்று அறியாமையான் அல்லது ஊழினான் என்று பெறப்படுதலின் அதன்கண் மனம் வருந்தத் தக்கது யாதுண்டு? ஆதலால், ஒலிக்கின்ற மலையருவிகளையுடைய நாடனே! அன்பு மிகப் பொருந்திய நண்பர் செய்துவிட்ட தீங்கு, எவ்வாற்றானும் மனம் வருந்தத்தக்க தாகாமல், நெஞ்சத்தில் ஆராய்ந்து நோக்க, அன்பின் சிறப்புடையதே யாகும் என்க.

229. தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தா ராயின் அவரைத்
தமரினும் நன்கு மதித்துத் தமரன்மை
தம்முள் அடக்கிக் கொளல்.

நண்பர் என்று தாம் நட்புக் கொண்டவரிடத்து இடையே நண்பராகாத் தன்மையைத் தாம் அறிந்தால், அவரை நண்பரினும் மிகுதியாகப் போற்றி அவரது நண்பரல்லாத நிலை

யைப் புறத்தே தூற்றாமல் தமக்குள் காத்துக் கொள்ளுதல் வேண்டும்.

**230.** குற்றமும் ஏனைக் குணமும் ஒருவனை
நட்டபின் நாடித் திரிவேனேல்—நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
அறைகடல்சூழ் வையம் நக.

குற்றமும் மற்றைக் குணமும் ஒருவனை நட்புச் செய்த பின் அவனிடம் தேடிக்கொண்டு திரிவேனாயின், நட்புக்கொண்டவனுடைய மறைவுகளைத் தன்னுட் பொதிந்து வையாமல் வெளியிட்டுவிட்ட தீயோன் செல்லுந் திக்கதிக்கு நான் செல்வேனாக; அன்றியும், ஒலிக்குங் கடல் சூழ்ந்த உலகம் என்னை இகழ்வதாக.

---

## 24-ம் அதி. கூடா நட்பு

பொருந்தாத நட்பினியல்பை விளக்குவது.

**231.** செறிப்பில் பழங்கூரை சேறணை யாக
இறைத்துநீ ரேற்றுங் கிடப்பர்—கறைக்குன்றம்
பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட!
தங்கரும முற்றுந் துணை.

கரிய மலைகள் பொங்கும் அருவிநீர் ஒழுகப்பெறுகின்ற நீரெல்லையை யுடைய சிறந்த நாடனே! கட்டுக் கோப்புப் பிரிந்த பழங் கூரையையுடைய வீட்டில் சேற்றையே அணை யாகக் கொண்டு, ஒழுகும் நீரை இறைத்தும் தம்மேல் ஏற்றும் தமது காரியம் முடியுமளவும் மக்கள் வருந்திக் கிடப்பர். (அது போல், பொறுக்க முடியாத குற்றங்களுடைய பொருந்தாத

நண்பரிடம் தம் காரியம் நிறைவேறுமளவு மட்டும் நல்லோர் மிக்க இடர்களோடு தொடர்பு கொண்டிருப்பர்.)

232. சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோல் மாண்ட பயத்ததாம்—மாரி
வறந்தக்கால் போலுமே வாலருவி நாட!
சிறந்தக்காற் சீரிலார் நட்பு.

வெண்மையான மலையருவிகளையுடைய நாடனே! தக்கோர் நட்பு மிக்க மேம்பாடுடையதாய் மழை பெய்தாற் போற் சிறந்த பயனுடையதா யிருக்கும்; தகுதியில்லாதார் நட்பு மிகுந்தால், மழை பெய்யா தொழிந்தாற்போல் வாழ்க்கை வெறித்திருக்கும்.

233. நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றாம்—நுண்ணூல்
உணர்வில ராகிய ஊதிய மில்லாரைப்
புணர்தல் நிரயத்துள் ஒன்று.

நுட்ப உணர்வுடையாரோடு கலந்து பழகி இன்புறுதல் விண்ணுலகத்தின் இன்பமே போலும் விரும்பப்படும் மேன்மையினையுடையது; நுண்ணிய நூலுணர்வு மில்லாதவராகிய பயனிலாரோடு நேயங் கொள்ளுதல் நரகத்திற் சேர்தலை ஒக்கும்.

234. பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போல்
ஒருபொழுதுஞ் செல்லாதே நந்தும்—அருகெல்லாஞ்
சந்தன நீள்சோலைச் சாரல் மலைநாட
பந்த மிலாளர் தொடர்பு.

பக்கங்களிலெல்லாம் நீண்ட சந்தனச் சோலைகளின் சாரலையுடைய மலைநாடனே! பிணிப்பான நட்பில்லாதவரது தொடர்பு, வைக்கோலிற் பற்றிய தீப்போல் முதலிற் பெருகு

வது போலத் தோன்றிப் பின்பு சிறிது நேரமும் நிலைத்து நிகழா மற் கெடும்.

235. செய்யாத செய்துநாம் என்றலும் செய்வதனைச்
செய்யாது தாழ்த்துக்கொண் டோட்டலும்—மெய்யாக
இன்புறூஉம் பெற்றி இகழ்ந்தார்க்கும் அந்நிலையே
துன்புறூஉம் பெற்றி தரும்.

பிறர் செய்யாத செயல்களை யாம் செய்து முடிப்பேம் என்று வீறு கூறுதலும், தன்னாற் செய்தற்குரியதை உடனே செய்து முடிக்காமற் காலந் தாழ்த்துக் கொண்டு நாளை ஓட்டு தலும், உண்மையில் இன்பம் உறுதற்குரிய இயல்புகளைப் பொருள் செய்யாதிருத்தலும் உடையார்க்கு, அம் மனப்பாங்கே அவர் துன்புறுதற்குரிய நிலைகளை வருவிக்கும்.

236. ஒருநீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்
விரிநீர்க் குவளையை ஆம்பலொக் கல்லா
பெருநீரார் கேண்மை கொளினுநீ ரல்லார்
கருமங்கள் வேறு படும்.

ஒரு குளத்து நீரில் தோன்றி ஒன்றாய் வளர்ந்தாலும் மணம் வீசும் இயல்புடைய குவளை மலர்களை ஆம்பல் மலர்கள் ஒவ்வா; அதுபோலப் பெருந்தன்மை யுடையாரது நட்பைப் பெறினும் அத்தன்மை யில்லாதாருடைய செயல்கள் வேறாகவே நிகழும்.

237. முற்றற் சிறுமந்தி முற்பட்ட தந்தையை
நெற்றுக்கண் டன்ன விரலால் ஞெமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கும் மலைநாட ! இன்னதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு.

இளங்குரங்கு, பயற்றங்காயின் நெற்றைக் கண்டாற் போன்ற தன் விரல்களால் தன் எதிர் வந்த தந்தையின்

கையைக் குத்தி விரியச் செய்து அது வைத்திருந்த கனியைப் பறித்துக் கொள்கின்ற மலைகளையுடைய நாடனே! அகங் கலந்த நேயங் கொள்ளாதாரது நட்பு, துன்பமுடையதாகும்.

238. முட்டுற்ற போழ்தின் முடுகிஎன் ஆருயிரை
நட்டான் ஒருவன்கை நீட்டேனேல்—நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க;
நெடுமொழி வையம் நக.

நண்பனுக்கு இடுக்கண் உண்டான காலத்தில், விரைந்து எனது பெறற்கரிய உயிரை நட்புச்செய்த அவ்வொருவன் கையில் நான் ஒப்படைக்கேனானால், தன் நண்பன் காவலிலுள்ள மனைவியின் கற்புறுதியை நிலைகுலைத்த தீயோன் செல்லுந் தீக் கதிக்கு யான் செல்வேனாக; அன்றியும், நிலைத்த புகழினையுடைய உலகம் என்னை இகழ்வதாக.

239. ஆன்படு நெய்பெய் கலனுள் அதுகளைந்து
வேம்படு நெய்பெய் தனைத்தரோ—தேம்படு
நல்வரை நாட! நயமுணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரோடு நட்பு.

தேன் உண்டாகின்ற உயர்ந்த மலைகளையுடைய நாடனே! இனியது அறியும் பேரறிஞரது நண்பினின்றும் நீங்கிச் சிற்றறிவினாரோடு செய்யும் நட்பு, ஆனிடத்தில் உண்டாகும் நெய்யைப் பெய்திருந்த கலத்தில் அந் நெய்யை நீக்கி வேம்பின் விதையைக் காய்ச்சியெடுத்த வேப்பெண்ணெயைப் பெய்து வைத்தாற்போன்ற தன்மையதாகும்.

240. உருவிற் கமைந்தான்கண் ஊராண்மை இன்மை
பருகற் கமைந்தபால் நீரளா யற்றே
தெரிவுடையார் தீயினத்தா ராகுதல் நாகம்
விரிபெடையோ டாடிவிட் டற்று.

காட்சிக்கு இனியனாய் உருவமைந்த ஒருவனிடம் ஒப்புர வில்லாமை, பருகுதற்கு அமைந்த பாலில் நீர் கலந்திருந்தாற் போன்ற தன்மையதாகும்; ஞானமுடையோர் தீய சார்புடை யாரோடு நட்புச்செய் தொழுகுதல், நாகப்பாம்பு பெட்டை விரியனோடு தவறாக இழைந்துவிட்டாற்போன்ற தன்மை யுடையதாகும்.

---

## 25-ம் அதி. அறிவுடைமை

இயற்கையறிவினை யுடையனாதல்.

**241.** பகைவர் பணிவிடம் நோக்கித் தகவுடையார்
தாமேயும் நாணித் தலைச்செல்லார் காணாய்
இளம்பிறை யாயக்கால் திங்களைச் சேரா
தணங்கருந் துப்பின் அரா.

பிறிதொன்றினால் வருத்துதலில்லாத வலிமையினையுடைய இராகுவென்னும் பாம்பு, மதியத்தை அது இளைய பிறை நிலாவாய் மாறிற் சேராது; அதுபோல, பகைவரின் தளர்வு நிலை கருதித் தகுதியான அறிவுடையோர் தாமாகவும் உள்ள மொடுங்கி, அவர்மேற் செல்லுதலில்லாதவராவர்.

**242.** நளிகடல் தண்சேர்ப்ப! நல்கூர்ந்த மக்கட்
கணிகல மாவ தடக்கம்—பணிவில்சீர்
மாத்திரை யின்றி நடக்குமேல் வாழுமூர்
கோத்திரங் கூறப் படும்.

பெரிய கடலின் குளிர்ந்த துறைவனே! வறுமையுற்ற மாந்தர்க்கு அணிகலம்போற் சிறப்பது அடக்கமுடைமையாகும். பணிதலில்லாது உயர்ந்தொழுகுதலில் ஒரு வரம்பில்லாமல் நடப் பாரானால், தாம் வாழும் ஊரவரால் தமது குடிப் பிறப்புப் பற்றிப் பழிக்கப்படுவர்.

**243.** எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காழ் தெங்காகா
தெந்நாட் டவரும் சுவர்க்கம் புகுதலால்
தன்னூற்றான் ஆகும் மறுமை வடதிசையும்
கொன்னாளர் சாலப் பலர்.

எந்த நிலத்தில் விதையை இட்டாலும் எட்டி விதை தென்னைமரமாக வளராது; ஆதலால், எந்த நாட்டின்கண் வாழ்வோரும் தமது நல்வினையினால் தேவருலகம் செல்லுதலால், ஒருவற்குத் தனது முயற்சி வகையினாலேயே மறுமைப் பேறு உண்டாதல் கூடுமன்றி இடத்தின் சார்பினாலன்று. போகவுலகிருக்கும் வடதிசையின்கண்ணும் வறிது வாழ்நாட் கழித்து நரகுபுகுவோர் மிகப் பலராவர்.

**244.** வேம்பின் இலையுட் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதுந் திரியாதாம்—ஆங்கே
இனந்தீ தெனினும் இயல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்கம் அரிது.

வேம்பின் இலையுள் இருந்து பழுத்தாலும் வாழைப்பழம் தனது இன்சுவையிற் சிறிதும் வேறுபடாது. அதுபோலவே, தமக்கு நேர்ந்த சார்பு தீயதெனினும் இயற்கையறிவுடையாரது நட்பு, மனந் தீயதாய் மாறும் வகை அரிதாயிருக்கும்.

**245.** கடல்சார்ந்தும் இன்னீர் பிறக்கும் மலைசார்ந்தும்
உப்பீண் டுவரி பிறத்தலால் தத்தம்
இனத்தனைய ரல்லர் எறிகடல்தண் சேர்ப்ப!
மனத்தனையர் மக்களென் பார்.

அலைகள் வீசுகின்ற கடலின் குளிர்ந்த கரையை யுடையவனே! கடலையடுத்தும் இன்சுவைமிக்க ஊற்றுநீர் தோன்றுதலுண்டு; மலையையடுத்தும் உவர்ப்புமிக்க உப்புநீர் உண்டாதலால், பகுத்தறிவுடைய மக்களென்று சிறப்பிக்கப்படுவோர்

தமது சார்போடொத்த இயல்பினரல்லர்; தத்தம் இயற்கை யறிவோடொத்த நிலையினராவர்.

246. பீராஅரைப் புன்னை படுகடல்தண் சேர்ப்ப!
ஓராஅலும் ஒட்டலுஞ் செய்பவோ நல்ல
மருஉச்செய் தியார்மாட்டுந் தங்கு மனத்தார்
விராஅஅய்ச் செய்யாமை நன்று.

பருமனான அடிமரத்தையுடைய புன்னைமரங்கள் வளர்கின்ற கடலின் குளிர்ந்த கரையை யுடையவனே! நண்பரை ஒருகாற் பிரிதலும் மற்றொருகாற் கூடுதலும் உலகத்திற் செய்யத்தக்கனவோ? சிறந்த நட்புச்செய்து எத்தகையோரிடத்தும் நிலைத்தொழுகும் மனப்பான்மையுடையோர், முதலிலேயே நட்புச் செய்துகொள்ளாமை அதனினும் நன்றாகும்.

247. உணர உணரும் உணர்வுடை யாரைப்
புணரப் புணருமா மின்பம்—புணரின்
தெரியத் தெரியுந் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமா நோய்.

நட்புச் செய்தால், நாம் ஒன்றை உள்ளத்தால் உணர அதனைக் குறிப்பால் உணர்ந்தொழுகுங் கூருணர்வுடையாரை நட்புச்செய்ய இன்பம் பொருந்தும்; நம் கருத்துக்கள் வெளிப்படையாகத் தெரிய அந்நிலையிலும் அவற்றைத் தெரிந்தொழுகும் அறிவிலாதாரை நட்புச்செய்யாமற் பிரிந்திருக்கத் துன்பங்களும் நம்மைச் சேராமற் பிரிந்திருக்கும்.

248. நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்,—நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்.

சிறந்த நிலையில் தன்னை நிலைநிறுத்திக் கொள்வோனும், தனது முன் நிலையையுங் குலையைச்செய்து தன்னைக் கீழ் நிலைக்கண் தாழ்த்திக் கொள்வோனும், தான் முன் நிறுத்திக் கொண்ட சிறந்த நிலையினும் மேன்மேல் உயர்ந்த நிலையில் தன்னை மேம்படுத்தி நிலைசெய்து கொள்வோனும், தன்னை அனைவரினுந் தலைமையுடையோனாகச் செய்துகொள்வோனுந் தானேயாவன்.

249. கரும வரிசையாற் கல்லாதார் பின்னும்
பெருமை யுடையாருஞ் சேறல்—அருமரபின்
ஓதம் அரற்றும் ஒலிகடல் தண்சேர்ப்ப !
பேதைமை யன்ற தறிவு.

அரிய தன்மையையுடைய அலைகள் முழங்கும் முழக்க மிக்க கடலின் குளிர்ந்த துறைவனே! தொழில் முறைமை யினால், கல்வியறிவில்லாத மூடரையடுத்தும் கல்விப் பெருமை யுடைய அறிஞரும் ஒழுகுதல், அறியாமையன்று; அது, காலம் இடம் முதலியவற்றிற்கேற்ப ஒழுகும் அறிவுடைமை யாகும்.

250. கருமமும் உட்படாப் போகமும் துவ்வாத்
தருமமும் தக்கார்க்கே செய்யா—ஒருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமேல் அஃதென்ப
பட்டினம் பெற்ற கலம்.

பொருள் வரவுக் கேதுவான தொழின் முயற்சியினுள் ஈடு பட்டு, அதனால் இம்மைப் பயனாகத் தான் போகமுந் துய்த்து, மறுமைப் பயனாகத் தகுதியுடையார்க்கே அறமுஞ்செய்து, இம் மூன்றும் ஒரு தன்மையாகவே பிறவியிற் கடைசிவரையிற் றடையின்றி நிறைவேறுமாயின், அப் பேறு தன் பட்டினத்தை மீண்டுவந்தடைந்த வாணிகக் கப்பலை ஒக்கும் என்று அறிஞர் கூறுவர்.

## 26-ம் அதி. அறிவின்மை

இயற்கையறிவில்லாமை என்பது பொருள்.

**251.** நுண்ணுணர் வின்மை வறுமை அஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்—எண்ணுங்கால்
பெண்அவாய் ஆண்இழந்த பேடி அணியாளோ
கண்அவாத் தக்க கலம்.

ஆராயுமிடத்து, ஒருவனுக்கு நுட்ப அறிவில்லாமையே வறுமையாவது; அந் நுட்ப அறிவினை உடையனாயிருத்தலே அவனுக்கு மிகப் பெருகிய பெருஞ் செல்வமாகும்; மற்றுப், பெண்ணியல்பு மிக்கு ஆணியல்பு நீங்கிய பேடியும் கண்கள் விரும்பத்தக்க அழகிய அணிகலன்களை அணிந்துகொள்ளுத லுண்டன்றோ! (அதனையொத்தே அறிவிலார் பொருட்செல்வ முடையாராயிருந்து மகிழ்தலென்க.)

**252.** பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்து
அல்லல் உழப்ப தறிதிரேல்—தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி உறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து.

பல நிறைந்த கேள்விகளால் உண்டாகும் பயனைத் தம் பழக்கத்தில் நுகர்ந்து இன்புற்றுவரும் அறிஞர்கள் ஒரோவொரு கால் உலகில் தம் பெருமை குறைந்து வருந்துவதற்குக் காரணம் நீவிர் தகுதியாக அறிவீராயின், அது, பழமையாகத் தொடர்புற்றுவருஞ் சிறப்பினையுடைய நாமகள் வாழ்ந்து வருதலால், பூமகள் ஊடல்கொண்டு அவர்களிடம் சேரமாட்டாள் என்பதேயாம்.

**253.** கல்லென்று தந்தை கழற அதனையோர்
சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன்—மெல்ல

எழுத்தோலை பல்லார்முன் நீட்ட விளியா
வழுக்கோலைக் கொண்டு விடும்.

இளமையில் தன் தந்தை 'படி' என்று இடித்துக் கூற அதனையொரு நற்சொல் என்று ஏற்காமற் பொருள் செய்யாது விட்டவன், பின்பொருகால் எழுத்தெழுதிய கடிதமொன்றைப் பலர் முன்னிலையில் இதனைப் படியுமென்று ஒருவர் மெல்லத் தன் கையிற் கொடுக்கத் தனக்கு அது மாட்டாமையால் நாணத் தாற் சினந்து கூவி மானத்தால் 'ஓ'வென்று அழுதுவிடுவான்.

**254.** கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு—மெல்ல
இருப்பினும் நாய்இருந் தற்றே இராஅ
துரைப்பினும் நாய்குரைத் தற்று.

கல்வியறிவு பெறாமல் வளர்ந்துவிட்ட ஒருவன் உலகத்தில் உயர்ந்த அறிவாளிகளின் அவையில் நுழைந்து இருக்குமிடந் தெரியாமல் இருந்தாலும் அங்கிலே ஒரு நாய் இருந்தாற்போன்ற தன்மையுடையதாகும்; அவ்வாறு அடக்கமாயிராமல் ஏதானும் ஒன்று வாய்திறந்து கூறினும் அது நாய் குரைத்தாற் போன்ற தன்மையுடையதாகும்.

**255.** புல்லாப்புன் கோட்டிப் புலவ ரிடைப்புக்கு
கல்லாத சொல்லும் கடையெல்லாம் கற்ற
கடாஅயினும் சான்றவர் சொல்லார் பொருள்மேற்
படாஅ விடுபாக் கறிந்து.

அறிவு நிரம்பாத கீழ் மக்களெல்லாம், மெய்யறிவோடு பொருந்தாத புல்லறிவுக் கூட்டத்தவரான தாழ்ந்த புலவர் நடுவிற் புகுந்து, தாம் தெளிவாகக் கல்லாத கருத்துக்களை விரித்துரைப்பர்; ஆனால் அறிவு நிரம்பிய பெரியோர்களோ, தாம் கற்ற கருத்துக்களையே பிறர் வினவினாலும், அந் நுண்

பொருள்கள்மேல் அவர் அறிவு கூரிதாகச் செல்லமாட்டாமல் விட்டுப்போதல் அறிந்து, அவற்றைக் கூறாமல் அடக்கமா யிருப்பர்.

256. கற்றறிந்த நாவினர் சொல்லார்தம் சோர்வஞ்சி
மற்றைய ராவார் பகர்வர் பனையின்மேல்
வற்றிய ஓலை கலகலக்கும் எஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை ஒலி.

கற்றுத் தெளிந்த நாவன்மையினையுடைய மேலோர் தம் தவறுதலுக்கஞ்சி மிகுதியாகப் பேசார்; ஆனால் கற்றறிவில்லா ஏனையராவோர் அவ்வச்சமின்றி யாதானும் பேசிக்கொண்டிருப்பர்; பனைமரத்தில் நீர் வற்றிய உலர்ந்த ஓலை கலகலவென்று ஓசையிட்டபடி யிருக்கும்; ஆனால் நீர்ப்பசையோடு கூடிய பச்சை ஓலைக்கு எப்போதும் ஒலி இல்லையாதல் காண்க.

257. பன்றிக்கூழ்ப் பத்தரில் தேமா வடித்தற்றால்
நன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்கால்
குன்றின்மேற் கொட்டுந் தறிபோல் தலைதகர்ந்து
சென்றிசையா வாகும் செவிக்கு.

நன்மையறியாத கீழ்மக்கட்கு அறமுறைமை அறிவுறுக்குமிடத்து அது, பன்றிக்குக் கூழ்வார்க்குந் தொட்டியில் தேமாம் பழத்தைச் சாறு பிழிந்தாற்போல் தகுதியற்றதாகும்; அன்றியும், ஒரு மலைப்பாறையின்மேல் அறையப்படும் மரத்தாற் செய்யப்பட்ட முளைக்குச்சி நுனி சிதைந்து அதனுள் இறங்கிப் பொருந்தாமைபோல, அவ்வறவுரையும் அவர் செவிக்கு, நுழைந்து பொருந்தாதனவாகும்.

258. பாலாற் கழீஇப் பலநாள் உணக்கினும்
வாலிதாம் பக்கம் இருந்தைக் கிருந்தன்று;
கோலாற் கடாஅய்க் குறினும் புகலொல்லா
நோலா உடம்பிற் கறிவு.

பல நாள் பாலினாற் கழுவி உலர்த்தினாலும் வெண்ணிறம் உடையதாம் நிலைமை கரிக்கு இல்லை; அவ்வாறே, கோலாற் செலுத்திக் குத்திக் கூறினும் புண்ணியஞ் செய்யாத உடம்பில் அறிவு ஏறாது.

259. பொழிந்தினிது நாறினும் பூமிசைதல் செல்லா
திழிந்தவை காமுறூஉம் ஈப்போல்—இழிந்தவை
தாங்கலந்த நெஞ்சினார்க் கென்னாகும் தக்கார்வாய்த்
தேன்கலந்த தேற்றச்சொல் தேர்வு.

தேன் சொரிந்து இனிது மணந்தாலும் மலரை உண்ணுதற்குச் செல்லாமல் இழிந்த பொருள்களையே விரும்பும் ஈயைப்போல், இழிந்த குணங்களே பொருந்திய மனமுடையார்க்குத் தகுதியுடையார் வாயினின்று வரும் இனிமை பொருந்திய தெளிந்த அறிவுரைகளின் தெரிவு நிலை என்ன பயனைத் தரும்?

260. கற்றார் உரைக்குங் கசடறு நுண்கேள்வி
பற்றாது தன்னெஞ் சுதைத்தலால்—மற்றுமோர்
தன்போல் ஒருவன் முகநோக்கித் தானுமோர்
புன்கோட்டி கொள்ளுமாம் கீழ்.

கல்வியறிவு பெற்றோர் தெரிந்து சொல்கின்ற குற்றமில்லாத நுண்ணிய கேள்விப் பொருள்களைக் கடைப்பிடியாமல் தனது மனம் இகழ்ந்து தள்ளிவிடுதலால், மற்றுக் கீழ்மகன், தன்போற் கீழ்மகனொருவன் முகத்தைப் பார்த்துத் தானும் உரையாடுதற்கு ஒரு புல்லிய அவையை அமைத்துக்கொள்வன்.

## 27-ம் அதி. நன்றியில் செல்வம்

*யார்க்கும் நன்மை பயவாத செல்வம் என்பது பொருள்.*

**261.** அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும்
பொரிதாள் விளவினை வாவல் குறுகா;
பெரிதணிய ராயினும் பீடிலார் செல்வம்
கருதும் கடப்பாட்ட தன்று.

*குறைவில்லாததாகிப் பல பழங்கள் பழுத்தாலும் பொரிந்த அடிமரத்தையுடைய விளாமரத்தை வௌவால்கள் அணுக மாட்டா. அதுபோல, மிக அருகிலுள்ளவராயினும் பெருந் தன்மையில்லாதவரது செல்வம் தக்கோரால் பயன்படுஞ் செல்வமாகக் கருதப்படும் முறைமையுடையதன்று.*

**262.** அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ வாயினும்
கள்ளிமேற் கைந்நீட்டார் சூடும்பூ அன்மையால்;
செல்வம் பெரிதுடைய ராயினும் கீழ்களை
நள்ளார் அறிவுடை யார்.

*அள்ளிக்கொள்ளுதல் போல நிறையச் சிறிய அரும்புகளுடையனவாயினும் அவை சூடும் மலர்களல்லாமையால் கள்ளிச் செடிகளின்மேல் யாருங் கைநீட்டமாட்டார்கள்; அதுபோலச் செல்வம் மிக உடையவர்களானாலும் அது நன்மை பயவாமையின் கீழ் மக்களை அறிவுடையார் அணுகமாட்டார்.*

**263.** மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்
வல்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்
செல்வம் பெரிதுடைய ராயினும் சேட்சென்றும்
நல்குவார் கட்டே நசை.

*பலவாக நிறைந்த அலைகளையுடைய கடற்கரையில் தாம் தங்கியிருந்தாலும் வலிதின் நீரூறுதலுடைய உவர்ப்பில்லாத*

கிணற்றிற் சென்று மக்கள் நீர் பருகுவர் ; கீழ்மக்கள், அருகாமையே செல்வம் மிக உடையவராயினும் தக்கோரின் பொருள் விருப்பம் மிகத்தொலைவு சென்றும் உதவுவார்கண்ணதே யாகும்.

**264.** புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே
உணர்வ துடையார் இருப்ப—உணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே
பட்டும் துகிலும் உடுத்து.

கடல் நாற்புறமுஞ் சூழ்ந்து பொருந்தியிருக்கும் உலகத்தில் நல்வினை என்பது தனி நிலைமையுடையது. ஏனென்றால், நல்லன உணர்ந்தொழுகுத லுடையார் வளமின்றியிருக்க, அவ்வுணர்வொழுக்கமில்லாரான கறிமுள்ளியுங் கத்தரியும் போன்ற கீழோர் உயர்ந்த ஆடைகளும் பட்டும் உடுத்துக்கொண்டு வாழ்வுடையாரா யிருக்கின்றனர்.

**265.** நல்லார் நயவ ரிருப்ப நயமிலாக்
கல்லார்க்கொன் றாகிய காரணம்—தொல்லை
வினைப்பய னல்லது வேல்நெடுங் கண்ணாய் !
நினைப்ப வருவதொன் றில்.

உயர்ந்த அறிவு செயல்களுடையாரும் இனியருமான மேலோர் உலகத்தில் வளமின்றியிருக்க, அவ்வினிமையுங் கல்வியறிவு மில்லாக் கீழோர்க்கு ஒரு செல்வ நிலை உண்டான காரணம், வேற்படை போன்ற நீண்ட கண்களையுடைய மாதே! பழைய நல்வினையின் பயனேயல்லது வேறு ஆய்ந்து துணிதற்குரிய காரணம் இல்லை.

**266.** நாருத் தகடேபோல் நன்மலர்மேற் பொற்பாவாய்
நீருய் நிலத்து விளியரோ—வேருய
புன்மக்கள் பக்கம் புகுவாய் நீ பொன்போலும்
நன்மக்கள் பக்கம் துறந்து.

சிறந்த தாமரை மலரின்மேல் வீற்றிருக்கும் பொன்னு லான பாவையையொத்த திருமகளே ! நீ சாம்பராய் வெந்து இவ்வுலகத்தில் அழிந்துபோகக் கடவாய் ; ஏனென்றால், பொன் போல் மதிக்கப்படுதற்குரிய மேன்மக்களின் பக்கம் நீங்கி அவர்க்கு முற்றிலும் இயல்பில் வேறான கீழ்மக்களின் பக்கம் மணத்தலில்லாத புறவிதழைப்போற் சேர்ந்து நீ சூழ்ந்து நிற் பாயாதலின் என்க.

**267.** நயவார்கண் நல்குரவு நாணின்று கொல்லோ
பயவார்கட் செல்வம் பரம்பப் பயின்கொல்
வியவாய்காண் வேற்கண்ணாய் இவ்விரண்டும் ஆங்கே
நயவாது நிற்கும் நிலை.

தாழ்ந்தொழுகி இரவாத நன்மக்கள்பால் உள்ள வறுமைக்கு வெட்கமில்லைபோலும் ! பிறர்க்குப் பயன்படுதலில்லாத புன் மக்களிடம் செல்வம் பரவுதற்கு அது பிசின்போலும் ; வேற் படையை யொத்த கண்களையுடைய பெண்ணே ! வறுமையும் செல்வமுமென்னும் இவ்விரண்டும் அவ்விடங்களில் இனிமைப் படாது நிற்கும் இயல்புக்கு நீ வியப்படைவாய்.

**268.** வல்லவைக ளல்லாதார் காலாறு சென்று
கல்லவைகள் உண்டு கழிப்பர்—வல்லவைகள்
காலாறும் செல்லார் கருணையால் துய்ப்பவே
மேலாறு பாய விருந்து.

நாணிலிகளல்லாத நல்லோர் தம் வறுமையால் ஊர்விட்டு ஊர் கால்வழி நடந்துபோய் அங்கங்குங் கிடைக்கும் இழிந்த கலவையுணவுகள் உண்டு காலங் கழிப்பர் ; ஆனால் நாணிலிக ளான புல்லியோர் கால்வழியும் நடந்து செல்லாராய்த் தம்மேல் நெய் பால் தயிர் என்னும் ஆறுகள் பாய்ந்தொழுகக் கறிகளோடு விருந்துண்டு இன்புறுவர் ; (என்னே, இவ்வுலகியற்கை !)

**269.** பொன்னிறச் செந்நெற் பொதியோடு பீள்வாட
மின்னொளிர் வானம் கடலுள்ளும் கான்றுகுக்கும்
வெண்மை யுடையார் விழுச்செல்வ மெய்தியக்கால்
வண்மையு மன்ன தகைத்து.

*பொன்னின் நிறத்தையுடைய உயர்ந்த செந்நெல் என்னும் பயிர், மேல் மூடிய தாளுடன் உள்ளிருக்குங் கருவும் வாட, மின்னல் மிளிரும் மேகம் கடலுள்ளும் நீர் சொரிந்து பெய்யும்; அறியாமையுடைய புன்மக்கள் சிறந்த செல்வத்தை அடைந்தால் அவர் கொடைத்திறமும் அதுபோன்ற இயல்பினதே யாகும்.*

**270.** ஓதியும் ஓதார் உணர்விலார்; ஓதாதும்
ஓதி யனையார் உணர்வுடையார்—தூய்தாக
நல்கூர்ந்தும் செல்வர் இரவாதார் செல்வரும்
நல்கூர்ந்தார் ஈயா ரெனின்.

*இயற்கையறிவில்லாதவர் நூல்களை ஓதினாராயினும் ஓதாதவரேயாவர்; இயற்கையறிவுடையார் நூல்களை ஓதாதிருந்தும் ஓதினாரோடொப்ப விளங்குவர்; வறுமையுற்றும் மனத்தூய்மையோடிருந்து பிறரை ஒன்று இரவாதவர் செல்வரேயாவர்; செல்வரும் பிறர்க்கு ஒன்று உதவாரென்றால் வறுமையாளரேயாவர்.*

---

## 28-ம் அதி. ஈயாமை

*பிறர்க்கு ஒன்று ஈயாமையின் இயல்புணர்த்துவது.*

**271.** நட்டார்க்கும் நள்ளா தவர்க்கும் உளவரையால்
அட்டது பாத்துண்டல் அட்டுண்டல்—அட்ட
தடைத்திருந் துண்டொழுகும் ஆவதில் மாக்கட்
கடைக்குமாம் ஆண்டைக் கதவு.

*சமைத்துண்ணுதலென்பது, தமக்குள்ள பொருளளவினால் தம்மிடம் உறவுகொண்டோர்க்கும் கொள்ளாத விருந்தினர்க்கும் தாம் சமைத்ததைப் பகுத்துதவிப் பின் தாம் உண்ணுதலாகும். அவ்வாறன்றித் தாம் சமைத்ததைத் தமது வீட்டின் கதவையடைத்துக்கொண்டு தனியாயிருந்து தாமே உண்டு உயிர் வாழ்கின்ற மறுமைப் பயனற்ற கீழ்கட்கு மேலுலகக் கதவு மூடப்படும்.*

**272.** எத்துணை யானும் இயைந்த அளவினால்
சிற்றறஞ் செய்தார் தலைப்படுவர்—மற்றைப்
பெருஞ்செல்வம் எய்தியக்கால் பின்அறிதும் என்பார்
அழிந்தார் பழிகடலத் துள்.

*எவ்வளவு குறைந்ததாயினும் தமக்கிசைந்த அளவினால் சிறிய ஈதலறத்தைச் செய்தார் பிறவிப் பயனில் முற்படுவர்; மற்றுப், பெருஞ்செல்வம் எய்தினால் அறம் என்பதைப் பின்பு கருதுவோம் என்றிருப்போர் பிறர் பழிகின துன்பக்கடலில் வீழ்ந்து அழிந்தவராவர்.*

**273.** துய்த்துக் கழியான் துறவோர்க்கொன் றீகலான்
வைத்துக் கழியு மடவோனை—வைத்த
பொருளும் அவனை நகுமே உலகத்
தருளும் அவனை நகும்.

*தான் துய்த்துச் செலவழிக்காமலும் துறவடைந்த உள்ளத்தார்க்கு ஒன்று கொடாமலும் செல்வத்தை வாளா தொகுத்து வைத்து உயிர்நீங்கியொழியும் அறிவில்லாதானை அவன் அவ்வாறு தொகுத்துவைத்த பொருளும் அவன் அறியாமை கண்டு உலகத்தில் அவனை நகையாடும்; அவன் அப் பிறவியில் தொகுக்காத அருளும் அவனை நகையாடும்.*

274. கொடுத்தலும் துய்த்தலும் தேற்று இடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம் இல்லத்
துருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தால்
ஏதிலான் துய்க்கப் படும்.

*தக்கார்க்கு ஈதலையும் தான் துய்த்தலையுந் தெளியாத இடுக்குப் பிடித்த உள்ளமுடையோன் அடைந்த பெருஞ்செல்வமானது, தன் குடியிற் பிறந்து வளர்ந்த அழகுடைய கன்னிப் பெண்களைப் பருவகாலத்திற் பிறர் அடைந்து நுகர்தல்போல உரிய காலத்தில் அயலவரால் துய்க்கப்படும்.*

275. எறிநீர்ப் பெருங்கடல் எய்தியிருந்தும்
அறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர் ;
மறுமை யறியாதா ராக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

*அலைவீசுகின்ற நீர்ப்பெருக்கினையுடைய பெரிய கடலை அடுத்திருந்தும் அதன் நீர் பயன்படாமையால் அடிக்கடி நீர் வற்றுகின்ற சிறிய கிணற்றின் ஊற்றையே மக்கள் தேடிக் கண்டு உண்பர். ஆதலால், மறுமைப்பயனறியாதொழுகும் புல்லியோர் செல்வத்தினும், குணநிறைந்த பெரியாரது மிக்க வறுமையே மேலானதாகும்.*

276. எனதென தென்றிருக்கும் ஏழை பொருளை
எனதென தென்றிருப்பேன் யானும் — தனதாயின்
தானும் அதனை வழங்கான் பயன்துவ்வான்
யானும் அதனை அது.

*என்னுடையது என்னுடையது என்று எண்ணிக் கொண்டிருக்கும் அறிவிலானது செல்வத்தை நானும் என்னுடையது என்று எண்ணிக்கொண்டிருப்பேன், ஏனென்றால், அச்செல்வம் அவனுடையதாயின், அதற்கறிகுறியாக அவனும்*

அதனைப் பிறர்க் குதவாமலும் அதன் பயன் துய்க்காமலும் இருக் கின்றனன்; யானும் அச்செல்வத்தை அது செய்யாமலிருக்கின் றேன். (ஆகவே, இருவர்க்கும் அதனிடத்தில் வேறுபாடு யாதும் இல்லையாகலின் என்க.)

**277.** வழங்காத செல்வரின் நல்கூர்ந்தார் உய்ந்தார்
இழந்தார் எனப்படுதல் உய்ந்தார்—உழந்ததனைக்
காப்புய்ந்தார் கல்லுதலும் உய்ந்தார்தம் கைந்நோவ
யாப்புய்ந்தார் உய்ந்த பல.

பிறர்க்கொன்று உதவாத செல்வர்களைவிட அச்செல்வ மில்லாத வறுமையாளர்களே பிழைத்துக்கொண்டவர்கள்; ஏனென்றால், பொருளை வீணே தொகுத்துவைத்துப் பின் ஒருங்கே இழந்துபோனாரென்று உலகவாற் பழிக்கப்படுதலி னின்று அவர்கள் பிழைத்துக்கொண்டனர்; வருந்தித் தேடிய பொருளைப் பின் காத்தலினின்றுந் தப்பினர்; அதனைப் புதைத்துவைக்கும்பொருட்டுக் குழிதோண்டுதலுந் தப்பினர்; தம்முடைய கைகள் நோவும்படி அதனைக் கட்டிச் சேமித்தலுந் தப்பினர்; இன்னும் இவ்வாறு அவர்கள் தப்பிக்கொண்ட வகைகள் பலவாகுமாதலின் என்க.

**278.** தனதாகத் தான்கொண்டான் தாயத் தவரும்
தமதாய போழ்தே கொடாஅர்—தனதாக
முன்னே கொடுப்பின் அவர்கடியார் தான்கடியான்
பின்னை அவர்கொடுக்கும் போழ்து.

பொருள் தன்னுடையதாக, அந்நிலையிலும் தான் பிறர்க்கு வழங்கான்; அவனுக்குப் பின் அவன் தாயத்தவரும் அப் பொருள் தம்முடையதான காலத்திலும் வழங்கார்; அந்தப் பொருள் முன்னே தன்னுடையதாயிருக்க, அந்நிலையில் அவன் பிறருக்கு ஒன்று வழங்கின் அத் தாயத்தவர் அதனை நீக்கார்;

தன்னுரிமைக்குப்பின் அத் தாயத்தவர் பிறர்க்கு யாதேனும் வழங்குங்காலத்தில் தானும் அதனை நீக்கான்; (அவ்வாறிருக்கும் போது உரிமையுள்ளபோதே பிறர்க்குதவியாய் வாழ்ந்து பயன் பெறாமைக்குத்தான் காரணம் யாதோ ?)

**279.** இரவலர் கன்றாக ஈவார் ஆ வாக
விரகின் சுரப்பதாம் வண்மை—விரகின்றி
வல்லவர் ஊன்ற வடியாபோல் வாய்வைத்துக்
கொல்லச் சுரப்பதாம் கீழ்.

இரப்போர் கன்றுகளை ஒப்பக், கொடுப்போர் ஆன்களை ஒப்பப், பூரிப்புடன் குறையாதளிப்பதே 'கொடை' எனப் படும் ; அவ்வாறு உயிர்க்கிளர்ச்சியின்றிக், கறக்கவல்லவர் தம் விரல்களை அழுத்தி நோவுண்டாக்க அதுபொறாது பாலை ஒழு கச் செய்யும் ஆன்களைப்போற் சூழ்ச்சியுடையார் பல வாயில்கள் வைத்து வருத்தக் கீழ்மக்கள் அதனால் தம் பொருளைச் சொட்டு வோராவர்.

**280.** ஈட்டலும் துன்பம்மற் றீட்டிய ஒண்பொருளைக்
காத்தலும் ஆங்கே கடுந்துன்பம்—காத்தல்
குறைபடின் துன்பம் கெடின்துன்பம் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்.

பொருள் திரட்டுதலுந் துன்பம் ; திரட்டிய சிறந்த பொரு ளைப் பாதுகாத்தலும் அவ்வாறே மிக்க துன்பமாகும் ; அங்ஙனம் பாதுகாத்த முறையில் பொருள் தன் அளவிற் குறைந்துபோகு மாயின், துன்பமே ; இயற்கை நிகழ்ச்சிகளால் முற்றும் அழிந்து போகுமானால் பின்னுந் துன்பம் ; ஆதலால், பொருள் துன்பங்க ளெல்லாவற்றிற்குந் தங்குமிடமென்க.

## 29-ம் அதி. இன்மை

*பொருளில்லாமையின் இழிவை யுணர்த்துவது.*

**281.** அத்திட்ட கூறை அரைச்சுற்றி வாழினும்
பத்தெட் டுடைமை பலருள்ளும் பாடெய்தும்;
ஒத்த குடிப்பிறந்தக் கண்ணுமொன் றில்லாதார்
செத்த பிணத்திற் கடை.

*துவர் ஊட்டிய ஆடையை அரையில் உடுத்துக்கொண்டு ஞான வாழ்வில் வாழ்ந்தாலும் பத்தானும் எட்டானும் பொருளுடைமை பலரிடத்திலும் பெருமையடையும்; ஏற்ற உயர் குடிக்கண் பிறந்தாலும் ஒரு பொருள் இல்லாதார் செத்த பிணத்தினுங் கடைப்பட்டவராவர்.*

**282.** நீரினும் நுண்ணிது நெய்என்பர்; நெய்யினும்
யாரும் அறிவர் புகைநுட்பம்;—தேரின்
நிரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து.

*நெய் நீரைப்பார்க்கினும் நுட்பமானதென்று அறிந்தோர் கூறுவர்; இனி, நெய்யைப் பார்க்கினும் புகை நுட்பமென்பதை அனைவரும் அறிவர்; ஆராய்ந்தால், வறுமையாகிய துன்பமுடையோன் அப் புகையும் புகுதற்கு அரிய மிக நுண்ணிய புழையிலும் நுழைந்து புகுவான்.*

**283.** கல்லோங் குயர்வரைமேற் காந்தள் மலராக்கால்
செல்லாவாம் செம்பொறி வண்டினம்—கொல்லைக்
கலாஅல் கிளிகடியும் கானக நாட
இலாஅஅர்க் கில்லை தமர்.

*கற்கள் வளர்ந்துள்ள உயர்ந்த மலையின்மேல் காந்தள் முதலிய மலர்கள் மலராவிட்டால், சிவந்த புள்ளிகளையுடைய*

வண்டினங்கள் அங்கே செல்லமாட்டா; ஆதலால், தினை முதலிய புனங்களில் கிளி முதலிய பறவைகளைச் சிறுசிறு கற்களால் ஓட்டுகின்ற காட்டையுடைய நாடனே! பொருளில்லாத வறியோரிடத்தில் உறவினர் வருதலில்லை.

**284.** உண்டாய போழ்தின் உடைந்துழிக் காகம்போல்
தொண்டா யிரவர் தொகுபவே—வண்டாய்த்
திரிதருங் காலத்துத் தீதிலிரோ என்பார்
ஒருவரும் இவ்வுலகத் தில்.

ஒருவன் இறந்துவிட்டபோது அவனுடம்பைக் காகங்கள் சூழ்ந்து மொய்த்துக்கொள்வதுபோல் ஒருவற்குச் செல்வமுண்டான காலத்தில் அவனுக்கு ஒன்பதினாயிரம் பேர் ஏவல் புரிவோராய் வந்து கூடுவர்; ஆனால், வறுமையினால் உணவுக்காக ஒருவர், வண்டுபோற் பலவிடங்களிலும் அலையுங் காலத்தில் அவரைத் தீங்கில்லாம லிருக்கிறீர்களா என்று நலம் உசாவுவார் இவ்வுலகத்தில் ஒருவரும் இல்லை.

**285.** பிறந்த குலமாயும் பேராண்மை மாயும்
சிறந்ததங் கல்வியும் மாயும்—கறங்கருவி
கல்மேற் கழூஉம் கணமலை நன்னாட!
இன்மை தழுவப்பட் டார்க்கு.

பாய்ந்து ஒலிக்கின்ற அருவிநீர் கற்களின் மேற்புறத்தைக் கழுவுகின்ற கூட்டமான மலைகளையுடைய சிறந்த நாடனே! உலகத்தில் வறுமை பொருந்தியவர்க்கு அவர் பிறந்த குலத்தின் பெருமை கெடும்; அவருடைய போாற்றல் கெடும்; எல்லாவற்றிற்கும் மேலான அவர்தம் கல்விநிலையுங் கெடும்.

**286.** உள்கூர் பசியால் உழைநசைஇச் சென்றார்கட்
குள்ளூ ரிருந்துமொன் றாற்றாதான்—உள்ளூ

இருந்துயிர் கொன்னே கழியாது தான்போய்
விருந்தின னாதலே நன்று.

உடம்பில் மிகுகின்ற பசித்துன்பத்தால் தான் இருக்குமிடத்தை நாடி வந்தவர்கட்குத் தான் உள்ளூரிலிருந்தும் ஒன்று உதவ இயலாதவன், அவ்வாறு உள்ளூரிலிருந்து தனது உயிர் வாழ்க்கையை வீணே கழிக்காமல் தான் வெளியூர்கட்குப் போய்ப் பிறர் இல்லத்தில் விருந்தினனாயிருந்து உண்ணுதலே நலமாகும்.

287. நீர்மையே யன்றி நிரம்ப எழுந்ததங்
கூர்மையு மெல்லாம் ஒருங்கிழப்பர்—கூர்மையின்
முல்லை யலைக்கும் எயிற்றாய்! நிரப்பென்னும்
அல்லல் அடையப்பட் டார்.

தம் கூர்மையால் முல்லையரும்புகளை வெல்லும் பற்களையுடைய பெண்ணே! வறுமை யென்னும் இன்னலால் தாக்குண்டவர் தமது இயற்கையறிவையேயன்றி நிரம்ப வளர்ந்த தமது கூரிய செயற்கையறிவையுமென எல்லாம் ஒருங்கே இழந்துவிடுவர்.

288. இட்டாற்றுப் பட்டொன் றிரந்தவர்க் காற்றாது
முட்டாற்றுப் பட்டு முயன்றுள்ளூர் வாழ்தலின்
நெட்டாற்றுச் சென்று நிரைமனையிற் கைந்நீட்டுங்
கெட்டாற்று வாழ்க்கையே நன்று.

சிறுமையாகிய வறுமைவழியில் அகப்பட்டுத் தம்மிடம் ஒன்று இரந்தவர்க்கு உதவமாட்டாமல் முட்டுப்பாடான முறைமையில் இருந்துகொண்டு முயற்சியோடு உள்ளூரில் உயிர்வாழ்தலை விடத், தொலைவழி நடந்துபோய் அங்கங்கும் வரிசையாக உள்ள வீடுகளிற் கை நீட்டி இரந்துண்ணுங் கெடுவழி வாழ்க்கையே நல்லது.

289. கடகம் செறிந்ததங் கைகளால் வாங்கி
அடகு பறித்துக்கொண் டட்டுக்—குடைகலனு
உப்பிலி வெந்நைதின் றுள்ளற்று வாழ்பவே
துப்புரவு சென்றுலந்தக் கால்.

நுகரப்படும் பொருள்கள் நீங்கி வறுமையுற்றவிடத்து, முன்புசெல்வராயிருந்தபோது கடகம் செறிந்திருந்த தம் கைகளினுல் தூறுகளை வளைத்து அதிலுள்ள கீரைகளைப் பறித்து, அதனையே முதன்மையாகக் கருதி உப்புமில்லாமல் அவித்துப், பனையோலையின் முடக்கே உண்கலனுக அவ்வுப்பில்லாத தான வெவியலை மென்று வாயாறி அமைதியற்று உயிர் வாழ்வார்கள்.

290. ஆர்த்த பொறிய அணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவாம்—நீர்த்தருவி
தாழா உயர்சிறப்பின் தண்குன்ற நன்னுட!
வாழாதார்க் கில்லை தமர்.

நிறைந்த புள்ளிகளையுடைய அழகு மிக்க வண்டுக்கூட்டங்கள் பூத்தல் மாறிய பூங்கொம்புகளிடத்திற் செல்லமாட்டா; இனிய நீரருவி அறுது ஒழுகுகின்ற மிக்க சிறப்பினையுடைய குளிர்ச்சியான மலைகளையுடைய உயர்ந்த நாடனே! ஆதலாற் பொருள் மலர்ச்சியில்லாத வறியோர்க்கு உறவாவோர் இல்லை.

---

## 30-ம் அதி. மானம்

என்றது, தாழ்வு தாளாத உள்ள வியல்பு.

291. திருமதுகை யாகத் திறனிலார் செய்யும்
பெருமிதங் கண்டக் கடைத்தும்—எரிமண்டிக்
கானந் தலைப்பட்ட தீப்போற் கனலுமே
மான முடையார் மனம்.

செல்வம் வலிமையாகக் கயவர் செய்யும் வரம்பு கடந்த செயல்களைப் பார்த்தவிடத்தும், மானமுடைய நன்மக்களின் மனம் எரிதல் மிகுந்து காட்டில் உண்டான காட்டுத்தீப்போல் அனல் கொள்ளும்.

**292.** என்பாய் உகினும் இயல்பிலார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தம்முடையார்—தம்பா
டுரையாமை முன்னுணரும் ஒண்மை யுடையார்க்
குரையாரோ தாமுற்ற நோய்.

தன்மானமுடையோர் தாம் எலும்பாகித் தசை சிதையி னும், குணமில்லாதவர் பின் சென்று தம்முடைய இடுக்கண் களைச் சொல்லிக்கொள்ளமாட்டார்; தம்முடைய துன்பங் களைத் தாம் எடுத்துரையாமைக்கு முன்பே அவற்றை உணர்ந் துதவும் அறிவு விளக்கமுடைய குணசாலிகட்கும் தாம் அடைந்த இன்னல்களை அவர் உரையார் போலும்! (மானமுடையோர் இயற்கை அத்தகையது!)

**293.** யாமாயின் எம் இல்லம் காட்டுதும் தாமாயின்
காணவே கற்பழியும் என்பார்போல்—நாணிப்
புறங்கடை வைத்தீவர் சோறும் அதனுல்
மறந்திடுக செல்வர் தொடர்பு.

வறியேமாகிய யாமாயின் செல்வர்கட்கு உண்ணவும் இளைப்பாறவும் எம் இல்லத்தை இடமாக உதவுகின்றோம்: ஆனால் அச் செல்வர்களாயின், யாம் காண்டல் அளவிலும் தம் மனைவியரின் கற்புக் கெடும் என்று கருதுவார்போல் மனங் கூசிச், சோறுதானும் வாயிலின் வெளியில் வைத்துப் போடு வர்; ஆதலாற், பிறரைப் பொருள் செய்யாத செல்வர்களின் தொடர்பை மக்கள் மறந்துவிடுவார்களாக!

294. இம்மையும் நன்றும் இயல்நெறியுங் கைவிடா
தும்மையும் நல்ல பயத்தலாற்—செம்மையின்
நானம் கமழும் கதுப்பினாய் நன்றேகாண்
மான முடையார் மதிப்பு.

*நடுநிலையாக நோக்குமிடத்து, கத்தூரி மணக்குங் கூந்தலுடைய பெண்ணே! மானமுடையார் நடக்கை புகழும் இன்பமுந் தருதலால் இம்மையிலும் நன்றாகும்; வீடுபேற்றிற்குரிய உண்மை நெறியும் வழுவுதலின்றித், துறக்கவுலகிலும் இன்பமாவன உண்டாக்குதலால், மறுமைக்கும் நல்லதேயாம்.*

295. பாவமும் ஏனைப் பழியும் படவருவ
சாயினும் சான்றவர் செய்கலார்—சாதல்
ஒருநாள் ஒருபொழுதைத் துன்பம் அவைபோல்
அருநவை யாற்றுதல் இன்று.

*மறுமைக்குத் தீவினையும் இம்மைக்கு ஏனைப் பழியும் உண்டாகும்படி நேர்வன தாம் இறப்பதாயினுஞ் சான்றோர் செய்யமாட்டார்; ஏனென்றால், இறத்தல் என்பது ஒருநாளில் ஒரு நேரத்துத் துன்பம்; ஆனால் அப் பாவமும் பழியும்போல் என்றுந் துன்பத்துக்கேதுவான பெருங் குற்றம் பயப்பிப்பது வேறொன்றும் இல்லை.*

296. மல்லன்மா ஞாலத்து வாழ்பவ ருள்ளெல்லாஞ்
செல்வ ரெனினுங் கொடாதவர்—நல்கூர்ந்தார்;
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார்.

*வளம் மிக்க இப் பெரிய உலகில் உயிர் வாழ்பவரெல்லாருள்ளும் சிலர் பொருளுடையவராயினும் பிறர்க்கொன்று உதவாத இயல்புடையார் வறியரேயாவர்; சிலர் வறுமையுற்றவிடத்*

தும் பொருளுடையாரிடம் சென்று ஒன்று இரவாதவர் பெரு முத்தரையரையொத்த பெருஞ் செல்வரேயாவர்.

297. கடையெலாம் காய்பசி அஞ்சும்; மற் றேனை
இடையெலாம் இன்னாமை அஞ்சும்—புடைபரந்த
விற்புருவ வேல்நெடுங் கண்ணாய்! தலையெல்லாம்
சொற்பழி அஞ்சி விடும்.

பக்கங்களில் தசைபருத்த வில்போலும் புருவங்களை யுடைய வேல்போலும் நீண்ட கண்களமைந்த பெண்ணே! மக்களிற் கடையானவர்க ளெல்லாரும் தம்மை வருத்தும் வயிற்றுப்பசிக்கஞ்சி மானங் கைவிடுவர்; இடைப்பட்டவர்க ளெல்லாரும் தமது வாழ்க்கையில் வரும் உயிரிறுதி முதலிய துன்பங்களுக் கஞ்சி மானத்தை விட்டொழுகுவர்; ஆனால், மற்றத் தலையானவர்களெல்லாரும், பழிச்சொற்களுக்கஞ்சி மானம் விடாது நடந்துகொள்வார்கள்.

298. நல்லர் பெரிதளியர் நல்கூர்ந்தார் என்றெள்ளிச்
செல்வர் சிறுநோக்கு நோக்குங்கால்—கொல்லன்
உலையூதுந் தீயேபோல் உள்கனலுங் கொல்லோ
தலையாய சான்றோர் மனம்.

இவர் நல்லவர், மிகவுங் கனிவுடையவர், ஆயினும் வறி யரா யிருக்கின்றார் என்று நல்லியல்புகளை இகழ்ந்து கூறிச் செல்வர்கள் சிறுமைப் பார்வை பார்க்குங்கால், தலைமக்களான சான்றோர்களின் உள்ளம் கொல்லனது உலைக்களத்தில் ஊதி யெழூஉந் தீச்சுடர்போல் உள்ளே அழல்கொள்ளும்.

299. நச்சியார்க் கீயாமை நாண்அன்று; நாள்நாளும்
அச்சத்தால் நாணுதல் நாண்அன்றாம்—எச்சத்தின்
மெல்லிய ராகித்தம் மேலாயார் செய்தது
சொல்லா திருப்பது நாண்.

தம்மை விரும்பிவந்தடைவார்க்கு ஒன்று உதவமாட்டாமை நாண் அன்று; நாடோறும் தீயவை அஞ்சும் அச்சத்தால் அவை செய்ய நாணுதலும் ஒரு நாண் அன்று; தமது மரபில் தாம் செல்வம் முதலியவற்றில் எளியராகித் தம் முன்னோர் ஆற்றிய செல்வச் செயல்களைத் தமக்கொரு பெருமையாகச் சொல்லிக்கொள்ளாதிருத்தலே மானிகட்கு, மேலான நாணமாவதாகும். (தமது முயற்சியால் தாம் பெருமையடைதல் வேண்டும் என்க.)

**300.** **கடமா தொலைச்சிய கானுறை வேங்கை**
**இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்—இடமுடைய**
**வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்**
**மானம் மழுங்க வரின்.**

மதம் பொருந்திய யானையை அதன் வலிதொலைத்து வீழ்த்திய காட்டிலுறையும் புலி, தான் பசி மிகுதியால் உயிர் துறக்குந் தறுவாயிலிருப்பினும், தனக்கு இடப்பக்கம் வீழ்ந்த அவ்வியானையைத் தான் உண்ணாமல் உயிர்விடும்; ஆதலால், செல்வப் பெருமையுடைய துறக்கவுலகம் தானே வந்தடையினும் அது தமது மானங் கெட வருவதாயின், அதனைப் பெரியோர் விரும்பார்.

---

## 31-ம் அதி. இரவச்சம்

மானக்குறைவுக்கேதுவான இரத்தலுக்கு அஞ்சியொழுகுதல்.

**301.** **நம்மாலே யாவர்இந் நல்கூர்ந்தார் என்னான்றுந்**
**தம்மால்ஆம் ஆக்கம் இலர்என்று—தம்மை**
**மருண்ட மனத்தார்பின் செல்பவோ தாமுந்**
**தெருண்ட அறிவி னவர்.**

*நமது உதவியினாலேயே இவ் வறுமையாளர் வாழ்வு பெறு தற்குரியர், எந்த நாளிலுந் தமது திறமையினால் உண்டாகப் பெறும் வாழ்வு இல்லாதவர் என்று செருக்கித் தம்மை உயர்ந் தோராக மயங்கிப் பெருமிதங்கொள்ளும் மனப்பான்மையுடை யார் பின்னே, தெளிந்த மெய்யறிவினையுடைய மேலோரும் இரந்து செல்வரோ? செல்லார்.*

**302.** இழித்தக்க செய்தொருவன் ஆர உணலின்
பழித்தக்க செய்யான் பசித்தல் தவறோ
விழித்திமைக்கு மாத்திரை யன்றோ ஒருவன்
அழித்துப் பிறக்கும் பிறப்பு.

*இழிக்கத்தக்க மானக்குறைவான செயல்களைச் செய்து ஒருவன் வயிறார உண்ணுதலைவிட உலகம் பழிக்கத்தக்க அச் செயல்களைச் செய்யானாய் வறுமையாற் பசியோடிருத்தல் தவ றாகுமோ? ஏனென்றால், அழிக்கப்பட்டு ஒருவன் பிறக்கும் பிறப்பு இமைத்துப் பின் கண்திறக்கும் நொடிப்பொழுதா மன்றோ?*

**303.** இல்லாமை கந்தா இரவு துணிந்தொருவர்
செல்லாரு மல்லர் சிறுநெறி—புல்லா
அகம்புகுமின் உண்ணுமின் என்பவர்மாட் டல்லால்
முகம்புகுத லாற்றுமோ மேல்.

*வறுமை காரணமாக இரத்தலுக்குத் துணிந்து அச் சிறு வழியில் ஒருவர் செல்லுங் கட்டாய முடையராதலுங் கூடும். ஆனால், தாம் செல்லுமுன்பே தம்மை எதிர்வந்து தழுவி, 'வீட்டுக்கு வாருங்கள், உண்ணுங்கள்' என்று வரவேற் பாரிடத்தன்றி மேன்மக்கள் ஏனையோரிடம் தலைகாட்டுதல் செய்வரோ? (தலைகாட்டாரென்க.)*

**304.** திருத்தன்னை நீப்பினும் தெய்வம் செறினும்
உருத்த மனத்தோ டுயர்வுள்ளி னல்லால்
அருத்தம் செறிக்கும் அறிவிலார் பின்சென்
றெருத்திறைஞ்சி நில்லாதாம் மேல்.

*திருமகள் தன்னைத் துறந்தாலும் ஊழ் உருத்தெழுந்தாலும் தாம் மேலும் ஊக்கமுற்ற உள்ளத்தோடு உயர்ந்த செய்கைகளைக் கருதியொழுகுதலல்லால், செல்வத்தை இறுக்கிப் பிடிக்கும் மெய்யறிவில்லாக் கீழ்மக்கள்பின்னே போய்மேலோர் தலைவளைந்து இரந்து நில்லார்.*

**305.** கரவாத திண்ணன்பின் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை—இரவினை
உள்ளுங்கால் உள்ளம் உருகுமால் என்கொலோ
கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு.

*தமக்கொன்று ஒளியாத உறுதியான மெய்யன்பினையுடைய கண்போன்ற அன்பர்களிடத்தும் யாதும் இரத்தல் செய்யாது வாழ்வது வாழ்க்கையாகும்; இரத்தலாகிய செயலை நினைக்கும்போதே உள்ளம் கரைந்து அழிகின்றது; அவ்வாறானால், பிறரிடம் ஒன்று ஏற்குங்காலத்தில் அங்ஙனம் ஏற்பவாது கருத்துத்தான் எவ்வாறு நையாநிற்கும்!*

**306.** இன்று இயைக இனிய ஒழிகென்று
தன்னையே தான்இரப்பத் தீர்வதற்கு—என்னைகொல்
காதல் கவற்றும் மனத்தினாற் கண்பாழ்பட்டு
ஏதி லவரை இரவு.

*தூய மெய்யுணர்வு உண்டாதற்கு உலகத் துன்பங்களே ஏதுவாயிருத்தலின் அத்துன்பங்கள் வந்து பொருந்துக, இன்பந் தருவன நீங்குக என்று தன் உள்ளத்தையே தான் வேண்டித் தெளிவு செய்துகொள்ள, அதனால் தம்மைவிட்டு நீங்கிவிடுதற்*

குரிய பொருள்முடைக்காக, அதற்கு மாருய், அப் பொருளின் மேற் கொள்ளும் அவா வருத்துகின்ற மனத்தினுல் அறிவு பாழாகி அயலாரை ஒன்று இரத்தல் என்?

**307.** என்றும் புதியார் பிறப்பினும் இவ்வுலகத்
தென்றும் அவனே பிறக்கலான்—குன்றின்
பரப்பெலாம் பொன்ஞெழுகும் பாய்அருவி நாட!
இரப்பாரை எள்ளா மகன்.

மலையின் பரந்த இடமெல்லாம் பொன் பாவுதற்கு ஏதுவான பாயும் அருவிகளையுடைய மலைநாடனே! இந்த உலகத்தில் எஞ்ஞான்றும் புதிய மக்கள் பிறந்தாலும், என்றும் அவனொருவனே உண்மையிற் பிறத்தலுடையான்; அவன் யாரென்னில், இரந்துண்ணும் எளியோரை இகழாதொழுகும் மகனெனத் தக்கான் என்க; (ஏனையோர் பிறந்தும் பிறவாதவராவரென்க.)

**308.** புறத்துத்தன் இன்மை நலிய அகத்துத்தன்
நன்ஞானம் நீக்கி நிறீஇ யொருவனை
ஈயாய் எனக்கென் றிரப்பானேல் அந்நிலையே
மாயானே மாற்றி விடின்.

புறத்தே உடம்பைத் தனது வறுமை வருத்த அதனுல் உள்ளத்தில் தனது நல்லறிவை ஒதுக்கி, மனந்துணிந்து பொருளாளனொருவனை எனக்கு யாதானும் இடுமென்று மானமுடையோன் இரந்து நிற்பனுயின், அவன் ஒருகால் இல்லையென்று மறுத்துவிட்டால் அங்கொடியே அம் மானி உயிரழிவனன்றோ? (ஆதலால், இரத்தல் எந்நிலையிலும் அஞ்சுதற்குரியதென்பது.)

**309.** ஒருவ ரொருவரைச் சார்ந்தொழுக லாற்றி
வழிபடுதல் வல்லுத லல்லால்—பரிசழிந்து
செய்யிரோ என்னினும் என்னுஞ்சொற் கின்னுதே
பையத்தான் செல்லு நெறி.

வறுமையாள ரொருவர் செல்வரொருவரைச் சார்ந்து இருந்துகொள்ளுதல் செய்து அவரைப் பின்பற்றி யொழுகுதல் கூடுவதன்றித், தமதியல்பாகிய மானம் அழிந்து ஏதானும் ஈயீரோ என்றிரக்கும் இரப்புரையினும், அடக்கமாகத் தான் ஒழுகிக் கொள்ளும் அம் முறைமை தீதோ? (தொழுதுண்டு வாழ்தலினும் இரந்துண்டு வாழ்தலை அஞ்சுக என்றபடி.)

**310.** பழமைகந் தாகப் பசைந்த வழியே
கிழமைதான் யாதானுஞ் செய்க—கிழமை
பொறாஅர் அவரென்னின் பொத்தித்தம் நெஞ்சத்து
அறாஅச் சுடுவதோர் தீ.

பழமையாகிய நட்பே பற்றுக்கோடாக நண்பர்பால் ஒன்று பெறுதற்கு உள்ளம் விரும்பியவிடத்து உரிமையால் அவ்வாறு ஏதேனுஞ் செய்துகொள்க; ஆனால், அங்ஙனஞ் செய்யும் உரிமைச் செயலை அந் நண்பர் பொறாரென்றால், அம் மானக் குறைவால் உண்டான வேதனை யென்னும் ஒரு தீ தமது நெஞ்சத்தில் மூட்டப்பட்டு, என்றும் அறாமற் சுடுவதாகும். (ஆதலால், உரிமை கருதியும் இரத்தல் அஞ்சப்படுமென்பது.)

---

## 32-ம் அதி. அவையறிதல்

அவையிலுள்ளாரின் தகுதி தெரிந்து ஒழுகுதல்.

**311.** மெய்ஞ்ஞானக் கோட்டி உறழ்வழி விட்டாங்கோர்
அஞ்ஞானந் தந்திட் டதுவாங் கறத்துழாய்க்
கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காரறி வாளர்முன்
சொன்ஞானம் சோர விடல்.

உண்மையறிவினையுடைய கூட்டத்திற் கலந்து அவர் வழி நின்றொழுகுதலை விடுத்து, அதற்கு மேலும் அம் மெய்ஞ்ஞான

மூடையாரிடையே தமது ஓர் அறியாமைக் கருத்தையும் உரைத்து அதனையே மிகவும் பன்னிப் பன்னிப் பேசி இவ்வாறு தமது சிற்றறிவே பற்றி யொழுகுகின்ற மயக்கவறிவினரெதிரில் புகழ்தற்குரிய தமது ஞானப் பெருமையினைக் காட்டிக்கொள்ளாமல் தளர்த்திக்கொள்க.

**312.** நாப்பாடம் சொல்லி நயமுணர்வார் போற்செறிக்கும்
தீப்புலவற் சேரார் செறிவுடையார்—தீப்புலவன்
கோட்டியுட் குன்றக் குடிப்பழிக்கும் அல்லாக்கால்
தோட்புடைக் கொள்ளா எழும்.

தாம் முன்பு நெட்டுருச் செய்த பாடங்களை அப்படியே சொல்லிக் காட்டி ஏதோ பொருள் நயம் உணர்வார்போல் நடித்துத் தம் அறியாமைக் கருத்துக்களை அவற்றிற் செறித்துக் கூறும் போலிப் புலவனை அவ் வாரவாரமில்லா மெய்ப்புலவோர் அணுகார்; ஏனென்றால், மெய்ப்புலவோராகிய தமது வருகையால் அப் போலிப் புலவன் அவையிற் பெருமை கெடுதலால், அவன் தமது குடிப்பிறப்பைப் பற்றிப் பழித்துப் பேசுவான். அல்லாவிட்டால் தன் தோளைத் தட்டிக்கொண்டு வலுச் சண்டைக்கு எழுவான் என்க.

**313.** சொற்றுற்றுக் கொண்டு சுனைத்தெழுதல் காமுறுவர்
கற்றுற்றல் வன்மையுந் தாந்தேறார்—கற்ற
செலவுரைக்கும் ஆறறியார் தோற்ப தறியார்
பலவுரைக்கும் மாந்தர் பலர்.

சொல்லாகிய முட்கோல் கொண்டு நாத் தினவெடுத்துப் பேச முற்படுதலை மிக விரும்பும் இயல்பினர், நூல் நுட்பங்களைக் கற்றறிந்து ஒழுகும் வல்லமையுந் தாம் தெளியார்; தாம் கற்ற சிலவற்றைக் கேட்பவர் உள்ளத்திற் பதியும்படி எடுத்துரைக்கும் முறையையும் அறியார்; தம் சொற்கள் பயன்படுத

*லின்றி வீணாகி யொழிதலையுங் கருதார்; ஒன்றைப் புலப்படுத் தும் பொருட்டு இவ்வாறு பல சொற்கள் சொல்லி அவம்படும் மாந்தர் உலகிற் பலராவர்.*

**314.** கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தால்
பெற்றதாம் பேதையோர் சூத்திரம்—மற்றதனை
நல்லா ரிடைப்புக்கு நாணாது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும்.

*தாம் ஆழ்ந்து பயின்றதுமின்றித் தக்க கேள்வியுமின்றிப் பள்ளியாசிரியர் நெட்டுருச் செய்வித்த மனப்பாடத்தால் தெரிந்துகொண்டதாகிய ஒரு நூற்பாவினை நற்புலவர் அவையிற் சென்று நாணுதலின்றி விரித்துரைத்து அறிவிலான் தனது சிற்றறிவினைக் காட்டிக்கொள்வான்.*

**315.** வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்ளார்
கன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோ—டொன்றி
உரைவித் தகமெழுவார் காண்பவே கையுட்
சுரைவித்துப் போலுந்தம் பல்.

*போலி வெற்றியின்பொருட்டுப் பகுத்தறிவின்றி விலங் கோடொத்தவராய் உண்மையை அறியாமற் காழ்த்து மிகக் கொதித்து எரிந்து விழுவாரோடு நெருங்கித் தமது உரை வல் லமையைப் புலப்படுத்த முற்படும் நற்புலவர், சுரையின் விதை யை ஒத்த தம் பற்களைக் கன்னத்தில் அறைந்து அவர் உதிர்த் தலால் உடனே தம் கையிற் காண்பவராவர்.*

**316.** பாடமே ஓதிப் பயன்தெரிதல் தேற்றாத
மூடர் முனிதக்க சொல்லுங்கால்—கேடருஞ்சீர்ச்
சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே மற்றவரை
ஈன்றாட் கிறப்பப் பரிந்து.

செய்யுட்களை நெட்டுருச் செய்து சொல்லிக்கொண்டு அதன் பொருள் நுட்பங் கண்டு இன்புறலறியாத மூடர்கள் வெறுக்கத் தக்க உரைகளைச் சொல்லும்போது என்றும் அழித லில்லாத சிறப்பினையுடைய மெய்ப்புலமை சான்ற பெரியோர் அம்மூடர்களைப் பெற்றெடுத்த தாய்க்காக அவள் வருந்துவளே என்று மிக இரங்கி யாதுங் கூறாது பொறுமையுடையரா யிருப்பர்.

**317.** பெறுவது கொள்பவர் தோள்போல் நெறிப்பட்டுக்
கற்பவர்க் கெல்லாம் எளியநூல்—மற்றம்
முறிபுரை மேனிய ருள்ளம்போன் றியார்க்கும்
அறிதற் கரிய பொருள்.

கொடுப்பவரைக் கொள்ளாமல் தாம் பெறுகின்ற விலைப் பொருளையே கருத்தாகக் கொள்ளும் பொதுமகளிரின் தோள்கள் பலர்க்கும் எளியவாதல்போல ஒரு தொடர்புற்றுக் கற்பவரெல்லார்க்கும் நூல்களின் பொதுக்கருத்துக்கள் எளியனவாய் விளங்கும்; ஆனால், மாந்தளிர் போன்ற மேனியையுடைய அவ் விலைமகளிரின் மனம் யார்க்கும் அறிதல் அருமையாதல்போல, நூலின் உட்பொருள்கள் எல்லார்க்கும் அறிதற்கரியனவாகும்.

**318.** புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தக மெல்லாம் நிறைப்பினும்—மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருள்தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

புத்தகங்களை மிகுதியாகத் தொகுத்துவைத்தும் பலர் அவற்றின் பொருள் தெரியாதவராவர்; பிறர் முயன்று நூல்களை வீடு முழுமையும் நிறைத்துவைத்தாலும் அவற்றை அன்புடன் பாதுகாக்கும் அறிஞர்களும் வேறு; அவற்றின் கருத்தறிந்து தம்மையும் பிறரையும் தெளிவித்துக்கொள்ளும் பேறிஞர்களும் அவரின் வேறவர்.

319. பொழிப்பகல நுட்பநூ லெச்சமிந் நான்கிற்
கொழித்தகலங் காட்டாதார் சொற்கள்—பழிப்பில்
நிரையாமா சேக்கும் நெடுங்குன்ற நாட
உரையாமோ நூலிற்கு நன்கு.

பொழிப்புரை அகலவுரை நுட்பவுரை எச்சவுரை என்னும் இந்நால்வகை யுரைகளாலும் நூலை ஆராய்ந்து தெரிந்து அதன் விரிந்த பொருட்பெருக்கை விளக்கிக் காட்டாதவருடைய சொற்கள், பழித்தலில்லாத காட்டாக்களின் இனம் தங்குகின்ற உயர்ந்த மலைகளையுடைய நாடனே! நூலிற்குச் சிறந்த உரையாகுமோ? ஆகா வென்பது.

320. இற்பிறப் பில்லார் எனைத்துநூல் கற்பினும்
சொற்பிறரைக் காக்குங் கருவியரோ—இற்பிறந்த
நல்லறி வாளர் நவின்றநூல் தேற்றார்
புல்லறிவு தாமறிவ தில்.

உயர்ந்த குடிப்பிறப்பில்லாதவர் எவ்வளவு நூல்கள் பயின்றாலும் எனைக் கல்லாதவரின் வழுச் சொற்களை இகழாது அடக்கும் பொறுமையாகிய கருவியையுடையவராவரோ? ஆனால் உயர்குடியுட் பிறந்த சிறந்த அறிவுடையவர், புலனெறியுலகில் அடிப்பட்டுப் பழகிவரும் நூல்களையும் நன்பொருள் தெளியப் பெறாத கல்லாமையுடையவரது சிற்றறிவைத் தாம் ஆராய்ந்து காண்பதில்லை.

# 33-ம் அதி. புல்லறிவாண்மை

*தாழ்ந்த அறிவையே உயர்ந்த அறிவாகக் கருதிக்கொண்டு ஒழுகும் இயல்பு.*

**321.** அருளின் அறமுரைக்கும் அன்புடையார் வாய்ச்சொல்
பொருளாகக் கொள்வர் புலவர்—பொருளல்லா
ஏழை அதனை இகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு.

*அருள்காரணமாக அறம் அறிவுறுத்தும் அன்புடைய பெரியோரது வாய்மொழியை அறிஞர் பெரும் பயனுடையதாக மதித்தேற்றுக்கொள்வர்; ஆனால், பாலடிசிலை அகப்பை சுவையுணராமைபோல ஒரு பொருளாகக் கருதுதற்கில்லாத அறிவிலான் அவ் வாய்மொழியை மதியாது இகழ்ந்துரைப்பான்.*

**322.** அவ்விய மில்லார் அறத்தா றுரைக்குங்கால்
செவ்விய ரல்லார் செவிகொடுத்துங் கேட்கலார்
கவ்வித்தோல் தின்னுங் குணுங்கர்நாய் பாற்சோற்றின்
செவ்வி கொளல்தேற்றா தாங்கு.

*தோலைக் கவ்வித்தின்னும் புலையருடைய நாய்கள் பாலடிசிலின் நன்மையறிதலைத் தெளிந்துகொள்ளாமைபோல, அழுக்காறு முதலிய மனமாசுகளில்லாதவர் அறநெறி அறிவுறுத்தும் போது நல்லறிவில்லாப் புல்லறிவாளர் அதனைக் காதுகொடுத்துங் கேட்கமாட்டார்.*

**323.** இமைக்கு மளவில்தம் இன்னுயிர்போம் மார்க்கம்
எனைத்தானும் தாம்கண் டிருந்தும்—தினைத்துணையும்
நன்றி புரிகல்லா நாணில் மடமாக்கள்
பொன்றிலென் பொன்றாக்கா லென்.

கண்ணிமைக்கும் அத்துணைச் சிறுபொழுதில் தமது இனிய உயிரானது பிரிந்துபோம் இயல்பை எவ்வகையாலுந் தாம் தெரிந்திருந்தும் உலகில் உயிரோடிருப்பதற்குள் தினையளவாயினும் நற்செயல்கள் செய்து பிறவியைப் பயனுடையதாக்கிக்கொள்ளாத வெட்கமில்லா அறியாமை மாந்தர் இறந்தாலென்ன, இறவாது இருந்தாலென்ன? இரண்டும் ஒன்றே.

**324.** உளநாள் சிலவால் உயிர்க்கேமம் இன்றால்
பலர்மன்னுந் தூற்றும் பழியால்—பலருள்ளும்
கண்டாரோ டெல்லாம் நகாஅ தெவனொருவன்
தண்டித் தனிப்பகை கோள்.

இவ்வுலகில் உயிர்வாழ்ந்திருக்கும் நாட்கள் சில; அச் சில நாட்களிலும் உயிர்க்குப் பாதுகாப்பில்லை; பலர் தூற்றும் பழி வேறு; ஆதலின், பலரோடும் மகிழ்ந்தொழுகாது விலகி, எதிர்ப்பட்டவரோடெல்லாம் ஒருவன் கடும்பகை கொள்ளுதல் ஏன்?

**325.** எய்தி யிருந்த அவைமுன்னர்ச் சென்றெள்ளி
வைதா னொருவ னொருவனை—வைய
வயப்பட்டான் வாளா இருப்பானேல் வைதான்
வியத்தக்கான் வாழு மெனின்.

ஒருவன் சென்று கலந்திருந்த தக்கோர் அவையின்முன் ஒருவன்போய் அவனை இகழ்ந்து திட்டினனாக, அவ்வாறு திட்ட அதற்கு உட்பட்டவன் பொறுமையோடு சும்மா இருந்து விடுவனாயின் அந்நிலையில் வைதவன் நன்னிலைமையில் உயிர் வாழ்வானெனின், அவன் வியக்கத்தக்கவனே யாவன்; (உயிர் வாழ்தல் அரிதென்பது கருத்து.)

**326.** மூப்புமேல் வாராமை முன்னே அறவினையை
ஊக்கி அதன்கண் முயலாதான்—தூக்கிப்

புறத்திரு போகென்னும் இன்னாச்சொல் இல்லுள்
தொழுத்தையாற் கூறப் படும்.

கிழத்தனம் மேலே எழுந்து தோன்றாததற்குமுன் உலகில் அறச் செயலைத் துவக்கி அதன்கண் முயன்றுவாராதவன், பின்பு வீட்டில் ஏவற்காரியாலும் நெட்டித் தள்ளப்பட்டு 'வெளிப் புறத்தில் இரு' 'ஒழிந்துபோ' என்னுங் கொடுஞ் சொற்களுஞ் சொல்லப்படுவான்.

**327.** தாமேயும் இன்புறார் தக்கார்க்கும் நன்றாற்றார்
ஏமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார்—தாமயங்கி
ஆக்கத்துள் தூங்கி அவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னார்.

தாழ்ந்த அறிவினையுடையோர் தாமாகிலும் இன்புற அறியார், தகுதியுடைய பிறர்க்கும் நன்மைசெய்ய அறியார், தம் உயிர்க்கு அரணாக அமைந்த அறவொழுக்கங்களையுஞ் சேர்ந்தொழுகார்; தாம் மதிமயங்கி முன்னை நல்வினையாற் கிடைத்த செல்வச் செழுமையில் அழுந்தி வீணே தம் வாழ்நாளைக் கழித்தொழிவர்.

**328.** சிறுகாலை யேதமக்குச் செல்வுழி வல்சி
இறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளார்—இறுகிறுகிப்
பின்னறிவாம் என்றிருக்கும் பேதையார் கைகாட்டும்
பொன்னும் புளிவிளங்கா யாம்.

இளம் பருவத்திலேயே தமது செல்லுமிடமாகிய மறுமைக்கு அறமென்னும் உணவு அழுந்த அழுந்தக் கட்டுணவு தேடிக் கொள்ளாதவராய்ப் பொருளில் இறுக்கம் மிகக் கொண்டு அறவினையைப் பிற்காலத்திற் காண்போம் என்று செம்மாந்திருக்கும் புல்லறிவினார், இறுதிக் காலத்திற் சாக்காட்டுத் துன்பத்தினால் அறவினைவு வந்து அந்நிலைமையிற் பேச

நாவெழாமையினால் அயலிலுள்ளார்க்கு அறஞ் செய்மி னெனக் கைக்குறியாற் காட்டும் பொன்னும் அவராற் புளிச் சுவையுள்ள விளங்காய் கேட்டலாகக் கருதி மறுக்கப்படும்.

**329.** வெறுமை யிடத்தும் விழுப்பிணிப் போழ்தும்
மறுமை மனத்தாரே யாகி—மறுமையை
ஐந்தை யனைத்தானும் ஆற்றிய காலத்துச்
சிந்தியார் சிற்றறிவி னார்.

கையிற் பொருளில்லாத வறுமைக்காலத்தும் மிக்க நோயுண்டான நேரத்தும் மறுமைக்குரிய அறநினைவினரா யிருந்து, செல்வம் முதலியவற்றால் ஆற்றல் வாய்ந்த காலத்தில் அம் மறுமைக்குரிய அறத்தைச் சிறு கடுகினளவாயினும் புல்லறி வினார் கருதார்.

**330.** என்னேமற் றிவ்வுடம்பு பெற்றும் அறம்நினையார்
கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளை—அன்னோ
அளவிறந்த காதல்தம் ஆருயி ரன்னார்க்
கொளஇழைக்குங் கூற்றமுங் கண்டு.

ஐயோ, தம்பால் அளவுகடந்த அன்பினையுடைய தம் ஆருயிரன்ன உறவினரை உயிர் பிரித்துக்கொள்ள முயலுங் கூற்றுவனையும் உலகிற் பார்த்துக்கொண்டு, ஆ! பெறற்கரிய இம் மக்களுடம்பைப் பெற்றும் அறத்தை நினையாதவராய்ப் புல்லறிவினார் தம் வாழ்நாளை வீணே கழிக்கின்றனர்.

## 34-ம் அதி. பேதைமை

*யாதும் அறியாமை என்பதுணர்த்தும்.*

**331.** கொலைஞர் உலையேற்றித் தீமடுப்ப ஆமை
நிலையறியா தந்நீர்ப் படிந்தாடி யற்றே
கொலைவல் பெருங்கூற்றம் கோள்பார்ப்ப ஈண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு.

*கொல்லுந் தொழில் வல்ல ஆற்றலிற் பெரிய கூற்றுவன் தம் உயிர் கொள்ளுதலை எதிர்நோக்கிக்கொண்டிருக்க இவ் வுலகப் பற்றாகிய வலையிற் கிடந்து அதன்கட் களித்திருப்பாரது ஏழைமையியல்பு, தன்னைக் கொல்லுங் கொலைஞர் தன்னை உலையில் இட்டு அடுப்பிலேற்றித் தீக்கொளுவ ஆமை அந் நிலை யறியாது அவ் வுலைநீரில் அமிழ்ந்து விளையாடி மகிழ்ந்தாற் போன்றது.*

**332.** பெருங்கட லாடிய சென்றார் ஒருங்குடன்
ஓசை அவிந்தபின் ஆடுதும் என்றற்றால்
இற்செய் குறைவினை நீக்கி அறவினை
மற்றறிவாம் என்றிருப்பார் மாண்பு.

*குடும்பத்துக்குச் செய்யவேண்டிய குறைவுகளைச் செய்து தீர்த்து அறச் செயல்களைப் பின்பு கருதுவோம் என்று காலத்தை எதிர்நோக்கியிருப்பாரது இழிதகைமை, பெரிய கடலில் நீராடுதற்குச் சென்றவர் முழுதும் ஒருசேர அலை யொலி அடங்கியபின் நீராடுவாம் என்று கருதினாற் போன் றது.*

**333.** குலம்தவம் கல்வி குடிமைமூப் பைந்தும்
விலங்காமல் எய்தியக் கண்ணும்—நலஞ்சான்ற
மையறு தொல்சீர் உலகம் அறியாமை
நெய்யிலாப் பாற்சோற்றி னேர்.

நல்லிணக்கம், தவவொழுக்கம், கல்வியறிவு, குடிவளம், ஆண்டில் மூத்தோராதல் என்னும் ஐந்துந் தடையின்றிப் பெற்றவிடத்தும், இன்பம் நிரம்பிய தீதற்ற தொன்மையாகிய இயல்பினையுடைய வீட்டுலகவொழுக்கம் அறியானாயிருத்தல், நெய்யில்லாத பாலடிசிலுக்கு ஒப்பாகும்.

334. கல்நனி நல்ல கடையாய மாக்களின்
சொல்நனி தாமுணரா வாயினும்—இன்னினியே
நிற்றல் இருத்தல் கிடத்தல் இயங்குதலென்
றுற்றவர்க்குத் தாம்உதவ லான்.

மக்களிற் கடைப்பட்டவரான பேதையாரைவிடக் கற்பாறைகள் மிக நல்லனவாம்; ஏனெனில், அவை இக் கடைப்பட்டவர்களைப்போல் சான்றோர் உறுதிமொழிகளை முற்றும் உணரமாட்டாவாயினும் தம்மை அடைந்தவர்க்கு உடனே நின்றுகொள்ளல் இருந்துகொள்ளல் சாய்ந்துகொள்ளல் நடந்துகொள்ளல் என்று பலவற்றிற்கும் இடம் உதவுதலான் என்க.

335. பெறுவதொன் றின்றியும் பெற்றானே போலக்
கறுவுகொண் டேலாதார் மாட்டும்—கறுவினால்
கோத்தின்னா கூறி உரையாக்காற் பேதைக்கு
நாத்தின்னும் நல்ல சுனைத்து.

தனது சினத்துக்கு ஏதுவாகப் பெறுங் காரணமொன்று இல்லாதிருந்தும் அக் காரணம் பெற்றவனேபோலக் கோபித்தலை மேற்கொண்டு தனது சினம் சென்று தாக்குதலில்லாத உயர்ந்தோரிடத்தும் கோபத்தால் இன்னாச் சொற்களைத் தொடுத்துரைத்துப் பேசாவிட்டால் பேதைகளுக்கு மிக்க தினவு நாவை அரித்துவிடுவதுபோ லிருக்கும்.

336. தங்கண் மரபில்லார் பின்சென்று தாமவரை
எங்கண் வணக்குது மென்பவர்—புன்கேண்மை
நற்றளிர்ப் புன்னை மலருங் கடற்சேர்ப்ப!
கற்கிள்ளிக் கையிழந் தற்று.

அழகிய தளிர்களையுடைய புன்னை மரங்கள் மலர்கின்ற கடற்கரையாய்! தம்மிடத்தில் மதிப்பில்லாதவர் வழிச்சென்று 'அவரை எம்மிடம் அடங்கும்படி செய்வேம்' என்று சொல்லுவோர் கருதும் அச் சிறியோர் தொடர்பு, கருங்கல்லைக் கிள்ள முயன்று ஒருவன் தன் கைவிரலை இழந்ததனோடொக்கும்.

337. ஆகா தெனினும் அகத்துநெய் உண்டாகின்
போகா தெறும்பு புறஞ்சுற்றும்—யாதுங்
கொடாஅ ரெனினும் உடையாரைப் பற்றி
விடாஅர் உலகத் தவர்.

தமக்கு உண்ண வாய்க்காதெனினும் குடத்தினுள் நெய் இருக்குமாயின் எறும்புகள் போகாமல் அக் குடத்தின் வெளிப்புறத்தைச் சுற்றிக்கொண்டிருக்கும்; அதுபோல, ஒன்றும் உதவமாட்டாரென்றாலும் பொருளுடையோரைச் சூழ்ந்துகொண்டு பேதைமாக்கள் விடமாட்டார்கள்.

338. நல்லவை நாடொறும் எய்தார் அறஞ்செய்யார்
இல்லாதார்க் கியாதொன்றும் ஈகலார்—எல்லாம்
இனியார்தோள் சேரார் இசைபட வாழார்
முனியார்கொல் தாம்வாழும் நாள்.

உயர்ந்தோர் அவைக்களத்தை நாடொறுஞ் சென்றடைந்து கேள்விப்பயன் பெறாமலும், நற்செயல்கள் செய்யாமலும், இல்லாத வறியோர்க்கு யாதொன்றும் உதவாமலும், எல்லாவகையாலும் இனியாயிருக்கும் தம் மனைவியர் தோளை

மருவாமலும், கல்வி முதலியவற்றால் உலகிற் புகழுண்டாக வாழாமலுமிருக்கும் பேதை மாந்தர், தாம் உயிர்வாழும் வெற்று நாட்களை வெறாரோ !

339. விழைந்தொருவர் தம்மை வியப்ப ஒருவர்
விழைந்திலேம் என்றிருக்குங் கேண்மை—தழங்குகுரல்
பாய்திரைசூழ் வையம் பயப்பினும் இன்னாதே
ஆய்நலம் இல்லாதார் மாட்டு.

ஒருவர் தம்மை விரும்பி மதித்து அளவளாவ ஒருவர் அவரை விரும்பிலேம் என்று புறக்கணித்திருக்கும் இத்தகைய நுண்ணுணர்வில்லாப் பேதையரிடத்துண்டாகுந் தொடர்பு, ஒலிக்குங் குரலோடு பாய்ந்திழியும் அலைகளையுடைய கடல் சூழ்ந்த உலகத்தைப் பயப்பதாயினும், இனியதொன்றன்று.

340. கற்றனவும் கண்ணகன்ற சாயலும் இற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்தும்; தானுரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்தின் தணியாத
பித்தனென் றெள்ளப் படும்.

தான் கற்ற கல்விகளும், காட்சி பரந்த தன் சாயலும், தனது உயர்குடிப் பிறப்பும் அயலவர் பாராட்டப் பெருமையடையும்; அவ்வாறன்றித் தான் புகழ்ந்தால், தனக்கு முகமன் மொழிந்து விளையாடுவோர் மிகப்பெருகி அதனால், மருந்தினால் தெளியாத பித்தனிவன் என்று உலகத்தாரால் இகழப்படும் நிலையை ஒருவன் அடைவான்.

## 35-ம் அதி. கீழ்மை

*கீழ்மக்களின் தன்மை உணர்த்திற்று.*

**341.** கப்பி கடவதாக் காலைத்தன் வாய்ப்பெயினும்
குப்பை கிளைப்போவாக் கோழிபோல்—மிக்க
கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினும் கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும்.

*கடமையாக நாடோறும் நொய்யரிசியைத் தன் வாயிற் பெய்தாலும் குப்பை கிளைத்தலை விடாத கோழியைப்போல், மிக்க பெருமை நிறைந்த மெய்ந்நூலுண்மைகளைப் பொருள் விளக்கி அறிவுறுத்தாலும் கீழ்மகன் தன் மனம் விரும்பிய வழியே முனைந்தொழுகுவான்.*

**342.** காழாய கொண்டு கசடற்றார் தஞ்சாரல்
தாழாது போவாம் எனஉரைப்பின்—கீழ்தான்
உறங்குவம் என்றெழுந்து போமாம் அஃதன்றி
மறங்குமாம் மற்றொன் றுரைத்து.

*உறுதியாகிய மெய்ந்நூலுணர்வு கொண்டு வினை நீங்கிய மேலோர் பக்கல் நாம் காலந்தாழாது சென்று பயனுறுவோம் என்று அறிந்தோர் எடுத்துக்காட்டினால், கீழ்மகன் தூங்குவோம் வம்மின் என்று எழுந்துபோவான்; அஃதன்றி வேறு வம்புபேசி மாறுபடுவான்.*

**343.** பெருநடை தாம்பெறினும் பெற்றி பிழையாது
ஒருநடைய ராகுவர் சான்றோர்—பெருநடை
பெற்றக் கடைத்தும் பிறங்கருவி நன்னாட
வற்றாம் ஒருநடை கீழ்.

*உலகிற் பெருமித நிலையைத் தாம் பெற்றாலும் தம் பெருந்தன்மையாகிய இயல்பு வழுவாது என்றும் ஒரு தன்மையராய்*

விளங்குவர் மேலோர்; பெருமித நிலையைப் பெற்றவிடத்தும், விளங்குகின்ற அருவிகளையுடைய சிறந்த மலைநாடனே! கீழ் மகனும், என்றுந் தனது கீழ்மையியல்பு ஒரு நடையாய் ஒழுக வல்லவனுவன்.

**344.** தினையனைத்தே யாயினும் செய்தநன் றுண்டால்
பனையனைத்தா உள்ளுவர் சான்றோர்—பனையனைத்
தென்றுஞ் செயினும் இலங்கருவி நன்னாட!
நன்றில நன்றறியார் மாட்டு.

தினையளவினதேயாயினும் செய்த உதவி முன் இருக்கு மானல் அதனைப் பனையளவினதாகக் கருதிக் கனிந்திருப்பர் மேலோர்; நாளும் பனையளவு உதவிசெயினும், விளங்குகின்ற அருவிகளையுடைய உயர்ந்த மலைநாடனே! நன்மையறியாக் கீழோரிடத்தில் அவை சிறிதளவும் நன்றி பாராட்டுதலில்லாதன வாகும்.

**345.** பொற்கலத் தூட்டிப் புறந்தரினும் நாய்பிறர்
எச்சிற் கிமையாது பார்த்திருக்கும்—அச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினும்கீழ் செய்யுங்
கருமங்கள் வேறு படும்.

பொன்னுற் செய்த உண்கலத்தினுல் உண்பித்துப் பாது காத்தாலும் நாயானது பிறர் எறியும் எச்சிற்சோற்றுக்குக் கண் ணிமையாமல் விழித்துக்கொண்டு காத்துக்கிடக்கும்; அத் தன்மையாய்ப், பெருமைக்குரியனுகப் பெருமைப்படுத்தினுலும் கீழ்மகன் செய்யுஞ் செயல்கள் அந்நிலைமைக்கு வேருகும்.

**346.** சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
எக்காலுஞ் சொல்லார் மிகுதிச்சொல்—எக்காலும்
முந்திரிமேற் காணி மிகுவதேல் கீழ்தன்னை
இந்திரனு எண்ணி விடும்.

ஆட்சிச் செல்வம் பெற்றாலும் மேலோர் எந்தக் காலத்திலும் வரம்பு கடந்த சொற்களைச் சொல்லமாட்டார்கள்; ஆனால் முந்திரியளவுக்கு மேற் காணியளவாகச் செல்வம் மிகுவதானால் கீழ்மகன் தன்னை என்றுந் தேவர்கோனாக எண்ணி இறுமாந்து உரையாடுவன்.

**347.** மைதீர் பசும்பொன்மேல் மாண்ட மணியழுத்திச்
செய்த தெனினும் செருப்புத்தன் காற்கேயாம்
எய்திய செல்வத்த ராயினும் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

குற்றந்தீர்ந்த கிளிச்சிறை என்னும் பசிய பொற்றகட்டின் மேல் மாட்சிமை வாய்ந்த மணிக்கற்களைப் பதித்துச் செய்ததாயினும் செருப்பு ஒருவனது காலுக்கே அணிந்துகொள்ள உதவும்; அதுபோலச், சிறக்கப் பொருந்திய செல்வ முடையவராலும் கீழ்மக்களை அவர் செய்கின்ற தொழில்களால் இன்னாரென்று கண்டுகொள்ளுதல் கூடும்.

**348.** கடுக்கெனச் சொல்வற்றும் கண்ணோட்ட மின்றும்
இடுக்கண் பிறர்மாட் டுவக்கும்—அடுத்தடுத்து
வேக முடைத்தாம் விறன்மலை நன்னாட!
ஏகுமாம் எள்ளுமாம் கீழ்.

ஆற்றல் வாய்ந்த மலைகளையுடைய சிறந்த நாடனே! கீழ்மகன் கடுமையாகப் பேசுதல் வல்லான்; கண்ணோட்ட மில்லான்; பிறரிடத்து நேரும் இன்னலுக்கு மகிழ்வான்: அடிக்கடி சீற்ற முடையான்; கண்ட இடங்கட்குச் செல்வான்; பிறரை இகழ்வான்.

**349.** பழைய ரிவரென்று பன்னாட்பின் னிற்பின்
உழைஇனிய ராகுவர் சான்றோர்—விழையாதே
கள்ளுயிர்க்கும் நெய்தற் கனைகடல் தண்சேர்ப்ப!
எள்ளுவர் கீழா யவர்.

தேன் சொரியும் நெய்தல் மலர்களையுடைய ஒலிக்கின்ற கடலின் குளிர்ந்த கரையையுடையவனே! தமக்குப் பின்னால் வந்து ஒருவர் பணிவுடையராய் நின்றால் இவர் பலநாள் பழகியவரென்று விரும்பி அவரிடம் சான்றோர் அன்புடையவராவர்; ஆனால் கீழ்மக்கள் அவரைத் தமக்கு அடங்கினவரெனக் கொண்டு அன்பினால் விரும்பாமல் அதிகாரத்தால் மதியாது ஒதுக்குவர்.

350. கொய்புல் கொடுத்துக் குறைத்தென்றுந் தீற்றினும்
வையம்பூண் கல்லா சிறுகுண்டை—ஐயகேள்!
எய்திய செல்வத்த ராயினும் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

கொய்தற்குரிய பசும் புல்லை அறுத்துக் கொடுத்து நாடோறும் உண்பித்து வந்தாலும் சிற்றெருதுகள் வண்டிகள் பூண்டிழுக்க உதவா; ஐய, கேட்பாயாக; சிறக்கப் பொருந்திய செல்வமுடையவரானாலும் கீழ்மக்களை அவர் செய்கின்ற தொழில்களால் இன்னரென்று கண்டுகொள்ளுதல் கூடும்.

## 36-ம் அதி. கயமை

மெலிந்த உணர்வினரது இயல்புணர்த்திற்று.

351. ஆர்த்த அறிவினர் ஆண்டிளைய ராயினும்
காத்தோம்பித் தம்மை அடக்குப—மூத்தொறூஉம்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோல்
போத்தறார் புல்லறிவி னார்.

உறுதி மிக்க மெய்யறிவினையுடையார் ஆண்டில் இளையராயினும் தம்மைத் தீய நெறியினின்றுந் தடுத்து நன்னெறியில்

*திறுத்தி அடக்கிக்கொள்வர் ; ஆனல், மெலிந்த அறிவினையுடையார் கழுகுபோல ஆண்டு முதிர முதிரத் தீய செய்கைகளே தடிப்பேறி அலேந்து, மாசு நீங்கார்.*

**352.** **செழும்பெரும் பொய்கையுள் வாழினும் என்றும்**
**வழும்பறுக்க கில்லாவாம் தேரை—வழும்பில்சீர்**
**நூல்கற்றக் கண்ணும் நுணுக்கமொன் றில்லாதார்**
**தேர்கிற்கும் பெற்றி அரிது.**

*நீர் நிறைந்த பெரிய குளத்தின்கண் உயிர் வாழ்ந்தாலும் தவளைகள் தம்மேல் உள்ள வழுவழுப்பான அழுக்கை நீக்கிக் கொள்ளும் ஆற்றலில்லாதனவாகும் ; அதுபோலப், பிழையற்ற சிறப்பினையுடைய மெய்ந்நூல்களைப் பயின்றாலும் நுட்பஞ் சிறிது மில்லாதவர் தம்மை அதனல் மேம்படுத்திக்கொள்ளும் மாட்சி இல்லை.*

**353.** **கணமலை நன்னாட! கண்இன் றொருவர்**
**குணனேயுங் கூறற் கரிதால்—குணனழுங்கக்**
**குற்றம் உழைநின்று கூறுஞ் சிறியவர்கட்**
**கெற்றால் இயன்றதோ நா.**

*கூட்டமான மலைகளையுடைய உயர்ந்த நாடனே! ஒருவர்க்குப் புறத்தில் அவரது நல்லியல்பினையும் பேசுதற்கு அருமையாயிருக்குமென்பர் பெரியோர். ஆனல், ஒருவரது நல்லியல்பு கெடும்படி, செய்யாத குற்றங்களை அவர் எதிரிலிருந்து செய்ததாகக் கூறும் மெலிந்த அறிவினர்க்கு, நாக்கு எதனல் உருவானதோ, அறிகிலம்.*

**354.** **கோடேந் தகலல்குற் பெண்டிர்தம் பெண்ணீர்மை**
**சேடியர் போலச் செயல்தேற்ரூர்—கூடிப்**
**புதுப்பெருக்கம் போலத்தம் பெண்ணீர்மை காட்டி**
**மதித்திறப்பர் மற்றை யவர்.**

*பக்கம் உயர்ந்து அகன்ற அல்குலையுடைய நல்லிலக்கணம அமைந்த நற்பெண்டிர் வேலைக்காரிகளைப்போல், தமது பெண்மையியல்பைப் புறத்தில் ஒப்பனை செய்து காட்டுதல் அறியார்; ஆனால் வினைத் தீய பெண்டிரோ தம்முட் கூடிப் புது வெள்ளம் போலப் புனைதல் செய்து தமது பெண்மை யியல்பைப் புறத்திற் புலப்படுத்தித் தாமே மதித்து வரம்பு கடந்து நடப்பர். (அது போற் கயவர் இடம்பத்தால் அவம்படுவர் என்பது.)*

**355.** **தளிர்மேலே நிற்பினும் தட்டாமற் செல்லா**
**உளிநீரார் மாதோ கயவர்—அளிநீரார்க்**
**கென்னானுஞ் செய்யார் எனைத்தானுஞ் செய்பவே**
**இன்னாங்கு செய்வார்ப் பெறின்.**

*இளந்தளிரின்மேல் நின்றாலும் பிறர் தட்டினாலன்றி அதனுள் இறங்காத உளியின இயல்பினையுடையவர் கயவர்; ஏனென்றால், பிறர்க்கிரங்கும் இயல்புடைய சானறோர்க்குச் சிறிதும் பயன்படாமல், தமக்குக் கொடுமை செய்வாரைப் பெற்றால் அவர் எவ்வளவும் பயன்பட்டு வேலைசெய்வர்.*

**356.** **மலைநலம் உள்ளும் குறவன்; பயந்த**
**விளைநிலம் உள்ளும் உழவன்; சிறந்தொருவர்**
**செய்தநன் றுள்ளுவர் சான்றோர்; கயம்தன்னை**
**வைததை உள்ளி விடும்.**

*குறவன் தனக்கு வளந் தந்த மலையினது நன்மையை நினைந்து பாராட்டிக்கொண்டிருப்பான்; உழவன் தனக்கு விளைவுள் பயந்த விளைநிலங்களின் நன்மையை நினைந்து பாராட்டிக்கொண்டிருப்பான். அவைபோல், ஒருவர் அருட்குணம் மிகுந்து தமக்குச் செய்த நன்றியை நினைந்து பாராட்டிக்கொண்டிருப்பர் சான்றோர்; ஆனால் தாழ்ந்த அறிவினன், தன்னைப் பிறர் பழித்ததை நினைத்துப் பகைமை கொண்டு விடுவன். (நலம் பாராட்டான் என்பது.)*

**357.** ஒருநன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
பிழைநூறும் சான்றோர் பொறுப்பர்—கயவர்க்
கெழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயின்
எழுநூறும் தீதாய் விடும்.

*தமக்கு ஒரு நன்மை செய்தவர்க்குச் சான்றோர் அவரால் பின்பு தொடர்ந்து உண்டான நூறு குற்றங்களும் பொறுத்து நிற்பர். ஆனால், அறிவில் தாழ்ந்தோர்க்கு ஒருவர் எழுநூறு நன்மைகள் செய்து பின்பு தவறுதலால் ஒன்று தீமையாக நேர்ந்துவிட்டால் அவ்வெழுநூறு நன்மைகளும் தீமைகளாய்க் கருதப்பட்டுவிடும்.*

**358.** ஏட்டைப் பருவத்தும் இற்பிறந்தார் செய்வன
மோட்டிடத்தும் செய்யார் முழுமக்கள்—கோட்டை
வயிரம் செறிப்பினும் வாட்கண்ணாய் பன்றி
செயிர்வேழ மாகுதல் இன்று.

*பொருளில்லாமை முதலியவற்றால் தளர்வுண்டான காலத்திலும் உயர்குடியிற் பிறந்த சான்றோர் செய்யும் நற்செயல்களைச், செல்வமுள்ள காலத்திலும் கயவர்கள் செய்யார். ஒளிமிக்க கண்களையுடைய பெண்ணே! பன்றியின் கொம்பை வயிரம் பொருத்திப் பூண்கட்டினும் அது போர்ச்சினமுடைய யானையாத லில்லை.*

**359.** இன்றாதும் இந்நிலையே ஆதும் இனிச்சிறிது
நின்றாதும் என்று நினைத்திருந்து—ஒன்றி
உரையின் மகிழ்ந்துதம் உள்ளம்வே றாகி
மரையிலையின் மாய்ந்தார் பலர்.

*இன்று செல்வராவோம், இப்போதே செல்வராவோம், இனிச் சற்றுப் பொறுத்துச் செல்வராவோம் என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்து அதிற்படிந்து வாய்ப்பேச்சினாற் களித்து,*

ஆனல் அதற்குரிய முயற்சியிலராய்த் தம் இயல்பு வேறுபட்டுத் தாமரையிலையைப்போல், இருந்த நிலையிலேயே மாய்ந் தொழிந்த கயவர் பலராவர்.

360. நீருட் பிறந்து நிறம்பசிய தாயினும்
ஈரம் கிடையகத் தில்லாகும்—ஓரும்
நிறைப்பெருஞ் செல்வத்து நின்றக் கடைத்தும்
அறைப்பெருங்கல் அன்னர் உடைத்து.

நீரினுள் தோன்றி மேலே நிறம் பசுமையுடையதாயிருந் தாலும் நெட்டியின் உள்ளே ஈரம் இல்லையாம்; அதுபோல, நிறைந்த பெரிய செல்வநிலையில் நின்றாலும் பாறையாகிய பெரிய கல்லைப்போல் வன்மையான உள்ளம் படைத்த கயவரை உடைத்து இவ்வுலகம்.

---

## 37-ம் அதி. பன்னெறி,

பலவகைப்பட்ட ஒழுகலாறுகளை உணர்த்துவது.

361. மழைதிளைக்கும் மாடமாய் மாண்பமைந்த காப்பாய்
இழைவிளக்கு நின்றிமைப்பின் என்னும்—விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதான் இல்லகம்
காண்டற் கரியதோர் காடு.

மேகங்கள் தவழும் உயர்ந்த மாளிகையாய்ச் சிறப்பமைந்த பாதுகாப்புடையதாய் மணிகளால் இழைக்கப்பட்ட விளக்கு கள் அங்கங்கும் இருந்து ஒளிவிடினும் என்ன பயனாகும்? மாட்சிமை வாய்ந்த விரும்பத்தக்க இல்லக் கிழத்தியை யில்லாத வனது வீடு கண்கொண்டு பார்த்தற்கியலாததொரு கொடிய காடாகும்.

**362.** வழுக்கெனைத்தும் இல்லாத வாள்வாய்க் கிடந்தும்
இழுக்கினைத் தாம்பெறுவ ராயின்—இழுக்கெனைத்துஞ்
செய்குறுப் பாணி சிறிதேஅச் சின்மொழியார்
கையுறுப் பாணி பெரிது.

*சோர்வு சிறிதுமில்லாத வாளின் காவலிலிருந்தும் மகளிர் ஒழுக்கத் தவறுதலை உறுவராயின், குளிர்ந்த மொழிகளைப் பேசும் அம் மகளிர் தமது வாழ்நாளிற் குற்றஞ் சிறிதுஞ் செய்யாத காலம் சிறிதே; மற்றுத் தங் கணவர்க்கு வயப்பட்டொழுகாக் காலம் பெரிதென்க.*

**363.** எறியென் றெதிர்நிற்பாள் கூற்றம்; சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி;—அட்டதனை
உண்டி உதவாதாள் இல்வாழ்பேய்; இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

*தன் கணவர்க்குச் சினத்தை மூட்டி 'அடி' என்று எதிரில் அடங்காது நிற்கும் மனைவி அவனுக்குக் கூற்றுவனாவாள்; காலை நேரத்தில் அடுக்களையிற் சென்று உணவு சமைக்காதவள் தன் கணவனுக்குக் கொடிய நோயாவாள்; சமைத்ததை அவனுக்கு உணவாக இடாமல் தான் உண்பவள் இல்லத்தில் வாழும் பேயாவாள்; இம் மூவகையியல்புடைய மாதரும் தம்மை மணந்துகொண்ட கணவன்மாரை உயிரோடு வருத்துங் கருவிகளாவர்.*

**364.** கடியெனக் கேட்டுங் கடியான் வெடிபட
ஆர்ப்பது கேட்டும் அதுதெளியான்—பேர்த்துமோர்
இல்கொண் டினிதிருஉம் ஏமுறுதல் என்பவே
கல்கொண் டெறியுந் தவறு.

*இனி, மணவாழ்க்கையை முனிந்துவிடு என்று தக்கோ ரறிவுரைகள் கேட்டும் முனியானாய், தலைவெடிக்கும்படி உல*

இற் சாப்பறைகள் முழங்குவது கேட்டும் அத் துறவியல்பைத் தெளியானாய், மீண்டும் இரண்டா முறையாக ஓர் இல்லக் கிழத்தியை மணம்புரிந்து கொண்டு இன்புற்றிருக்கும் மயக்கத்தை அடைதல் தன்னையே தான் கற்கொண்டெறிந்து கொள்ளுந் தவறென்று சான்றோர் கூறுவர்.

**365.** தலையே தவம்முயன்று வாழ்தல்; ஒருவர்க்
கிடையே இனியார்கண் தங்கல்;—கடையே
புணராதென் றெண்ணிப் பொருள்நசையால் தம்மை
உணரார்பின் சென்று நிலை.

மக்கட் பிறவியில் வந்த ஒருவர்க்குத் தம் வாழ்க்கையில் தவ முயற்சியுடையராய் வாழ்தல் தலையானதாகும்; தமக்கு இனியாராயிருக்கும் மனைவி மகள் முதலிய உறவினரிடத்து மனந்தங்கி அவரவோ டொழுகுதல் இடைத்தரமான வாழ்வாகும்; மேற்கூறிய இருவகை வாழ்வின் முயற்சியுந் தமக்குக் கைகூடாதென்று நினைத்து, வெறும் பொருள் விருப்பத்தால் தம் குடிப்பிறப்பு கல்வி முதலிய தகுதிகளையுங் கருதிப் பாராது நடத்துஞ் செல்வர்களின் பின் சென்று நிற்கும் அடிமை நிலை, கடைப்பட்ட வாழ்வாகும்.

**366.** கல்லாக் கழிப்பர் தலையாயார்; நல்லவை
துவ்வாக் கழிப்பர் இடைகள்; கடைகள்
இனிதுண்ணேம் ஆரப் பெறேம்யாம் என்னும்
முனிவினாற் கண்பா டிலர்.

மக்களில் உயர்ந்தோர், நற்கருத்துக்களை ஆழ்ந்து அறிந்து தெளிவுபெறுதலை மேற்கொண்டு அம் முறைமையில் தம் வாழ்நாட்களைக் கழிப்பர்; இடைத்தர மக்கள், இனிய பண்டங்களைத் தம் ஐம்புலன்களாலும் நுகர்ந்து இன்புறுதலை மேற்கொண்டு அம் முறைமையில் வாழ்நாள் கழிப்பர்; கடைத்தர

மக்கள், 'யாம் பண்டங்களை இன்பமாய் நுகரப் பெற்றிலேம்' என்னும் வெறுப்பினால் இரவிலும் உறக்கமில்லாதவராவர்.

367. செந்நெல்லா லாய செழுமுளை மற்றுமஅச்
செந்நெல்லே யாகி விளைதலால்—அந்நெல்
வயல்நிறையக் காய்க்கும் வளவய லூர !
மகனறிவு தந்தை யறிவு.

சாலி என்னும் உயர்ந்த செந்நெல்லின் விதையினால் உண்டான செழுவிய முளை அச் செந்நெற் பயிராகவே தோன்றி விளைதலால், அச் செந்நெல் வயல் நிறைய விளைந்து கிடக்கும் வளமான கழனிகளையுடைய ஊரனே! புதல்வனது அறிவுநலம் அவன் தந்தையின் அறிவுவகையை ஒத்ததாகும்.

368. உடைப்பெருஞ் செல்வரும் சான்றோரும் கெட்டுப்
புடைப்பெண்டிர் மக்களும் கீழும் பெருகிக்
கடைக்கால் தலைக்கண்ண தாகிக் குடைக்கால்போற்
கீழ்மேலாய் நிற்கும் உலகு.

தமது பொருளைப் பலர்க்கும் வழங்கும் அன்புரிமை யுடைய பெரிய செல்வவளம் வாய்ந்த இல்லறத்தாரும் ஏனைத் துறவாசிரியரும் வறியராய் நிலைசுருங்கிச், சார்புபெண்டிராகிய வேசையரின் மககளும் ஏனைக் கயவர்களும் செல்வமுடையவர்களாய் நிலைபெருகி, அவ்வாற்றாற் கடைப்பட்டதாகிய கால் தலைப்புறத்திலிருப்பதாய்க், குடையினது தண்டு கீழ் மேலாக நிற்பதுபோல் இவ்வுலகம் தலைகீழாய் நிற்கும் இயல்புடையதாயிருக்கின்றது.

369. இனியார்தம் நெஞ்சத்து நோய்உரைப்ப அந்நோய்
தணியாத உள்ளம் உடையார்—மணிவரன்றி
வீழும் அருவி விறன்மலை நன்னாட!
வாழ்வின் வரைபாய்தல் நன்று.

மணிகளை வாரிக்கொண்டு வீழ்கின்ற அருவிகளையுடைய வெற்றிமிக்க மலைகளமைந்த சிறந்த நாடனே! தமக்கு இனிய ராயிருப்போர் தமது நெஞ்சிலுள்ள கவலையைத் தாமே ஆற் றிக்கொள்ள வியலாது தம்மிடம் எடுத்துச் சொல்ல அக் கவலைக்கு ஏதுவான குறையைத் தீர்த்து அதனைத் தணிவிக் காத இரக்கமற்ற வன்னெஞ்சுடையார், இவ்வுலகில் உயிர் வாழ்தலினும் ஒரு மலையின்மேல் ஏறி வீழ்ந்து உயிர் மாய்த்துக் கொள்ளுதல் நலமாகும்.

**370.** புதுப்புனலும் பூங்குழையார் நட்பும் இரண்டும்
விதுப்பற நாடின்வே றல்ல—புதுப்புனலும்
மாரி அறவே அறுமே, அவரன்பும்
வாரி அறவே அறும்.

புதுநீர்ப் பெருக்கும் அழகிய தோடணிந்த வேசையரின் தொடர்பும் விரைதலின்றி ஆராய்ந்தால் அவை தம் தன்மையில் வேறு வேறு அல்ல; புது வெள்ளமும் மழைநிற்க நின்றுவிடும்; அவ் விலைமகளிர் அன்பும் பொருள் வருவாய் நீங்க நீங்கிவிடும்.

---

## 38-ம் அதி. பொதுமகளிர்

பொருள் கொடுப்பார் பலர்க்கும் உரிய பொதுப்பொரு ளாயிருக்கும் வரைவில் மகளிரின் இயல்பு.

**371.** விளக்கொளியும் வேசையர் நட்பும் இரண்டும்
துளக்கற நாடின்வே றல்ல—விளக்கொளியும்
நெய்யற்ற கண்ணே அறுமே, அவரன்பும்
கையற்ற கண்ணே அறும்.

விளக்கின் ஒளியும் விலைமகளிர் உறவுமாகிய இரண்டும் கலக்கமின்றி ஆராய்ந்தால் அவை தம் தன்மையில் வேறு

அல்ல; விளக்கின் ஒளியும் நெய் வற்றிய போதே அவியும்; அம் மகளிரின் அன்பும் பொருள் வற்றியபோது இல்லையாய் விடும்.

**372.** அங்கோட் டகலல்குல் ஆயிழையாள் நம்மோடு
செங்கோடு பாய்துமே என்றாள்மன்—செங்கோட்டின்
மேற்காண மின்மையான் மேவா தொழிந்தாளே
கால்கால்நோய் காட்டிக் கலுழ்ந்து.

அழகிய பக்கங்கள் உயர்ந்த அகன்ற அல்குலையுடைய ஆராய்ந்தெடுத்த இழைகளையணிந்த விலைமகள், நாம் பொருளுடையமாயிருந்த காலத்து நம்மோடு, செங்குத்தான மலையுச்சியில் ஏறிக் கீழ்வீழ்ந்து ஒன்றாய் உயிர் துறப்போம் என்று அன்புரை கூறினாள்; இப்போது நமது கையிற் பொருளில்லாமையால், தனது காலில் வாதநோயென்று காட்டிப் போலியாக அழுது இம் மலையுச்சியின்மேல் வாராமற்போனாளே! (ஆ, என்ன ஏமாற்றம!)

**373.** அங்கண் விசும்பின் அமரர் தொழப்படும்
செங்கண்மா லாயினும் ஆகமன்—தம்கைக்
கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தளி ரன்னார்
விடுப்பர்தம் கையால் தொழுது.

அழகிய இடமகன்ற விண்ணுலகத்தின் தேவர்களால் வணங்கப்படுகின்ற சிவந்த தாமரைக் கண்களையுடைய திருமாலை ஒப்பவனாயினுமாக; தமது கையிற், கொடுக்கத்தக்க பொருள் ஒன்றுமில்லாத ஆடவரைக, (கொய்தற்குரிய இளந் தளிர் போன்ற மேனியையுடைய) பொதுமகளிர் தம் கைகளால் வணங்கி விடைகொடுத்தனுப்பிவிடுவர்.

**374.** ஆணமில் நெஞ்சத் தணிநிலக் கண்ணார்க்குக்
காண மிலாதார் கடுவனையர்—காணவே

செக்கூர்ந்து கொண்டாரும் செய்த பொருளுடையார்
அக்கார மன்னூர் அவர்க்கு.

*அன்பில்லாத உள்ளமும் அழகிய நீலமலர் போன்ற கண்களுமுடைய பொதுமகளிர்க்குப் பொருளில்லாதவர் எத்துணை உயர்ந்தவராயினும் கஞ்சையொப்பத் தோன்றுவர்; பலருங் காணச் செக்காட்டிப் பிழைப்பாரும் ஈட்டிய செல்வமுடையார் அவர்க்குச் சர்க்கரைபோல் விரும்பத் தக்கவராவர்.*

375. பாம்பிற் கொருதலை காட்டி ஒருதலை
தேம்படு தெண்கயத்து மீன்காட்டும்—ஆங்கு
மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்
விலங்கன்ன வெள்ளறிவி னூர்.

*இன்சுவை மிகக தெளிந்த நீர்ப்பொய்கையில் பாம்புக்குத் தனதுடலின் ஒருபுறமாகிய தலையைக் காட்டி மற்றொரு புறமாகிய வாலை மீனுக்குக் காட்டி அவ்வவற்றிற்கினமாயிருந்து உயிர் பிழைத்துவரும் விலாங்குமீனைப் போன்ற கள்ளச் செயலுடைய விலைமகளிரின் தோள்களைக் கூடுங் காமுகர், விலங்கைப்போற் பகுத்தறிவில்லா அறியாமையுடையவராவர்.*

376. பொத்தநூற் கல்லும் புணர்பிரியா அன்றிலும்போல்
நித்தலும் நம்மைப் பிரியலம் என்றுரைத்த
பொற்றொடியும் போர்த்தகர்க்கோ டாயினாள் நன்னெஞ்சே
நிற்றியோ போதியோ நீ.

*நாம் பொருளுடையமாயிருந்த காலத்தில் கோத்த நூலோடு பொருந்திய மணியும் சேர்க்கை பிரியாத அன்றிற் பறவைகளும்போல் எந்நாளும் நம்மைப் பிரியோம் என்று உறுதிகூறிய பொன்னாற்செய்த வளையலணிந்த பொதுமகள், இப்போது போர்த்தொழில் செய்கின்ற ஆட்டுக்கடாவின்*

கொம்புபோல் மனம் முறுக்குண்டு வன்மையாய்ப் பின்வாங்கி விட்டாள்; கவடற்ற நெஞ்சமே! இனி நீ அவளிடமே நயந்து நிற்பாயோ, அன்றி நன்னெறியில் திரும்பி வருவாயோ?

377. ஆமாபோல் நக்கி அவர்கைப் பொருள்கொண்டு
சேமாபோல் குப்புறூஉம் சில்லைக்கண் அன்பினை
ஏமாந் தெமதென் றிருந்தார் பெறுபவே
தாமாம் பலரால் நகை.

முதலிற் காட்டாவைப்போல் மெத்தென ஊற்றின்பந் தந்து காமுகரின் கையிலுள்ள பொருளைப் பறித்துக்கொண்டு பின்பு காட்டெருதைப்போற் பிறவிடத்துப் பாய்ந்தோடி விடும் தீயொழுக்கமுடைய பொதுமகளுள்ளத்துப் போலியன்பினை மதிமயங்கி எமக்குரியதென்று நம்பியிருந்தவர், உலகிற் பலரால் நகைத்தலைப் பெறுவர்.

378. ஏமாந்த போழ்தின் இனியார்போன் றின்னாராய்த்
தாமார்ந்த போதே தகர்க்கோடாம்—மான்நோக்கின்
தந்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே
செந்நெறிச் சேர்துமென் பார்.

காமுகர் தம்மாட்டு மயங்கியிருந்த காலத்தில் புறத்தே அவர்க்கு இனியாரைப்போலிருந்து அகத்தே வஞ்சம் மிக்கவராய்த் தாம் அவர் பொருளையெல்லாம் உண்டுவிட்டவுடனே ஆட்டுக்கடாவின் கொம்புபோல் திருக்குண்டு செல்கின்ற, தம் மனம்போன வழியே யொழுகும், (மான்போன்ற மருண்ட பார்வையினையுடைய) பொருட்பெண்டிரது அகன்ற மார்பினை அருனெறியிலொழுகுவே மென்றிருப்பார் கூடார்.

379. ஊறுசெய் நெஞ்சந்தம் உள்ளடக்கி ஒண்ணுதலார்
தேற மொழிந்த மொழிகேட்டுத்—தேறி

எமரென்று கொள்வாருங் கொள்பவே யார்க்கும்
தமரல்லர் தம்உடம்பி னர்.

பிறர்பாற் பொருள்பறித்துக் கொள்ளுதலாகிய தீமையைச் செய்யுந் தமது நினைவைப் புறத்தே புலப்படாதபடி தம் உள்ளத்தில் அடக்கிக்கொண்டு ஒளிமிக்க நெற்றியையுடைய பொருட்பெண்டிர் புறத்தே மனந்தெளியும்படி மொழிந்த பசப்புமொழிகளைக் கேட்டு, அவற்றை நம்பி அப்பெண்டிர் 'எமக்குரியர்' என்று உரிமை கொள்வாருங் கொள்க; அம் மாதர் எவர்க்கும் உறவினராகார்; அவர், தமதாக்கத்துக்கே தமதுடம்பைப் பயன்படுத்துதலுடையர்.

380. உள்ளம் ஒருவன் உழையதா ஒண்ணுதலார்
கள்ளத்தால் செய்யுங் கருத்தெல்லாம்—தெள்ளி
அறிந்த விடத்தும் அறியாராம் பாவம்
செறிந்த உடம்பி னவர்.

தமது நெஞ்சம் வேறொருவனிடத்ததாக ஒளிபொருந்திய நெற்றியையுடைய பொருட்பெண்டிர் வஞ்சனையால் தம்மிடஞ் செய்யும் நினைவெல்லாம் ஆராய்ந்து நன்றாகத் தெரிந்த நிலையிலும், தீவினை மிக்க பிறப்பினையுடையவர், அத் தெரிவினைத் தமதொழுக்கத்திற் கொண்டுவரும் அறிவாற்றலில்லாதவராவர்.

---

## 39-ம் அதி. கற்புடை மகளிர்

தங் கணவர்பால் ஆழ்ந்த அன்புணர்வுடைய இல்லற நிகழ்த்தும் மகளிரது இயல்பு.

381. அரும்பெறற் கற்பின் அயிராணி யன்ன
பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும்—விரும்பிப்
பெறுநசையாற் பின்நிற்பா ரின்மையே பேணும்
நறுநுதலாள் நன்மைத் துணை.

பெறலரிய கற்பொழுக்கமுடைய அயிராணி யென்னுந் தேவர்கோன் மனைவிபோல் வாழ்க்கையிற் பெரிய புகழ்வாய்ந்த மகளிராயினும், அவருள், உணவு முதலிய பொருள்களை விரும்பி அவற்றை அடையும் வேட்கையால் தன் பின்னே இரந்து நிற்கும் இரவலர் இல்லாமையையே, தனது விருந்தோம்பு முறையாற் காத்தொழுகும் (இயற்கை மணங் கமழும் நெற்றியையுடைய) பெண்ணே, இல்லறத்தின் பயன்களாகிய மேன்மேல் நன்மைகட்குத் துணையாவாள்.

**382.** குடநீர்அட் டுண்ணும் இடுக்கட் பொழுதும்
கடல்நீர் அறவுண்ணும் கேளிர் வரினும்
கடன்நீர்மை கையாறுக் கொள்ளும் மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்.

குடத்திலுள்ள நீரையே காய்ச்சிப் பருகிப் பசியாறும் இன்னாக் காலத்தும் கடல் நீர் முழுமையும் உண்டு பசியாறு தற்குரிய அத்தனை உறவினர் ஒருங்கு விருந்தாக வந்தாலும் அந்நேரத்தில் தன் கடமையாகிய விருந்தோம்பு மியல்பைச் செயன்முறையாக மேற்கொள்கின்ற (மென்மையான சொற்களையுடைய) பெண்ணே இல்லறவாழ்க்கைக்குரிய மாட்சிமை யுடையவளாவாள்.

**383.** நாலாறும் ஆறாய் நனிசிறிதாய் எப்புறனும்
மேலாறு மேல்உறை சோரினும்—மேலாய
வல்லாளாய் வாழும்ஊர் தற்புகழும் மாண்கற்பின்
இல்லாள் அமர்ந்ததே இல்.

வீடு நாலாபக்கமும் இடிந்து வழியுடையதாய், மிகவுஞ் சிறியதாய், எந்தப் பக்கமும் கூரை கலைந்து மேல் வழியாய் தன்மேல் மழை ஒழுகுவதாய் அத்துணை வறிய நிலையிலிருப்பி னும் உயர்ந்த இல்லறவொழுக்கங்களில் திறமையுடையவளாய்

அதனால் தான் வாழும் ஊரவர் தன்னைப் புகழ்ந்தேத்துகின்ற மாட்சிமையான கற்புநிலையுடைய மனைவி அமர்ந்திருக்கும் வீடே வீடெனப்படும்.

384. கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினள்—உட்கி
இடன்அறிந் தூடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்.

பார்வைக்கு இனிய இயற்கை யழகுடையளாய்த் தன் காதலன் விருப்பப்படி செயற்கைக்கோலங்கள் செய்து கொள்வாளும், தனது கற்பொழுக்கச் சீரினாற் கண்டாரெவரும் அஞ்சும் மதிப்புடையளாய்த் தான் வாழும் ஊரிலுள்ள மகளி ரெல்லாரும் தன்னுடைய இல்லறச் செய்கைகளின் திறமைக்கு வியந்து நாண் கொள்ளற்குரிய மாட்சிமை யுடையாளும், தன் கணவன்பால் உண்மதிப்புக் கொண்டு செவ்வியறிந்து ஊடியும் அஃது இனிதாம்படி அவ்வூடல் நீங்கியும், இன்பம் விளைக்கும் மென்மையான மொழிகளையுடைய பெண்ணே, இல்வாழ்க் கைக்குரிய வாழ்க்கைத்துணை யாவள்.

385. எஞ்ஞான்றும் எங்கணவர் எந்தோள்மேற் சேர்ந்தெழினும்
அஞ்ஞான்று கண்டேம்போல் நாணுதுமால்—எஞ்ஞான்றும்
என்னை கெழீஇனர் கொல்லோ பொருள்நசையால்
பன்மார்பு சேர்ந்தொழுகு வார்.

எம் கணவர் எந்நாளும் எம் தோள்மேல் முயங்கி யெழுந் தாலும் தலைநாளிற் கண்டேம்போல் அவர்பால் யாம் நாண முடையமா யிருக்கின்றேம்; அவ்வாறிருக்கப், பொருள்வேட் கையால் எந்நாளும் ஆடவர் பலர் மார்புகளைச் சற்றும் நாணின்றிக் கூடியொழுகும் பரத்தையர், தமதுள்ளத்தில் என்ன தான் உடையராயிருக்கின்றனரோ !

386. உள்ளத் துணர்வுடையான் ஓதியநூ லற்றால்
வள்ளன்மை பூண்டான்கண் ஒண்பொருள்—தெள்ளிய
ஆண்மகன் கையில் அயில்வா ளனைத்தரோ
நாணுடையாள் பெற்ற நலம்.

உள்ளத்தில் இயற்கை நுண்ணுணர்வுடையா னொருவன் கற்ற கல்வியறிவை யொத்ததாயும், இயற்கையிற் கொடைக் குணமுடையா னொருவனிடத்து மாட்சிமைப்படுகின்ற ஒள்ளிய செல்வத்தை ஒத்ததாயும், வாட் பயிற்சியில் தெளிவடைந்த வீர மிக்க ஆடவனொருவனது கையில் விளங்கும் கூரிய வாட்படையை ஒத்ததாயும் இருக்கின்றது, நாண முதலிய பெண்ணீர்மைகளுடைய கற்புடைப் பெண்ணொருத்தி பெற்ற அழகு முதலிய நலங்களென்க.

387. கருங்கொள்ளும் செங்கொள்ளும் தூணிப் பதக்கென்
றொருங்கொப்பக் கொண்டானும் ஊரன்—ஒருங்கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்பன் நீராடாது
என்னையும் தோய வரும்.

மருதநிலத்து ஊரில் இருந்துகொண்டே அவ்வூரானொருவன் தாழ்ந்த கருங்கொள்ளையும் உயர்ந்த செங்கொள்ளையும் ஒரே விலைக்குத் தூணிப் பதக்கு (ஆறு மரக்கால்) என்று ஒரே அளவாய் ஒன்றாய் வாங்கினானும். அதுபோலப் பெண்மையியல்பில் என்னோடு ஒருங்கொவ்வாத நல்ல நெற்றியையுடைய பரத்தையரை மருவிய மலைபோலும் பெரிய மார்பினையுடைய என் கணவன், நீராடுதலுஞ் செய்யாது என்னையும் மருவ வருகின்றனன். (ஈதென்ன முறை!)

388. கொடியவை கூறாதி பாண ! நீ கூறின்
அடிபைய இட்டொதுங்கிச் சென்று—துடியின்
இடக்கண் அனையம் யாம் ஊரற் கதனால்
வலக்கண் அனையார்க் குரை.

இசைப்பாணனே! கேட்க இன்னாதனவான தலைவனைப் பற்றிய நயவுரைகளை எம்மிடங் கூறாதே; நீ கூறுவதானால் ஊரனான எம் தலைவற்கு யாம் உடுக்கையின் இடப்பக்கத்தை யொத்துப் பயன்படாமலிருக்கின்றேமாதலால், மெல்ல அடி யிட்டு நீங்கிப்போய் அவ்வுடுக்கையின் வலப்பக்கம்போற் பயன் படுதலுடைய பரத்தையர்க்குக் கூறு.

**389.** சாய்ப்பறிக்க நீர்திகழுந் தண்வய லூரன்மீ
தீப்பறக்க நொந்தேனும் யானேமன்—தீப்பறக்கத்
தாக்கி முலைபொருத தண்சாந் தணியகலம்
நோக்கி யிருந்தேனும் யான்.

கோரைகளைப் பறித்துவிடுதலால் நீர் நன்கு விளங்கித் தெரிகின்ற குளிர்ந்த வயல்களையுடைய ஊரனாகிய என் தலை வன்மேல் முன்னெல்லாம் ஓர் ஈ வந்து உட்கார அது பொறாமல் வருந்தியவளும் யானே; தீப்பொறி பறக்கப் பரத்தையர் தம் கொங்கைகளால் நெருக்கிக் கலவிசெய்த குளிர்ந்த சந்தன மணிந்த அவனது அகன்ற மார்பினை இப்போது பார்த்துக் கொண்டு பொறுத்திருந்தவளும் யானேகாண்.

**390.** அரும்பவிழ் தாரினன் எம்அருளும் என்று
பெரும்பொய் உரையாதி பாண—கரும்பின்
கடைக்கண் அனையம்நாம் ஊரற் கதனால்
இடைக்கண் அனையார்க் குரை.

அரும்புகள் போதாகி மலரும் மாலையையணிந்த எம் தலை வன் எமக்குத் தலையளிசெய்ய வருகின்றனன் என்று பெரிய தொரு பொய்ம்மொழியைப், பாண, எம்மிடம் மொழியாதே; ஊரனாகிய எம் தலைவற்கு யாம் கரும்பின் நுனிக்கணுக்கள் போலச் சுவையிலேமா யிருக்கின்றனமாதலால் அதன் நடுக் கணுக்களையொப்ப அவற்குச் சுவைமிக உடையரான பரத்தை யரிடம் அதனைச் சொல்.

# மூன்றாவது : காமத்துப் பால்

இது, காமவின்பத்தின் இயல்பை யுணர்த்தும் பகுதி. துய்த்தற்குரியனவாக நூல்களால் உணர்த்தப்படும் பொருள்கள் அற முதலிய மூன்றுமேயாகலின், காமத்துப்பால் மூன்றாம் பகுதியாக இறுதியில் நின்றது.

## 40-ம் அதி. காமநுதலியல்

இன்பத்தினியல்பு நவலும் அதிகாரமென்பது பொருள். ஒத்த தலைவனுந் தலைவியும் இயற்கையன்பினால் ஈர்ப்புண்டு தம் முட் கூடுங்கால் அவருள்ளத்திற் றோன்றும் உணர்வு நிலையாகிய இன்பம் மேலுமேலு மாட்சிமைப்படுதற்கான வாயில்கள் இவ் வதிகாரத்தில் விளக்கப்படுகின்றன.

ஊடல் நீங்கிக் கூடிய தலைமகற்குத் தோழி
உவகை மிக்குக் கூறியது.

391. முயங்காக்கால் பாயும் பசலைமற் றூடி
உயங்காக்கால் உப்பின்றும் காமம்—வயங்கோதம்
நில்லாத் திரையலைக்கும் நீள்கழித் தண்சேர்ப்ப!
புல்லாப் புலப்பதோர் ஆறு.

தலைவியை மருவாவிடின் அவளுடம்பிற் பசலை நிறம் பரவும், ஆனால் அவள் இடையிடையே ஊடல்கொண்டு உள்ளம் மெலியாவிடின் காமவுணர்வு சுவையில்லாததாகும்; ஆதலால், விளங்குகின்ற கடலானது ஒரு நிலையிலும் நில்லாத தன் அலைகளால் அலைத்தெதிர்க்கின்ற நீண்ட கழியினையுடைய குளிர்ந்த துறைவனே! காமத்திற்கு ஊடிப் புணர்வது ஓர் இனிய நெறியாகும்.

## பருவங் கண்டு ஆற்ருளாய தலைவி தன்னுள் இரங்கிக் கூறியது.

392. தம்அமர் காதலர் தார்சூழ் அணியகலம்
விம்ம முயங்குந் துணையில்லார்க்—கிம்மெனப்
பெய்ய எழிலி முழங்குந் திசையெல்லாம்
நெய்தல் அறைந்தன்ன நீர்த்து.

*தம்மால் அன்பு செய்யப்படுங் காதலரது மலர்மாலை யணிந்த அழகிய ஆகத்தைக் கொங்கைகள் பூரிக்க மருவி யின்புறுமோர் ஆதரவில்லாத எம்போலும் பிரிந்த மகளிர்க்கு, மேகம் இம்மென்று மழைபொழிய இடித்தொலிக்குந் திசை யெல்லாம் சாப்பறை அறைந்தாற் போன்ற தன்மையுடை யது.*

## தலைமகள் செலவு உடம்படாமையைத் தலைமகற்குத் தோழி கூறியது

393. கம்மஞ்செய் மாக்கள் கருவி ஒடுக்கிய
மம்மர்கொள் மாலை மலராய்ந்து பூத்தொடுப்பாள்
கைம்மாலை இட்டுக் கலுழ்ந்தாள் துணையில்லார்க்
கிம்மாலை என்செய்வ தென்று.

*கம்மத் தொழில் செய்கின்ற மக்கள் தொழிலை நிறுத்தித் தம் கருவிகளை வறக்கட்டிச் சென்ற மயக்கஞ் செய்யும் இம் மாலைப் பொழுதில் மலர்களை ஆராய்ந்து மாலை தொடுப்பவள், நின் பிரிவு கேட்டுத் தனது கையிலிருந்த மாலையை நழுவ விட்டுத், தலைவராகிய துணையைப் பிரிந்த மகளிர்க்கு இந்த மலர்மாலை என்ன பயன் தருவதென்று சொல்லி அழுவாளா யினள்.*

வினைமுற்றி மீளுந் தலைமகன் தன்னுள் இரங்கிக் கூறியது.

394. செல்சுடர் நோக்கிச் சிதரரிக்கண் கொண்டநீர்
மெல்விரல் ஊழ்தெறியா விம்மித்தன்—மெல்விரலின்
நாள்வைத்து நங்குற்றம் எண்ணுங்கொல் அந்தோதன்
தோள்வைத் தணைமேற் கிடந்து.

கதிரவன் மறையும் மாலைப்போது நோக்கிச், சிதறிய செவ்வரிபரந்த கண்கள் ஆற்றாமையால் நிறைத்த நீரைத் தனது மெல்லிய விரலால் முறையே எடுத்தெறிந்துகொண்டு அழுது, படுக்கையின்மேல் தன் கையையே தலையணையாக வைத்து ஒருக்கணித்துக் கிடந்து, மெலிந்துபோன தன் விரல்களினால் பிறந்த நாளைக் கணக்கிட்டுக், காலத்தில் இல்லஞ்சேராத நமது குற்றத்தை நினைத்து ஆ, இந்நேரம் நம் துணைவி வருந்துமோ ?

தலைவியின் நலத்தைத் தலைமகன் தன் பாங்கற்கு வியந்து கூறியது.

395. கண்கயல் என்னுங் கருத்தினால் காதலி
பின்சென்ற தம்ம சிறுசிரல்—பின்சென்றும்
ஊக்கி யெழுந்தும் எறிகல்லா ஒண்புருவம்
கோட்டிய வில்வாக் கறிந்து.

கண்களைக் கயல்மீன் என்று கருதிய கருத்தினால் அதனைக் குத்தித் தின்னும்பொருட்டுச் சிச்சிலி என்னுஞ் சிறிய மீன்குத்திப் பறவை ஆ, நம் காதலியின் பின்னே சென்றது; ஆனால் அவ்வாறு பின் சென்றும் குத்துதற்கு முனைந்தும், அவளது ஒள்ளிய புருவம், வளைத்த வில்லின் வளைவென்றறிந்து குத்தாதாயிற்று.

## செவிலித்தாய் தன் மகள் உடன்போக்கிற் பிரிந்து சென்ற சுரத்தருமை நினைந்து இரங்கியது

396. அரக்காம்பல் நாறும்வாய் அம்மருங்கிற் கன்னோ
பரற்கானம் ஆற்றின கொல்லோ—அரக்கார்ந்த
பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையெனவென்
றஞ்சிப்பின் வாங்கும் அடி.

*செந்நிறம் பொருந்திய ஆம்பல் மலரைப்போல் நறுமணத்தோடு விளங்கும் வாயையும் அழகிய இடையையு முடைய நம் புதல்விக்கு, அழகுக்காகச் செந்நிறமிக்க செம்பஞ்சிக் குழம்பைத் தடவினாலும் 'மெதுவாக, மெதுவாக' என்று அஞ்சிக் கூறிப் பின் இழுத்துக்கொள்ளும் அத்துணை மெல்லிய பாதங்கள் ஆ, தலைவனோடு உடன்போக்கிற் பிரிந்த இப்போது பரற்கற்களையுடைய கானத்திற் செல்லப் பொறுத்தனவோ ?*

## பிரிவாற்றாத தலைமகளின் நிலைமையைத் தோழி தலைமகன் கேட்பக் கூறியது

397. ஓலைக் கணக்கர் ஒலியடங்கும் புன்செக்கர்
மாலைப் பொழுதில் மணந்தார் பிரிவுள்ளி
மாலை பரிந்திட் டழுதாள் வனமுலைமேற்
கோலஞ்செய் சாந்தந் திமிர்ந்து.

*ஏடுகளிற் கணக்கெழுதுவாரது அலுவற்றொடர்பான ஆரவாரம் அடங்குகின்ற புல்லிய சிவந்த அந்திப் பொழுதில், தலைவி தன்னை மணந்த கணவரது பிரிவை நினைத்துத் தான் சூடியிருந்த மலர் மாலையை அறுத்தெறிந்து தன் அழகிய கொங்கையின்மேல் தொய்யிலெழுதி அழகு செய்திருந்த சந்தனத்தையுங் கலைத்துதிர்த்து அழுவாளாயினள்.*

### உடன்போக்கிற் கிசைந்த தலைவி தோழிக்குக் கூறியது

398. கடக்கருங் கானத்துக் காளைபின் நாளை
நடக்கவும் வல்லையோ என்றி—சுடர்த்தொடீஇ
பெற்றா னொருவன் பெருங்குதிரை அந்நிலையே
கற்றான் அஃதூரு மாறு.

ஒளிமிக்க வளையலணிந்த தோழீ! கடந்து செல்லுதற் கருமையான காட்டின்கண் காளையாகிய தலைவன் பின்னே நாளை நீ உடன் போக்கில் நடந்துபோகவும் வல்லமையுடை யையோ என்று என்னை நோக்கிக் கூறுகின்றனை; பெருமை மிக்க குதிரை யொன்றனைப் பெற்றவனொருவன் அந்நிலையே அதனை ஏறியூரும் நெறியைக் கற்றவனாவன்காண்.

### மகட்போக்கிய தாய் வருந்திக் கூறியது

399. முலைக்கண்ணும் முத்தும் முழுமெய்யும் புல்லும்
இலக்கணம் யாதும் அறியேன்—கலைக்கணம்
வேங்கை வெரூஉம் நெறிசெலிய போலுமென்
பூம்பாவை செய்த குறி.

நேற்று என் மகள் தன்னுடைய முலைக்காம்பும் முத்து வடமும் அழுந்தும்படி என் உடம்பு முழுமையும் அணைத்துக் கொண்ட உண்மையை யான் சிறிதும் அறியாமற் போனேன்; அழகிய பாவைபோல்வாளான என்மகள் அவ்வாறு செய்த அடையாளம், மான் கூட்டங்கள் வேங்கைப் புலிக்கு அஞ்சி யோடுங் காட்டு நெறியில் இன்று பிரிந்து செல்லுதற்குப் போலும்!

## தலைவன் சென்ற சுரத்தருமை நினைந்து தலைவி வருந்தியது

400. கண்மூன் றுடையானும் காக்கையும் பையரவும்
என்ஈன்ற யாயும் பிழைத்ததென்—பொன்ஈன்ற
கோங்கரும் பன்ன முலையாய் ! பொருள்வயிற்
பாங்கனார் சென்ற நெறி.

பொன்போலுஞ் சுணங்கினை மேலெழச்செய்த கோங்கி னரும்பு போன்ற கொங்கையினையுடைய தோழீ! கண்கள் மூன்றுடைய சிவபிரானும், காக்கையும், படத்தையுடைய இராகுவென்னும் பாம்பும், என்னை ஈன்று வளர்த்த தாயும் எனக்குப் பிழை செய்தது யாது? யாது மில்லையே; நான் வருந்துவதற்கு ஏது, பொருள் காரணமாக நந் தலைவர் பிரிந்து சென்ற காட்டு நெறியினது கடுமையேயாகும். (பிரிவாற்றாது தலைவி வருந்துதலறிந்து தோழி, காமவேட்கையை மிகுவிக் குங் காமனையும் குயிலையும் நிலவையும் பெண் பிறவியையும் வெறுத்துக் காமனை மீண்டும் உயிர்ப்பித்த சிவபிரானையும், குயிற்குஞ்சை வளர்த்துவிட்ட காக்கையையும், விழுங்கிய நிலவை மீண்டும் உமிழ்ந்த அரவையும், ஈன்று வளர்த்த தாயையும் பழித்தமையின், தலைவி இங்ஙனங் கூறினாள்.)

நாலடியார் பொழிப்புரை
முற்றும்.

# பாட்டு முதற்குறிப்பு அகராதி


| பாட்டு | பக்கம் |
|---|---|
| அகத்தாரே | 13 |
| அக்கேபோ | 49 |
| அங்கண்-அக | 60 |
| அங்கண்-அம | 146 |
| அங்கோட் | 146 |
| அச்சம் | 33 |
| அடுக்கல்மலை | 79 |
| அடைந்தார்ப் | 68 |
| அத்திட்ட | 110 |
| அம்பலயவெலடு | 35 |
| அம்புமழுவு | 36 |
| அரக்காம்ப | 157 |
| அருகல | 102 |
| அருப்பவிழ் | 153 |
| அரும்பெறல் | 14 |
| அரும்பெறற் | 149 |
| அருளின் அற | 126 |
| அலகுசால் | 55 |
| அவமதிப்பு | 64 |
| அவ்வியமில் | 126 |
| அழல்மண்டு | 79 |
| அள்ளிக்கொ | 102 |
| அறம்புகழ் | 33 |
| அறிமின் அற | 68 |
| அறியாப்பரு | 68 |
| அறியாரும் | 43 |
| அறிவதறிக் | 30 |
| அறுசுவை | 2 |
| ஆகாதெனி | 132 |
| ஆடுகோடாகி | 75 |
| ஆணமில் | 146 |
| ஆமாபோ | 148 |
| ஆர்த்த அறிவின | 137 |
| ஆர்த்த பொறிய | 113 |
| ஆவாம்நாம் | 14 |
| ஆவேறுருவின | 47 |
| ஆள்பார்த் | 9 |
| ஆற்றுந்துணை | 77 |
| ஆன்படுநெய் | 93 |
| இசைந்த | 73 |
| இசையாதெ | 76 |
| இசையாவொரு | 44 |
| இசையுமெனி | 60 |
| இடம்பட | 46 |
| இடும்பைகூர் | 42 |
| இட்டாற்று | 112 |
| இமைக்குமள | 126 |
| இம்மியரிசி | 38 |
| இம்மைபயக் | 52 |
| இம்மையும் | 115 |
| இரவலர்கன் | 109 |
| இருக்கையெ | 57 |
| இரும்பார்க்குங் | 48 |
| இலங்குநீர் | 88 |
| இல்லம்இளமை | 22 |
| இல்லாமை | 118 |
| இல்லாவிடத் | 37 |
| இழித்தக்க | 118 |
| இழைத்தகா | 3 |
| இளையான் | 27 |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| இறப்பச்சிறி | 39 | உள்ளத்துணர் | 152 |
| இறப்பநினை | 69 | உள்ளம் | 149 |
| இறப்பவே | 87 | உறக்கும் | 16 |
| இற்சார்வி | 72 | உறற்பால | 41 |
| இற்பிறப்பில் | 125 | உறுபுலி | 76 |
| இற்பிறப்பெ | 83 | உறுபுனல்தந் | 73 |
| இனநன்மை | 58 | உறைப்பரும் | 72 |
| இனியார்தம் | 144 | ஊக்கித்தாம் | 23 |
| இன்பம் | 32 | ஊரங்கணநீ | 69 |
| இன்றுதுமிந் | 140 | ஊருள்எழுந் | 36 |
| இன்றுகொல் | 15 | ஊறியுவர்த் | 19 |
| இன்னாஇனைய | 80 | ஊறுசெய் | 148 |
| இன்று-இனி | 31 | எஞ்ஞான்று | 151 |
| இன்று-விட | 88 | எத்துணையா | 106 |
| இன்று-விடு | 88 | எந்நிலத்து | 95 |
| இன்றுவியைக | 119 | எம்மையறி | 65 |
| ஈட்டலும் | 109 | எய்திபிரு | 127 |
| ஈண்டுநீர் | 43 | எறிநீர்ப் | 107 |
| ஈதலிசையா | 71 | எறியென் | 142 |
| ஈனமாயில் | 77 | எற்றென்று | 59 |
| உடாஅது | 5 | எனக்குத்தா | 7 |
| உடுக்கை | 56 | எனைத்தென | 107 |
| உடைப்பெருஞ் | 144 | என்பாய்உகினு | 114 |
| உண்டாயாரிவ | 63 | என்றும்புதி | 120 |
| உணர உணரு | 96 | என்றானு | 3 |
| உண்டாய | 111 | என்னைமற் | 129 |
| உண்ணுண்ஒளி | 4 | ஏட்டைப்பரு | 140 |
| உபகாரம் | 28 | ஏதிலார்செய் | 89 |
| உயிர்போயார் | 20 | ஏமாந்தபோழ் | 148 |
| உருவிற்கமை | 93 | ஏற்றகை | 39 |
| உருவும்இளமை | 41 | ஒண்கதிர் | 69 |
| உலகறியத் | 80 | ஒருநன்றி | 140 |
| உளநாள்சில | 127 | ஒருநீர்ப் | 92 |
| உள்கூர்பசி | 111 | ஒருபுடை | 59 |
| உள்ளத்தா | 50 | ஒருவரொருவ | 120 |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| ஓக்கியவொள் | 51 | கல்லோங்கு | 110 |
| ஓதியும்ஓதா | 105 | கல்விகரையில | 53 |
| ஓலைக்கணக்க | 157 | கழிந்தார்இடு | 20 |
| கடகஞ்செறி | 113 | கழுகிருட் | 85 |
| கடக்கருங் | 158 | களர்நிலத்து | 53 |
| கடமாதொ | 117 | கள்ளார்கள் | 62 |
| கடல்சார்ந்து | 95 | கற்றதூஉ | 123 |
| கடித்துக் | 62 | கற்றறிந்த | 100 |
| கடிப்பிடு | 40 | கற்றனவுங் | 133 |
| கடியெனக் | 142 | கற்றார்உரை | 101 |
| கடுக்கியொரு | 74 | கனைகடல்தண் | 55 |
| கடுக்கெனச் | 136 | காரணின் | 34 |
| கடையாயார் | 84 | காதலாற்சொல் | 30 |
| கடையெலாங் | 116 | காலாடுபோ | 45 |
| கட்கினியாள் | 151 | காவாதொரு | 26 |
| கணம்கொண்டு | 11 | காழாயகொ | 134 |
| கணமலை | 138 | குஞ்சிஅழகுங் | 52 |
| கண்கயலென் | 156 | குடநீரட்டுண் | 150 |
| கண் மூன் | 158 | குடருங்கொ | 19 |
| கப்பிகடவதாக் | 134 | குலந்தவங் | 130 |
| கம்மஞ்செய் | 155 | குற்றமுமே | 90 |
| கரவாதகின் | 119 | கூர்த்துநாய் | 28 |
| கருங்கொள் | 152 | கேளாதேவந்து | 13 |
| கருத்துணர்ந்து | 82 | கோடியவை | 152 |
| கருமமும் | 97 | கொடுத்தலும் | 107 |
| கருமம் வரிசை | 97 | கொய்புல் | 137 |
| கரும்பாட்டிக் | 15 | கொலைஞர்உலை | 130 |
| கல்நனிநல்ல | 131 | கொல்லையிரு | 70 |
| கல்லாக்கழிப் | 143 | கொன்னே | 23 |
| கல்லாதுநீண்ட | 99 | கோடேந்த | 138 |
| கல்லாதுபோ | 67 | கோட்டுப்பூ | 84 |
| கல்லாமை | 57 | கோதையருவி | 29 |
| கல்லாரேயா | 55 | கோளாற்றக் | 75 |
| கல்எறிந் | 27 | சக்கரச்செல் | 135 |
| கல்லென்று | 98 | சாய்ப்பறிக்க | 153 |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| சான்றாண்மை | 56 | தான்கெடி | 32 |
| சான்றோரென | 50 | திருத்தன்னை | 119 |
| சிதலைதினப் | 77 | திருமதுகை | 113 |
| சிறுகாபெருகா | 43 | தினைத்துணை | 42 |
| சிறுகாலையே | 128 | தினையனைத் | 135 |
| சீரியார் | 91 | தீங்கரும் | 78 |
| செந்நெல்லா | 144 | துகள்தீர் | 2 |
| செம்மை | 34 | துக்கத்துள் | 48 |
| செய்கையழி | 58 | துய்த்துக் | 106 |
| செய்யாத | 92 | துன்பமே | 24 |
| செல்சுடர் | 156 | துன்பம்பல | 22 |
| செல்லாவிட | 59 | தெண்ணீர்க் | 18 |
| செல்வர்யா | 4 | தெரியத்தெரி | 66 |
| செல்வுழிக் | 61 | தெளிவிலார் | 85 |
| செழும்பெரும் | 138 | தோணியியக் | 54 |
| செறிப்பில் | 90 | தோற்போர் | 17 |
| செறுத்தோ | 87 | தோற்றம்சால் | 4 |
| சென்றேறிஎப | 10 | நச்சியார்க் | 116 |
| சொல்தளர்ந்து | 6 | நடுக்கற்றுத் | 37 |
| சொற்றாற்றுக் | 122 | நடுவூருள் | 38 |
| தக்காருந் | 44 | நட்டார்க்கும் | 105 |
| தக்கோலந் | 18 | நட்புநார் | 6 |
| தங்கண்மர | 132 | நம்மாலே | 117 |
| தண்டாச் | 25 | நயவார்கண் | 104 |
| தமரென்று | 89 | நரம்பெழுந்து | 60 |
| தம்மமர்காத | 155 | நரைவரும் | 5 |
| தம்மையிகழ்ந் | 24 | நல்லகுல | 76 |
| தம்மையிகழ்வா | 46 | நல்லர்பெரி | 116 |
| தலையேதவ | 143 | நல்லவைசெய் | 57 |
| தவலருந் | 54 | நல்லவைநா | 132 |
| தளிர்மேலே | 139 | நல்லார் எனத் | 86 |
| தனதாகத் | 108 | நல்லார்நயவ | 103 |
| தாம்செய்வினை | 47 | நல்லாவின் | 45 |
| தாமேயுமின் | 128 | நளிகடல்தண்...நல் | 94 |
| தாழாத்தளரா | 6 | நளிகடல்தண்...நா | 66 |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| நறுமலர்த் | 82 | பன்னுனுஞ் | 63 |
| நன்னிலைக் | 96 | பாடமே | 123 |
| நரப்பாடஞ் | 122 | பாம்பிற்கொரு | 147 |
| நாய்க்காற் | 85 | பாலாற்கழீஇ | 100 |
| நார்த்தொடுத் | 11 | பாலோடளாய | 70 |
| நாலாறுமா | 150 | பாவமுமே | 115 |
| நாள்வாய்ப் | 81 | பிறந்தகுலம் | 111 |
| நாருத்தகடே | 103 | பிறர்மறை | 62 |
| நிலநலத்தா | 70 | புக்கவிடத் | 34 |
| நிலையாமை | 21 | புணர்கடல் | 103 |
| நின்றனநின் | 3 | புதுப்புன | 145 |
| நீரினும்நுண் | 110 | புத்தகமே | 124 |
| நீருட்பிறந்து | 141 | புல்லாப்புன் | 99 |
| நீர்மையே | 112 | புல்லாஎழு | 61 |
| நுண்ணுணர்வின | 91 | புல்நுனி | 12 |
| நுண்ணுணர்வின் | 98 | புறத்துத் | 120 |
| நெடுங்கால | 28 | பெயற்பால் | 39 |
| நெருப்பழற் | 49 | பெரியவர் | 49 |
| நேரல்லார் | 29 | பெரியார் பெருநட் | 31 |
| நேர்த்து | 26 | பெரியார் பெருமை | 67 |
| பகைவர்பணி | 94 | பெருகுவது | 91 |
| படுமழை | 12 | பெருங்கட | 130 |
| பண்டமறி | 20 | பெருநடை | 134 |
| பரவாவெளிப் | 35 | பெருமுத்த | 78 |
| பராஅரைப் | 96 | பெருவரைநாட | 73 |
| பருவம்எனை | 8 | பெறுவது | 124 |
| பலநாளும் | 84 | பெறுவதொன் | 131 |
| பல்லார் அறியப் | 35 | பொத்தநூற் | 147 |
| பல்லாவுள் | 40 | பொழிந்தினிது | 101 |
| பல்லான்ற...பா | 98 | பொழிப்பகல | 125 |
| பல்லான்ற...வீ | 42 | பொறுப்பரென் | 64 |
| பழமைகந்தாகப் | 121 | பொற்கலத்துப் | 81 |
| பழையரிவ | 136 | பொற்கலத்தூ | 135 |
| பனிபடு | 8 | பொன்னிறச் | 105 |
| பன்றிக்கூழ் | 100 | பொன்னே | 64 |

From: K.K.NAG


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| மக்களாலாய | 15 | மெல்லியநல் | 74 |
| மடிதிரை | 87 | மைதீர்பசும் | 13[illegible] |
| மதித்திறப் | 25 | யாஅர்உலகத் | 47 |
| மரீஇப்பல | 86 | யாஅர்ஒருவ | 50 |
| மலைநலமுள் | 139 | யாக்கையை | 12 |
| மலைமிசைத் | 9 | யாமாயினெம் | 114 |
| மல்குதிரைய | 102 | யானை அனைய | 83 |
| மல்லல்மா | 115 | யானையெரு | 2 |
| மழை திளைக்கு | 141 | வடுவிலா | 45 |
| மறுமைக்கு | 72 | வயாவும் | 79 |
| மறுமையும் | 38 | வலவைகளல் | 104 |
| மற்றறிவாம் | 8 | வழங்காத | 108 |
| மனத்தால் | 71 | வழுக்கெனை | 142 |
| மனைப்பாசங் | 51 | வளம்பட | 41 |
| மன்றங்கறங்க | 10 | வற்றிமற் | 32 |
| மன்னர்திருவு | 66 | வாழ்நாட்கு | 10 |
| மாக்கேழ்மட | 17 | வான்இடுவில் | 1 |
| மாண்டகுண | 23 | விரிநிற | 65 |
| மாற்றாராய் | 27 | விருப்பிலா | 82 |
| மான அருங்கலம் | 16 | விழைந்தொரு | 133 |
| முட்டிகை | 81 | விளக்குப் | 21 |
| முட்டுற்ற | 93 | விளக்கொளி | 145 |
| முயங்காக்காற் | 154 | வினைப்பயன் | 14 |
| முலைக்கண்ணு | 158 | வெறி அயர் | 7 |
| முல்லைமுகை | 19 | வெறுமையிட | 129 |
| முற்றற்சிறு | 92 | வென்றிப் | 123 |
| முற்றுத்துந் | 74 | வேம்பின் இலை | 95 |
| முன்னரே | 37 | வேற்றுமை | 30 |
| மூப்புமேல் | 127 | வைகலும் | 16 |
| மெய்ஞ்ஞானக் | 121 | வைப்புழிக் | 53 |
| மெய்வாய்கண் | 24 | | |


—